விடுதலைப்புலிகள்

குரல் – 112 கார்த்திகை, 2003 அன்பளிப்பு – 10/=

● சமாதானத்தை கழுமரத்திற்கு... 03
● சமாதானத்தின் எதிர்காலமும்... 04
● சிங்கள-தமிழ் கலைக்கூடல் 14
● விதைநிலங்களும் நினைவு... 05
● விடுதலைக்கானதே விதைப்பு 06
● அவன் நிறையவே சாதிக்க... 07

# தமிழீழம் என்ற இறுதிமார்க்கத்திற்கு தள்ளிவிடும்புறநிலையை உருவாக்காதீர்

## சிங்கள அரசியல் தலைமைகளிடம் தேசியத்தலைவர் வேண்டுகோள்

தமிழர்களைப் பகடைக்காய்களாகப் பாவித்து ஆடப்படும் சதுரங்க விளையாட்டின் எதிர் விளைவாக எத்தனையோ சமரச முயற்சிகள் பாழடிக்கப்பட்டன. எத்தனையோ பேச்சுவார்த்தைகள் முறிந்து போயின. சிங்களப் பேரினவாதத்தின் சிலந்தி வலைக்குள் சிக்கி தமிழரின் வாழ்வும் வளமும் சிதைந்து போவதை நாம் இனியும் அனுமதிக்க முடியாது. வன்முறையைத் துறந்து மென்முறைப் பாதையைத் தழுவிச் சமாசத்திற்கும் சமாதான முன்னெடுப்புக்களுக்கும் எம்மால் முடிந்தளவு முயற்சித்து வருகின்றோம். இதனை உலக நாடுகளனைத்தும் நன்கறியும். எமது மக்களின் உரிமைகளை மறுத்து சமரசத் தீர்வுகளை எதிர்த்து ஒடுக்குமுறையைத் தொடருவதனால் தமிழீழத் தனியரசை கட்டியெழுப்பும் இறுதி மார்க்கத்திற்கு தமிழர்களைத் தள்ளிவிடும் புறநிலையை உருவாக்கிவிட வேண்டாமென நாம் சிங்கள அரசியல்த் தலைமைகளுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

என்று தமிழர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க மாவீரர் நாளன்று, தெற்கின் அரசியல்க் குழப்ப நிலையில், ஆர்வத்துடன் அனைத்துத் தரப்பினராலும் கவனம்பெற்ற தனது, மாவீரர்நாள் உரையில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அவ்வுரையின் முழுவடிவத்தையும் இங்கே தருகின்றோம் :

எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய தமிழீழ மக்களே,

இன்று மாவீரர் நாள்.

இன்றைய நாள், வணக்கத்திற்குரிய புனித நாள். இன்று, தமிழீழ தேசம் சுதந்திர தாகம் கொண்டு எழுச்சி கொள்ளும் மகத்தான நாள். எமது மண்ணின் விடிவிற்காகவும் எமது மக்களின் விடுதலைக்காகவும் தமது இன்னுயிரை ஈகஞ்செய்த எம்மினிய வீரர்களை எமது இதயக் கோவில்களில் நாம் நெஞ்சுருகிப் பூசிக்கும் திருநாள்.

அன்றைய தமிழர் இராச்சியம் வீழ்ச்சியடைந்து, பல நூறு ஆண்டுகள் அந்நியருக்கும் அயலவருக்கும் அடிமைப்பட்டு வாழ்ந்த தமிழீழ தேசம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது. இன்று எமது தாயகத்தின் பெருநிலப் பரப்பில் எமது தன்னாட்சி நடைபெறுகிறது. ஒரு நீண்ட, துயரமான, கொடூரமான வரலாற்று இடைவெளியின் பின்பு, மீண்டும் தமிழினத்தின் வீர எழுச்சிச் சின்னமாக, தமிழர் மண்ணிற் புலிக்கொடி பட்டொளிவீசிப் பறக்கிறது. இந்த மாபெரும் வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தித் தந்தவர்கள் எமது மாவீரர்கள் என்பதை நான் பெருமிதத்துடன் இன்று கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

எமது தேசிய விடுதலைப் போராட்டம் என்றுமில்லாதவாறு இன்று உலகமயமாகியுள்ளது. பல தசாப்தங்களாகப் பாராமுகம் காட்டி வந்த உலகம் இன்று தனது முழுக் கவனத்தையும் எமது போராட்டத்தின் மீது திருப்பியுள்ளது. ஒரு பலம் வாய்ந்த விடுதலைப் போராட்ட சக்தியாக இன்று உலகரங்கில் நாம் முன்னணி வகித்து நிற்கின்றோம். தர்மத்தின் வழி தழுவி, ஒரு சத்திய இலட்சியத்திற்காகச் செய்யப்படும் தியாகங்கள் என்றுமே வீண்போவதில்லை.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

மாவீரர் நாளன்று தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் உரையாற்றியபோது...



தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# தலைவரின் மாவீரர்நாள் உரையும் இன்றைய அரசியல் யதார்த்தமும்

தமிழர் நிலத்தின் பண்பாட்டு நிகழ்ச்சிகளில் ஒன்றாகி-தமிழ்மக்களின் வாழ்வுடன் சங்கமித்துவிட்ட மாவீரர்நாளை மக்கள் உணர்வெழுச்சியுடன் கொண்டாடியுள்ளனர். தாயக விடுதலைக்காக களமாடி வீரச்சாவெய்திய அந்த மாவீரர்களை மக்கள் நினைவு கூர்ந்து - அவர்களது தியாகங்களைப் போற்றிக் கௌரவித்துள்ளனர்.

மாவீரர்நாளின் அதிஉயர் நிகழ்வாகிய தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களது அரசியல் உரை இம்முறை, தமிழ்மக்களால் மட்டுமல்ல சிங்கள மக்களாலும், உலகசமூகத்தாலும் ஆவலுடன் எதிர் பார்க்கப்பட்டிருந்தது.

கொழும்பின் அரசியல் குழப்பங்கள் பற்றியும், சமாதான முயற்சிகளின் எதிர்காலம் பற்றியும், தமிழர் அரசியலின் நிலைப்பாடுபற்றியும் தலைவர் பிரபாகரன் அவர்கள் தெரிவிக்கவுள்ள கருத்துக்கள் பற்றி அறிய அனைவரும் ஆவலாக இருந்தனர்.

தமிழரின் அரசியல்போராட்டம் சர்வதேசமயப்பட்டு - புகழடைந்திருப்பதற்கும், கீர்த்திமிக்க விடுதலை அமைப்பாக புலிகள் இயக்கம் உலகளாவிய ரீதியில் நோக்கப்படுவதற்கும் காரணமாக அமைந்த மாவீரர்களையும் - ஒப்புவமையற்ற அவர்களது தியாகங்களையும் நினைவுகூர்ந்த தலைவர் அவர்கள் அந்த மாவீரர்களுக்கு பெருமிதத்துடன் புகழாரம் செய்தார்.

ஈழத்தமிழரின் வரலாற்றில் என்றுமில்லாதவாறு இன்று, தமிழ்மக்கள் ஒற்றுமை உணர்வுடனும், தேசியப்பற்றுடனும் புலிகள் இயக்கத்தின் தலைமையின் கீழ் அணிதிரண்டுள்ளனர். இந்த அரசியல் யதார்த்தத்தை உலகநாடுகளின் பிரதிநிதிகளும் ஊடகவியலாளர்களும் நேரடியாகக் கண்டுணர்ந்து உலகிற்குத் தெரிவித்துவருகின்றனர். தமிழரின் போராட்டத்தையும் புலிகள் இயக்கத்தையும் கொச்சைப்படுத்தும் வகையில் சிங்கள அரசு முன்னர் செய்துவந்த பொய்ப்பிரச்சாரங்கள் சர்வதேசஅளவில் அம்பலமாகிவருகின்றன. நியாயமான ஒரு அரசியல் இலட்சியத்திற்காக - நேர்மையான வழியில் மாபெரும் உயிர்த்தியாகங்களுடன் எமது விடுதலைப்போராட்டம் நடைபெற்றுவருகின்றது. இந்த விடுதலைப்போரில் எம் மண்ணின் மைந்தர்கள் புரிந்த வீரச்செயல்களும் - அற்புதமான உயிர்த்தியாகங்களும் உலகின் கவனத்தைப் பெற்றுவருகின்றன.

எமது விடுதலைப் போராட்டம் பற்றி சர்வதேச நாடுகள் முன்னர் சரியாகப் புரிந்துகொள்ளாவிட்டாலும் இப்பொழுது அந்த நிலமை மாறிவருகின்றது. இந்த மாற்றத்தைப் பற்றி தலைவர் தனது மாவீரர்நாள் உரையில் "உமது அளப்பரிய ஈகத்தின் ஆன்மீக சக்தி இன்று உலகத்தின் மனச்சாட்சியை. உலுப்பிவிட்டுள்ளது." என்று மிகச் சரியாகக் குறிப்பிட்டுள்ளார்.

சிங்களத்தின் தற்போதய அரசியற் குழப்பம் பற்றியும், அதன் இனவாதவரலாறு பற்றியும் தலைவர் அவர்கள் தனதுரையில் ஒரு தெளிவான - நீண்ட விளக்கத்தை அளித்துள்ளார்.

சந்திரிகா அம்மையார் தலைமையிலான சிங்களத்தின் எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டமுனைவது போல சமாதான முயற்சியைப் புலிகள் இயக்கம் எந்தவகையிலும் பிழையான முறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்றும், அதே சமயம், இந்த சமாதான சூழலின் பயனைச் சிங்களதேசம் மட்டுமே அனுபவிக்கின்றது என்ற கசப்பான உண்மையையும் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார். சமாதானச் சூழலில் புலிகள் இயக்கம் மட்டுமே உயிர் இழப்புகளையும் - பொருள் இழப்பையும் சந்தித்தது என்ற உண்மையையும் தலைவர் அவர்கள் வேதனையுடன் வெளிப்படுத்தியுள்ளார்.

சிங்களத்தின் தற்போதய அரசியல் குழப்பமும் - அதன் அதிகாரப்போட்டிகளும் தமிழ்மக்களுக்குப் புதிதல்ல. இது கடந்த அரைநூற்றாண்டுகளில் எத்தனையோ தடவைகள் நடந்துவிட்டன. இனப்பிரச்சனைத் தீர்வொன்றிற்கான முயற்சிகள் நடைபெறும் போதெல்லாம் இத்தகைய குழப்பங்களுடன் முயற்சிகள் முற்றுப் பெறுவது ஒரு வரலாற்று வழமை.

நேர்மையுடனும் - இதயசுத்தியுடனும் சமாதானப் பேச்சுக்களைப் புலிகள் இயக்கம் நடாத்திக்கொண்டிருக்க; மறுபுறத்தில், சிங்கள அரசோ ஒரு சர்வதேச வலைப்பின்னல் மூலம் புலிகள் இயக்கத்திற்கு ஆப்புவைக்க முயல்கின்றது. தேவையற்ற இந்தச் சதி முயற்சிகளால் பேச்சுவார்த்தைகளில் வெளிநாடுகளின் தலையீடுகள் அதிகரித்துள்ளன என்று தலைவர் அவர்கள் மறைமுகமாக எச்சரித்துள்ளார்.

இலங்கைத்தீவின் இறைமைபற்றி தம்பட்டம் அடிக்கும் சிங்களத்தலைவர்கள் உண்மையில் அதன் இறைமையை அன்னிய சக்திகளுக்குத் தாரைவார்க்கமுயலும் அசிங்கமான அரசியலை சிங்கள மக்கள் புரிந்துகொள்ளவேண்டிய காலம் வந்துவிட்டது. உள்நாட்டுப் பிரச்சனைகளை நேர்மையுடனும் - தேசப்பற்றுடனும் தீர்க்கும் வழிவகைகளை புறக்கணித்துவிட்டு ஏகாதிபத்திய சக்திகளின் உதவிகளை நாடிய பல நாடுகள், அப்பம் பிரித்த குரங்கின் கதைகளுக்கு இலக்காகி, மீளமுடியாச் சிக்கல்களுள் உழல்வதை உலகில் காண முடியும். அத்தகையதொரு வகைக்குள் இலங்கைத்தீவைச் சிக்கவைக்காது பாதுகாக்வேண்டிய பொறுப்பு சிங்கள தேசத்திடமே உள்ளது.

தமிழ - சிங்கள தேசிய இனச்சிக்கலை அரசியல் ரீதியாக தீர்த்துவைக்க வேண்டிய இறுதிச் சந்தர்ப்பம் இதுவாகத்தான் இருக்கமுடியும். இதைப்பயன்படுத்த புலிகள் இயக்கம் ஆயத்தமாகவே உள்ளது. ஆனால், சிங்கள அரசின் பக்கத்திலிருந்து பின்னடிப்புகளும் - இழுத்தடிப்புகளும் - குழப்பங்களுமே காணப்படுகின்றன.

அரைநூற்றாண்டுகாலமாகப் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சனைக்குக் குறுகியகாலத்தினுள் தீர்வு தேடுவது இயலாத காரியம். அதனால்தான் இறுதித்தீர்வு எட்டப்படும் வரை ஒரு இடைக்கால நிருவாக அமைப்பை இயக்க, புலிகள் இயக்கம் விரும்பியது. தமிழ்மக்களின் மீள்குடியேற்றம் - புனர்வாழ்வு - அபிவிருத்தி போன்ற முக்கிய வேலைத்திட்டங்களை இந்த அமைப்பு பூர்த்திசெய்ய முயற்சிக்கும். எனினும், சிங்கள அரசு சமர்ப்பித்த இடைக்கால வரைபுகள் எமக்கு திருப்தி அளிக்காததால் நாமே ஒரு திட்டத்தை வரைந்து அரசுக்கு வழங்கியுள்ளோம் என்று பேச்சுவார்த்தை பற்றி பல்வேறு செய்திகளை தலைவர் அவர்கள் தனது மாவீரர்நாள் உரைவாயிலாக எமது மக்களுக்கு விளக்கிக் கூறியுள்ளார்.

எனினும், கொழும்பு அரசியலில் ஏற்பட்ட அதிகாரப் போட்டியில் சமாதான முயற்சிகள் சிக்கிச் செயலிழந்து போயுள்ளன. ஆளுங்கட்சி தமிழருடன் சமரசம் பேசுவதும் அதை எதிர்க்கட்சி குழப்புவதும், பின்னர் எதிர்க்கட்சி ஆளுங்கட்சியாகியபின் சமாதானப்பேச்சை ஆரம்பிக்க மற்றய தரப்பு அதைக் குழப்புவதுமான இலங்கைத்தீவின் துயரவரலாற்றை தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேச்சுவார்த்தைக்கு அனுசணை வழங்க வந்த நோர்வே அரசே விரக்தியடைந்து - சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்தி வைக்குமளவுக்கு சிங்களதேசத்தின் அரசியல் வெறுப்பேற்றியுள்ளது.


ஆயினும், இம்முறை உலக சமூகம் இலங்கைத்தீவில் நடைபெறும் அரசியல் திருவிளையாடல்களை நேரடியாக அவதானித்தபடி உள்ளது. தமிழரை ஒடுக்க முனையும் சிங்களத்து அரசியலின் உண்மை முகத்தை சர்வதேசம் நேரடியாகக் காணத்தான் போகின்றது.

தலைவர் பிரபாகரன் மாவீரர் நாள் செய்தியில் தெரிவித்திருப்பதுபோல "சிங்கள இனவாத ஆளும் வர்க்கம் தொடர்ந்தும் எமது மக்களின் உரிமைகளை மறுத்து, சமரசத் தீர்வுகளை எதிர்த்து ஒடுக்குமுறையைத் தொடருமானால் எமது மக்களுக்கு உரித்தான சுயநிர்ணய உரிமையின் கீழ் நாம் பிரிந்து சென்று தனி அரசை கட்டியெழுப்புவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை." என்பதே யதார்த்தமாகும். எனினும், இத்தகையதொரு புறநிலைக்குள் எம்மைத் தள்ளிவிட வேண்டாம் என்றும் தலைவர் அவர்கள் சிங்கள தேசத்தைக் கோரியுள்ளார். இனி எல்லாமே சிங்கள தேசத்தின் கைகளில்தான்.

# சமாதானத்தை கழுமரத்திற்கு அழைக்கிறது கொழும்பு

கனிந்து வருவதாக நம்பப்பட்ட சமாதானம் மீண்டும் தடம் புரண்டு தன் பயணத்தைத் தொடர முடியாமல் இடை நடுவில் நிற்கிறது.

தமிழரின் ஆயுதப்போராட்ட வரலாற்றில் தமிழர்களைச் சமாதானத்தின் விரோதிகளாகவும் வன்முறை வடிவத்தின் பிரியர்களாகவும் காட்டிவந்த இலங்கையின் இருபெரும் அரசியல் கட்சிகளும் தமது ஆட்சி அதிகாரப் போட்டியால் சமாதானத்தைக் கழுமரத்திற்கு அழைத்துச் செல்லு கின்றனர்.



தமிழர்களோ ஏக்கப் பெருமூச்சுடன் சமாதானம் பலியிடப்படுவதைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதாயிற்று. இனப் பிரச்சனையின் வரலாற்றில் இரு கட்சி களாலுமே தமிழர்களுடன் செய்துகொள்ளப் படும் சமாதான முயற்சிகள் பலியிடப்படுவது தமிழர்களுக்குப் புதியதோ புதுமையோ அல்ல தான். ஆனால் அவையெல்லாம் தமிழர்கள் சர்வதேச அரங்கில் தமது பிரச்சனையைக் கொண்டு செல்ல முடியாத வலு வற்றிருந்த சூழலிலும் தமது அபிலாசைகளுக்குத் தாம் உரிமையுடையவர்கள் என்ற அங்கீகாரத்தைப் பெறமுடியாதி ருந்த சூழலிலும் நிகழ்ந்தவை.

> “சமாதானத்தைக் காப்பாற்றும் எந்த மாயமந்திரமும் விடுதலைப் புலிகளிடம் இல்லை. விடுதலைப்புலிகளால் தமிழ்மக்கள் சமாதானத்தையே விரும்புகின்றனர் என்று சர்வதேசத்திற்கு அறிவிக்க முடியுமே தவிர, தமிழ் மக்கள் சமாதானத்தையே நம்பி ஆகவேண்டும் என்று அறைகூவல் விடுக்க முடியாது. சமாதானத்திற்காக விடுதலைப்புலிகள் பொறுத்திருக்க முடியுமே தவிர, மீறப்படும் உடன்பாட்டையோ திணிக்கப்படும் யுத்தத்தையோ புலிகள் பொறுத்துக்கொள்ள முடியாது.”

ஆனால் இப்போது நிலைமை அதுவல்ல. தமிழர்கள் தமது பலத்தினால் தமது அரசியல் அபிலாசையைக் கோரும் வாய்ப்புள்ளவர்களாகச் சர்வதேசத்தில் தம்மைப் பிரசன்னப்படுத்திவிட்டனர். ஆகவே தான் சர்வதேச சமூகம் அக்கறையுடனும் மூன்றாந்தரப்பின் அனுசரணையுடனும் இப் பேச்சுக்கு ஆதரவளிக்க முன்வந்தது.

இதுவரைகாலச் சமாதான முயற்சிகளைப் பலியிட்டு, சமாதானத்தின் கொலைகாரர்களாகத் தமிழர்களைச் சித்தரித்து, அதையே சர்வதேசத்தை நம்புவித்துவந்த சிங்கள ஆட்சியாளர்கள், சர்வதேச அரங்கின் முன் மூன்றாந் தரப்பின்முன் சமரசப் பேச்சுக் கான ஒழுக்கத்துடனும் வழிபிறளாத நேர்மையுடனும் செயற்படுவார்களென்று தமிழ்மக்கள் நம்பினார்கள். ஆனால் வழமையான அதே ஆட்சியதிகாரப் போட்டியில் சமாதானம் சர்வதேசம் பார்த்திருக்கக் கழுமரம் நோக்கி அழைத்துச் செல்லப்படுகிறது.

யுத்தத்திற்குத் திரும்பவியலாத கட்டத்திற்குச் சமாதானம் முதிர்ந்துவரும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார். ஆனால் இப்பொழுதோ பேச்சுக்குத் திரும்ப வியலாத கட்டத்தில் யுத்த நிறுத்தம் தொங்கிக் கொண்டிருப்பதே சமாதானத்தின் மெய் நிலையாகி இருக்கிறது.

அனுசரணைக்கு வந்த மூன்றாந் தரப்பு கொழும்பு அரசியல் ஸ்திரப்படும் வரை தமது பணியிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்திக்கொள்வதாகக் கூறிச்சென்று விட்டது. யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு தமது கண்காணிப்புப் பணியை நிறைவேற்ற அரச தரப்பில் யாரிடம் முறையிடுவது? யார் பொறுப்புச் சொல்வது? என்ற நெருக்கடியில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட ரணிலின் கரங்களில் அதனைக் காப்பாற்று வதற்கான அதிகாரம் இன்று இல்லாது போய்விட்டது. சிறிலங்காவின் முப்படைகள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்குக் கடப்பாடுடையவர்களாக இருப்பார்களா? எத்தகைய சந்தர்ப்பத்தில் எப்படியான கட்டளைகளின் கீழ் செயற்படுவார்கள்? என்ற நிச்சயமற்ற நிலையில் சமாதானம் அச்சமூட்டப்பட்டி ருக்கிறது.

இத்தகைய நிலமையில், சமாதானத்தைக் காப்பாற்றும் எந்த மாய மந்திரமும் விடுதலைப் புலிகளிடம் இல்லை. விடுதலைப்புலிகளால் தமிழ்மக்கள் சமாதானத்தையே விரும்புகின்றனர் என்று சர்வதேசத்திற்கு அறிவிக்க முடியுமே தவிர, தமிழ்மக்கள் சமாதானத்தையே நம்பி ஆக வேண்டும் என்று அறைகூவல் விடுக்க முடியாது. சமாதானத்திற்காக விடுதலைப்புலிகள் பொறுத்திருக்க முடியுமே தவிர, மீறப்படும் உடன்பாட்டையோ திணிக்கப்படும் யுத்தத்தையோ புலிகள் பொறுத்துக்கொள்ள முடியாது.

இலங்கையினுடைய அரசியல் யாப்பு தமிழ்மக்களுக்கு என்றும் பாதுகாப்பளித்த தில்லை. இன்னும் சொன்னால் அது எதிர் மறையான நோக்கத்திலேயே உருவாக்கப்பட்டது. அதனாலேயே விடுதலைப்புலிகள் அரசியல் யாப்பிற்கு வெளியேயான ஒரு திட்டவரைபைக் கோர வேண்டியிருந்தது. அரசியல் யாப்பு சிங்கள இனவாத அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும் ஆயுதங்களைத் தாங்கியிருக்கிறது. தேவைப்படும்போது அதைச் சிங்கள ஆளும் வர்க்கம் எப்படிப் பிரயோகிக்கும் என்பதையும், அந்தப் பிரயோகம் தரும் உருசியையும் தமிழ்மக்கள் தமது பட்டுணர்வில் அறிவர்.

சிங்கள தேசத்தின் அரசியல் கலாச்சாரமும் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு உணர்வைத் தரக்கூடிய தொன்றல்ல. அது அரசியல் நாகரீக விழுமியங்களை மதித்து நடக்கும் ஒன்றல்ல. ஆட்சியைக் கைப்பற்று வதற்காகவும் அரசாங்கத்தைத் தக்க வைப்பதற்காகவும் தமிழ் எதிர்ப்பு அலையை உருவாக்குவதும் அதற்காகவே சட்டங்கள் இயற்றுவதும் அதன் கலாச்சாரமாகி விட்டது.

யுத்தநிறுத்த உடன்பாடு அரசியல் யாப்பெனும் கூரிய வாள்வீச்சால் வெட்டிச் சாய்க்கப்படவும் முடியும். அதற்குச் சட்ட விளக்கம் அளிக்கவும் முடியும். பிரதமர் ரணில் கையெழுத்திட்ட உடன்படிக்கை பின் பற்றத் தகாததென்று முப்படைகளுக்குக் கட்டளையிடவும் முடியும். அது சட்ட அந்தஸ்த்து அற்றதென்று சொல்லிவிடவும் முடியும்.

ஆக, களமற்றிருக்கும் யுத்தநிறுத்த உடன்பாட்டின்மீது இத்தீவின் மக்கள் சமாதானத்தில் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்று போதனை செய்ய எந்தப் போதகராலும் முடியாதுள்ளது.

சமாதானம் தளமற்றுப்போனால் யுத்தம் தன்குடைகளை விரித்துக் கொள்ளக் கூடிய அபாயத்தையே இன்றைய சூழல் தோற்றுவித்துள்ளது. •

—பிரபுத்திரன்—

## எப்படிச்சொல்வது?

அந்த நாளை
அர்ப்பணம் தோய்ந்த அற்புத
நாளை
எப்படிச்சொல்வது?

காற்றே!
கசிந்துருகும் மழையே!
நாற்றாகிப்போன நம்மவரை
சாற்றுவது எப்படியோ?

நேற்று -
எம்மோடு இருந்தார்கள்
நாட்டின் விடுதலைக்காய்
நெடுந்தூரம் நடந்தார்கள்
நீட்டுகின்ற நெருந்துயரை
நீந்திக்கடந்தார்கள்
மூட்டுகின்ற போரினிலே
வரலாறாயானார்கள்

அவர்களுக்காய் -
கல்லறைகள் உண்டு
கனத்த நினைவுக்கற்களுமுண்டு
சொல்லிவிடமுடியாது
மனத்தில் வாழும்
சொற்களுமுண்டு

துயில்கின்ற தூயவரின்
துயிலுமில்லம் போனேன்
எங்கும் நான்
கண்டிராத உணர்வுகளை
தாங்கியுமே நின்றேன்

காற்றுக்கூட
கையசைத்து வீசுது
கனத்தமழை
பன்னீராய் சொரியுது
மரங்கள் கூட
மௌனகீதம் இசைக்குது.

உறவுகளோ
உளமுருகி உணர்வுமழை
கொட்டுது
உறங்குகின்ற உயர்ந்தவர்கள்
கல்லறைகள் கதைகள் பல பேசுது
ஒளிர்கின்ற தீபங்களில்
எத்தனையோ காட்சிகள் விரியுது
மாவீரர் மகிமைப்பாடல்
மனத்தினிலே நிறையுது
கண்களிலே
கண்ணீர்ப்பூ தோன்றுது
கல்லறையைத் தழுவியுமே
காணிக்கையாகுது.

கல்லறைக்கு
முன்நின்று கைநீட்டுவோம்
கனத்தபணி முடிப்பதற்கு
உறுதியெடுப்போம்

- தீவண்ணன்

# சமாதானத்தின் எதிர்காலமும் சர்வதேசத்தின் கடமையும்



சமாதானத்தின் எதிர்காலம் இப்போது கேள்விக் குறியாகிவிட்டது. தனது உச்ச அதிகாரத்தைப் பயன்படுத்தி - கொழும்பு அரசியலைக் குழப்பியடித்து - சந்திரிகா அம்மையார் போர்ப்பீதியை ஊட்டியுள்ளார்.

நிலைமையை சரியாகப் புரிந்துகொண்ட சமாதான அனுசரணையாளர்களான நோர்வே அரசு தமது பணியிலிருந்து தற்காலிகமாகப் பின்வாங்கிவிட்டனர்.

எந்தவேளையில் எது நடைபெறும் என்று எவருக்கும் தெரியாத நிச்சயமற்ற நிலமாக, இப்போது, இலங்கைத்தீவு காணப்படுகிறது.

சர்வதேச சமூகத்திற்கும் ஒரு விடயம் தெட்டத்தெளிவாகி விட்டது. சிங்கள ஆட்சியாளர்கள் முன்னர் கூறிவந்ததுபோல சமாதானத்தின் குறுக்கே தடைக்கல்லாக இருப்பது புலிகள் இயக்கம் அல்ல. மாறாக சிங்கள ஆட்சியாளர்களும் - அவர்களது ஆட்சி அமைப்பும்தான் காரணம் என்பது அவர்களுக்குப் புரிந்துவிட்டது.



'போர்மூலம் சமாதானம்' என்று சந்திரிகா அம்மையார் முன்னர் கூறியபோது விரும்பியோ, விரும்பாமலோ அதை ஏற்றுக்கொண்டு - சிங்கள அரசுக்கு ஆதரவளித்த சர்வதேச சமூகம், இப்போது, புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி சமாதானம் காணத் தயார் என்று அம்மையார் கூறுவதை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை.

நம்பமுடியாத ஆட்சியாளர் என்ற வகைக்குள் சந்திரிகா அம்மையாரையும், சர்வதேசசமூகம், வகைப்படுத்தியுள்ளது.

சமாதானப் பேச்சில் சந்திரிகாவை முன்னிறுத்த சர்வதேசம் தயாரில்லை என்பதை மிகச் சரியாக உணர்ந்து கொண்டதாலேயே சமாதானப் பேச்சை சந்திரிகாவே பொறுப்பெடுக்கட்டும் என்று ரணில் விக்கிரமசிங்க துணிவுடன் கூறியுள்ளார்.

ஆனால், அம்மையாரைப் பொறுத்தவகையில் சமாதானம் அவரது முக்கிய தேவைகளில் ஒன்றல்ல. அதிகாரமும் - இனவாதமுமே அவரது முக்கிய குறி. உச்ச அதிகாரத்தைக் கையில் வைத்துக்கொண்டு எந்தவேளையிலும் தனது இனவாத நடவடிக்கைகளை முடுக்கிவிட அவர் தயங்கமாட்டார்.

அதனால்தான் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற நாணயத்தின் ஒரு பக்கமான பாதுகாப்பு விவகார அமைச்சை அம்மையார் தன்வசம் எடுத்துள்ளார்.

சந்திரிகா அம்மையார் சிங்கள இனவாதத்தையே பிரதிநிதித்துவப் படுத்துகின்றார். ஜே.வி.பி, சிகல உறுமய, மக்கள் முன்னணி போன்ற தீவிர இனவாதக் கட்சிகள் அம்மையாருடனேயே உள்ளன. இந்தக் கூட்டுமுன்னணிக்கும் சமாதானத்திற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. தமிழ் - சிங்கள இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வு இராணுவ அணுகுமுறை மூலமே என்பது இவர்களது சித்தாந்தம்.

எனினும் சர்வதேச சமூகத்தைப் பகைத்துக்கொண்டு தமது இராணுவ சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்த முடியாது என்பதாலேயே "சமாதானப் பேச்சுக்கு ஆதரவு" என்ற தந்திர நிலைப்பாட்டை அம்மையார் எடுத்துள்ளார். அம்மையார் நடாத்தும் இந்த அரசியல் நாடகத்தின் உள்நோக்கம் சர்வதேச சமூகத்திற்கும் நன்கு விளங்கும். அதனாலேயே ஜனாதிபதியும் - பிரதமரும் ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்து சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என்று அது கூறியுள்ளது.

ஆயினும், சர்வதேசம் விரும்புவதுபோல சிங்களத்தின் இரண்டு ஆளும் கட்சிகளும் ஒன்றிணைந்து சமாதானப் பேச்சை நடாத்தவேண்டும் என்று கோருவது நடைமுறைச் சாத்தியமான விடயமாக அமையுமா! என்பது சந்தேகமே. இது சமாதானத்திற்குள்ளேயே அதுதன் எதிரிகளையும் கொண்டிருப்பதற்கு ஒப்பானதாகும். பேச்சின்போது எழும் சிறு விடயங்களையே பெரிதாக்கி சமாதானத்தை உள்ளிருநதே கொல்லும் விசக்கிருமியாகச் செயற்படவும் வாய்ப்புண்டு.

> ❝ சந்திரிகா அம்மையார் சிங்கள இனவாதத்தையே பிரதிநிதித்துவப்படுத்துகின்றார். ஜே.வி.பி, சிகல உறுமய, மக்கள் முன்னனி போன்ற தீவிர இனவாதக் கட்சிகள் அம்மையாருடனேயே உள்ளன. இந்தக் கூட்டுமுன்னணிக்கும் சமாதானத்திற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. தமிழ் - சிங்கள இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வு இராணுவ அனுகுமுறை மூலமே என்பது இவர்களது சித்தாந்தம்.
>
> எனினும் சர்வதேச சமூகத்தைப் பகைத்துக்கொண்டு தமது இராணுவ சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்தமுடியாது என்பதாலேயே "சமாதானப் பேச்சுக்கு ஆதரவு" என்ற தந்திர நிலைப்பாட்டை அம்மையார் எடுத்துள்ளார். ❞

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இரண்டு கட்சியினரும் (ஆளும் கட்சி, எதிர்க்கட்சி) பொறுப்பு என்பது நடைமுறையில் எவருமே பொறுப்பில்லை என்ற அபாயத்திற்கு இட்டுச்செல்லவும் வாய்ப்புண்டு. பௌத்த மதபீடமும் - பிக்குகள் முன்னணியும் இதற்குள் புகுந்து மேலும் குழப்பங்களை விளைவிக்கவும் வாய்ப்புகள் உண்டு.

சமாதானப் பாதைக்குக் குறுக்கே - அதாவது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்குத் தடையாக சிங்களத்தின் எதிர்க்கட்சிகள் - மதபீடங்கள் மட்டுமல்ல அதன் அரசியல் அமைப்பும் உள்ளது என்பதே உண்மையாகும்.

அதனால்தான் சிங்கள அரசாங்கத்துடன் எட்டப்படும் எந்தவொரு தீர்வும் சிங்களத்து அரசியல் அமைப்புக்கு வெளியே காணப்பட வேண்டும் என்று புலிகள் இயக்கம் வலியுறுத்தி வருகின்றது.

போர்நிறுத்த ஒப்பந்தமும் அவ்வாறுதான் செய்யப்பட்டது, புலிகள் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான வரைபும் அவ்வாறுதான் உள்ளது.



சிங்களத்து ஆளும் வர்க்கம் பற்றியும் - அவர்களது அரசியல் பற்றியும் தமிழ்மக்களிடம் கசப்பான அனுபவங்களே உள்ளன.

இந்த வரலாற்று அனுபவங்களே மூன்றாந் தரப்பு அனுசரணை என்ற விடயத்திற்கு புலிகள் இயக்கத்தை நிர்ப்பந்தித்தது.

சிங்களத்து அரசியலின் நிலையற்ற தன்மையால் இன்று அந்த மூன்றாந்தரப்பு அனுசரணையாளராகச் செயற்பட்ட நோர்வே அரசு தனது பணியில் இருந்து தற்காலிகமாக விலகியிருக்கவேண்டிய சூழலைக் கொடுத்துள்ளது.

முன்னெப்போதையும் விட இப்போது சமாதானப் பேச்சு - அரசியல்தீர்வு விடயங்களில் சர்வதேச சமூகத்தின் கடமையும் - பொறுப்பும் அதிகரித்துள்ளது.

சிங்களத்தின் அரசியல் குழப்பங்களுக்கு ஒரு முடிவு காணப்பட்டு புலிகள் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் . என்பதே தமிழ்மக்களின் எதிர்பார்ப்பாகும்.

சிங்கள அரசுடன் போர்நிறுத்தம் ஏற்பட்டு இரண்டு வருடங்கள் நிறைவுறப்போகின்றன. ஆயினும், இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் முழுமையாக மீளக் குடியமரவில்லை, அவர்களுக்கான புனர்வாழ்வுப் பணிகளும் நடைபெறவில்லை, போரால் சிதைந்த வடக்கு - கிழக்கில் எந்தவொரு அபிவிருத்தியும் நடைபெறவில்லை.

போருமில்லை, சமாதானமுமில்லை என்று நீண்டுசெல்லும் தற்போதைய நிலை தென் இலங்கைக்குச் சாதகமாகவே உள்ளது. ஆனால், அபிவிருத்தியும் இல்லை, இயல்புவாழ்வும் இல்லை என்ற ஒரு நம்பிக்கையற்ற நிலையே வடக்கு - கிழக்கில் உள்ளது.

இலங்கைத்தீவில் சமாதானத்தைக் கொண்டுவர விரும்பும் சர்வதேச சமூகம் இதைக் கருத்தில் எடுக்கவேண்டும்.

—எல்லாளன்

**விடியும் காலைப் பொழுது அது என்ன தூரமா,**
**விழியில் நுனையும் நினைவு அது என்ன பாரமா.**

*— எழுச்சிப்பாடல் வரிகள் —*

# விதைநிலங்களும் நினைவு நாட்களும்

**— கலாநிதி க.சோமாஸ்கந்தன் —**

நெஞ்சிற் சிறந்ததொரு நினைவாலயம் இவ்வுலகில் இல்லை. நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும். எம்மை மறந்தாரையும் மறவாதிருப்பது தமிழர் மரபு. நினைவுச் சின்னங்கள் காலச்சிதைவை எதிர்த்து நிற்கின்றன. செருக்களத்தில் வீழ்ந்த மாவீரர்களை நாம் எம்மண்ணில் விதைக்கிறோம். அவர்கள் பெயர் சொல்லும் நினைவுக் கற்களை உருவாக்கி உறங்கும் தலைப்பகுதியில் வைக்கிறோம். இக்கற்களை நாம் வணங்கி நிற்கிறோம். போரில் வீழ்ந்த வீரர்களை அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட பொதுநிலத்தில் அடக்கம் செய்வது உலக வழமை. அவரவருக்கு விடப்பட்ட ஆறடி நிலத்தில் அவர்கள் உறங்குகிறார்கள். இவ்வாறு கூட்டாக உறங்கும் நிலத்தை போர்வீரர் இடுநிலம்' என்ற அர்த்தத்தில் WAR CEMETERY என்று ஆங்கிலத்தில் அழைக்கிறார்கள்.

போர்வீரர் இடுநிலத்திலும் பொதுமக்கள் இடுநிலங்களிலும் 'கியூ' எனப்படும் ஒருவகை மரங்களை நட்டுப் பராமரிப்பது மேற்குலக வழமை. உயரமாகவும் செழிப்பாகவும் வளரும் கியூ (YEW)மரம் சோகத்தின் சின்னமாகக் கருதப்படுகிறது. வளைந்து கொடுக்கும் தன்மையும், நார்ப்பிடிப்பும், எடையுடன் கூடிய பலமும்கொண்ட இம்மரத்தின் கிளைகள் முன்னொரு காலத்தில் அம்பும் வில்லும் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டன. போரியல் வரலாற்றுடன் தொடர்புடைய கியூமரம் இன்று இடுநிலத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

இறந்த வீரனின் வித்துடலை மீட்க இயலாது போனால், அல்லது வேற்று நாட்டில் புதைக்கப்பட்டு சொந்தநாடு கொண்டு வரும் சாத்தியம் இல்லாது போனால், செனோராப் (CENO-TAPH) எனும் கல்லறையைக் கட்டும் வழமை மேற்கு நாடுகளில் உண்டு. செனோராப், கல்லறை போன்ற உருவமைப்பில் இருக்கும் ஆனால் அதனடியில் சடலம் இருக்க மாட்டாது. கல்லறைக்குரிய மரியாதைகள் யாவும் இதற்கு நன்கு வழங்கபபடும். முதலாம் உலகப் போரிலும் (1914-18), இரண்டாம் உலகப்போரிலும் (1939-45) மடிந்த பிரிட்டிஷ போர்வீரர்களுக்கான இரு செனோராப் கல்லறைகள் இலண்டன் மாநகரின் வெஸ்ற்மினிஸ்ரர் பகுதியிலுள்ள வைற்ஹோல் பெருந்தெருவில் எழுப்பப்பட்டுள்ளன.

மிக அண்மையில், முதலாம் உலகப்போர் மிகக் கொடூரமாக நடைபெற்ற பெல்ஜியம் நாட்டின் பிளான்டார்ஸ் (FLAN-DERS) தரையில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதுவரை காலமும் தேடுவாரற்றுக் கிடந்த இப்பகுதி ஊடாக ஒரு நெடுஞ்சாலையை அமைக்கும் திட்டத்துடன் பெல்ஜிய அரசு இந்த அகழ்வுகளை மேற்கொண்டது. பல கிலோமீற்றர் நீளமான காப்பகழிகளும், பாரிய பதுங்கு குழிகளும் அகழ்வின்போது அடையாளம் காணப்பட்டுள்ளன.

1917ம் ஆண்டு நடுப்பகுதியில் பிளான்டார்ஸ் போரில் அரை மில்லியனுக்கும் மேற்பட்ட பிரிட்டிஷ, கனேடிய, அவுஸ்திரேலிய, இந்தியப் போர்வீரர்கள் உயிரிழந்துள்ளனர். இவர்களிற் பல்லாயிரக் கணக்கானோர் ஆழம் குறைந்த குழிகளில் அவசர அவசரமாகப் புதைக்கப்பட்டுள்ளதை அகழ்வுகள் வெளிப்படுத்தின. ஒரு மூடப்பட்ட காப்பகழியின் ஒரு பகுதியில் சீருடை தரித்த ஐந்து சடலங்கள் வீழ்ந்த இடத்திலேயே காணப்பட்டன. ஒரு மில்லியனுக்கும் கூடுதலான முதலாம் உலகப் போர்க்கால ரவைகளும், துப்பாக்கிகளும், மதுபானப் பீப்பாக்களும் வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

இராணுவ வரலாற்றில் மிகப்பெரிய தவறான நடவடிக்கை என்று வர்ணிக்கப்பட்ட நெப்போலியனின் ருஷயாமீதான 1812ம் ஆண்டுப் படையெடுப்பு பற்றிய புதுத்தகவல்கள் இவ்வருடம் வெளிவந்துள்ளன. 442,000 படைவீரர்கள் கொண்ட பிரெஞ்சுப்படை லிதுவேனியா ஊடாக ருஷ்யாவுக்குள் நுழைந்தன. இவற்றுள் 10,000பேர் மாத்திரம் உயிர்தப்பினர். மிகுதிப்பேர் போரிலும் பனிக் குளிரிலும் மடிந்தனர். லிதுவேனியாவின் வில்னியுஸ் (VILNIUS) நகரில் கட்டிடப் பணிகளுக்காகத் தோண்டுதல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஒரு கிடங்கில் மாத்திரம் 2,000 சடலங்கள் மீட்கப்பட்டன. வில்னியுஸ் பகுதியில் 40,000 படையினர் இறந்திருக்கலாம் என்று மதிப்பிடப்படுகின்றது. மிகுதி 38,000 வீரர்களின் சடலங்களைத் தேடும் பணி தொடர்கின்றது.

ஜூன் 1941ல் ஹிற்லரின் ஜேர்மன் படைகள் ருஷயாமீது தாக்குதல் தொடுத்தன. 04 மில்லியன் போர்வீரர்கள், 3,330 போர்த் தாங்கிகள், 7,000 தூர வீச்சுத் துவக்குகள், 2,000போர் விமானங்கள் தாக்குதல் அணியில் இடம்பிடித்தன. போரியல் வரலாற்றில் இத்தனை பெரிய அணிவகுப்பு முன்னெப்போதும் காணப்படவில்லை. ஆறு மாதத்தில் ஜேர்மன் இராணுவத்தின் முதுகெலும்பு முறிக்கப்பட்டது. ஒருசில இலட்சம் ஜேர்மன் துருப்புக்கள் பின்வாங்கி நாடு திரும்பின. மிகுதிப்பேர் இறந்த இடத்திலேயே கைவிடப்பட்டனர். ருஷயப்படைகள் கைதுசெய்த இரண்டு இலட்சம் வரையிலான துருப்பினரில் பெரும்பாலானோர் மருத்துவக் கவனிப்பின்றி உயிரிழந்தனர். இவர்களுடைய உடலின் கதி என்னவென்று இது வரை தெரியவில்லை.

மிகவும் விரிவான போர்வீரர் தேசிய இடுநில ஒழுங்கை 19 ஆம் நூற்றாண்டு தொடக்கம் அமெரிக்கா பேணி வருகின்றது. NATIONAL CEMETERY SYSTEM FOR SOLDIERS என்று இவ்வொழுங்கு அழைக்கப்படுகின்றது. நாட்டிற்காக உயிரிழந்த அமெரிக்காவின் போர்வீரர்களுக்காக இன்றுவரை நூறு தேசிய இடுநிலங்கள் திறக்கப்பட்டுள்ளன. முதலாவது இடுநிலம் உள்நாட்டுப் போரின் போது (1861-1865) திறக்கப்பட்டது. முப்பத்திமூன்று அமெரிக்க மாநிலங்கள், தலைநகர் வாஷிங்ரன், அமெரிக்காவின் ஆளுகைக்கு உட்பட்ட புயெர்டோறிக்கோ (PUERTORICO) ஆகியவற்றில் இந்த நூறு தேசிய இடுநிலங்களும் காணப்படுகின்றன.

ஆர்லிங்ரன், கெற்றிஸ்பேர்க் எனப்படும் இருதேசிய இடுநிலங்கள் உலகப் பிரசித்தமானவை. 400 ஏக்கர் பரப்பளவுகொண்ட ஆர்லிங்ரன் தேசிய இடுநிலம் (ARLINGTON NATIONAL CEMERETY) தலைநகர் வாஷிங்ரனுக்கு அருகாமையில் 'காணப்படுகின்றது. போரில் மடிந்தோருக்கு மாத்திரம் ஆருலிங்ரன் இடமளிக்கின்றது. ஆனால் போரில் பங்குபற்றிய இரு அமெரிக்க அதிபர்களின் சடலங்கள் இங்கு புதைக்கப்பட்டுள்ளன. கடைப்படை வீரராகப் போரிட்ட அதிபர் ஜோன் கெனடியின் சடலம் அதிலொன்றாகும். 4,000 இருக்கைகள் கொண்ட ஒரு விசேட நிகழ்வுகளுக்கான மண்டபம் 1920ல் இங்கு அமைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் தேசிய இடுநிலம் என்ற முதன்மை அந்தஸ்து ஆர்லிங்ரனுக்கு இருந்தாலும் கூடுதல் வரலாற்று முக்கியத்துவம் கெற்றிஸ்பேர்க் இடுநிலத்திற்கு உண்டு. நவம்பர் 19, 1863ல் நடந்த அர்ப்பணிப்பு வைபவத்தில் அதிபர் ஏபிரகாம் லிங்கன் தனது மறக்கமுடியாத மூன்று நிமிட உரையை நிகழ்த்தினார். மக்களாட்சியின் வரையறையை இந்த உரை வெளிப்படுத்துகின்றது. போரில் உயிரிழந்த அமெரிக்க வீரர்களின் சடலங்கள் வெளிநாடுகளிலும் விதைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க போர் நினைவாலய ஆணையத்தின் (AMERICAN BATTLE MONUMENTS COMMISSION) கட்டுப்பாட்டில் முதலாம் உலகப்போரின் பின் எட்டு தேசிய இடுநிலங்கள் வெளிநாடுகளில் அமைக்கப்பட்டுள்ளன. - பிரான்சில் ஆறு, இங்கிலாந்து மற்றும் பெல்ஜியத்தில் ஒவ்வொன்று. இரண்டாம் உலகப்போரின் பின் மேலதிகமாகப் பதினான்கு வரையிலான இடுநிலங்களை இந்த ஆணையம் திறந்துள்ளது. - பிரான்சில் ஐந்து, பெல்ஜியம் நாட்டில் இரண்டு, இத்தாலியில் இரண்டு, இங்கிலாந்து, நெதர்லாந்து, லுக்செம்பூர்க், ரியூனிசியா, பிலிப்பீன்ஸ் ஆகிய ஐந்து நாடுகளில் ஒவ்வொன்று. பெரும் பொருட்செலவில் இந்த நினைவாலயங்கள் பேணப்படுகின்றன. ஒவ்வொரு போர்வீரனின் தலைப்பகுதியில் சீமெந்தில் தயாரிக்கப்பட்ட உயரமான சிலுவைகள் நாட்டப்பட்டுள்ளன. அதில் அவனுடைய பெயர் விபரமும், இலக்கமும் பொறிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இடுநிலத்திலும் மிகவும் விசாலமான அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. அலுவலகத்திற்கு முன்னால் உயரமான கம்பத்தில் அமெரிக்கத் தேசியக் கொடி பறந்துகொண்டிருக்கிறது.


பசுபிக் பிராந்தியப் போரில் மரணித்த போர்வீரர்களுக்கான விசேட இடுநிலம் ஐம்பதாவது மாநிலமான ஹவாய்த்தீவில் அமைக்கப்பட்டுள்ளது. கொரிய தீபகற்பப் போரில் உயிரிழந்த அமெரிக்கப் போர்வீரர்கள் இங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ளனர். கொரியப்போரின் அடையாளம் காணப்படாத போர்வீரனின் நினைவாலயமும் இங்கு நிறுவப்பட்டுள்ளது. பசுபிக் பிராந்தியத் தேசிய இடுநிலம் (NATIONAL CEMETERY OF THE PACIFIC) என்ற பெயர் இதற்கு வழங்கப்பட்டுள்ளது. போரில் மடிந்த தனது அணியினரின் மத்தியிலிருந்து ஒருவருடைய உடலை மாத்திரம் சொந்த நாட்டிற்குக் கொண்டுவந்து அந்த உடலுக்கு உயர் அந்தஸ்து வழங்கும் பாரம்பரியம் முதலாம் உலகப் போரின் பின் ஆரம்பமாகியது. அப்படித் தெரிவு செய்யப்படுபவரின் ஊர், பெயர், இலக்கம் போன்ற அடையாளம் பார்க்கப்படுவதில்லை. இவர் அடையாளம் காணப்படாதவராக இறுதி வரை இருப்பார். இந்த உடலைச்சுற்றி ஒரு மிகவும் உணர்வுபூர்வமான நினைவுச் சின்னம் கட்டியெழுப்பப்படுகின்றது. இந்த நினைவுச் சின்னத்தின் பெயர் THE TOMB OF THE UNKNOWN SOLDIER அதாவது யாரென்று அறியப்படாத போர்வீரனின் கல்லறை என்பது பொருள்.

முதலாம் உலகப்போரில் பங்கேற்ற எல்லா நேசநாடுகளிலும் மேற்கூறிய கல்லறைகள் காணப்படுகின்றன. இந்தியா, இலங்கை போன்ற பிரித்தானி


(தொடர்ச்சி 12ம் பக்கம்)



யேர்மனியின் பேர்லின் நகரில் காணப்படும் போர் நினைவுச் சின்னம் - போரில் இறந்த மகனைக் கைகளில் தாங்கிய தாய்



# விடுதலைக்கானதே விதைப்பு











வந்து போகும் ஒவ்வொரு மாரியும்
எம்மண்ணுக்குத் தந்துபோகும் வசீகரம் தாராளம்.
மூன்றுமாதங்கள் மட்டுமே மேகம் கசியும்
நிறையா வரம் பெற்ற நிலமிது.
கோடை வறுத்தெடுக்கும் காலத்தில்
ஆடையவிழக் கிடப்பாள் அன்னை.
வாரியடித்துலுப்பும் காற்றின் வன்மம்
புழுதியிறைத்துவிட்டுப் போகும்.
வீட்டின் தலைவாசல் மூக்கின் நுளைவாசல்
வீதிமருங்குள மரங்கள்
யாவிலும் புழுதிசொருகிவிடும் கோடை.
ஐப்பசியானதும் மேலே மேகம் கறுக்கும்.
தீபாவளியுடன் தூமிவிழத்தொடங்கினால்
வரண்ட மேனி வனப்புறும்.
கார்த்திகை மாதம் வேர்தறியாக் காலம்.
வானக்கூரை பிரித்து வர்ஷித்து
தைவரை பெய்யும் மழை.
கார்த்திகை இருப்பத்தேழாம் நாளொன்றிற்தான்
மழையோடு எம்மிலிறங்கியது முதலிடி.
உயிர்விலை கொடுத்தே விடுதலையெனும்
உண்மையுரைத்து
விதைப்புத் தொடங்கியது இந்நாளே.
நெடுங்காலம் அடிமைச்சுகம் தின்று
துயிலிற்கிடந்த தேசத்துக்கு
முதல் விதைப்புக்கான உழவில்
மூச்சுத்திணறியது.
தருவதைத்தா வாய்நிறைத்துக் கொள்வோமென
எச்சிற்பருக்கை தின்ற பிச்சைக்காரருக்கு
சொந்தச் சோறுசமைக்கும் நளபாகத்தை
சங்கரென்றொருவன் பொங்கிக்காட்டினான்.
அன்றிலிருந்து இன்றுவரை
பொங்கலும் பந்தியுமாகப் போகிறது காலம்.
குருத்தோலை வீழாத மரங்களாகவே
இருந்தோம் ஒருகாலம்.
பூக்கள் சொரியாமல்
பிஞ்சுகள் கருகாமல்
சாவுவிழாத் தேசமாகவே இருந்தது எம்நிலம்.
பழுத்த சருகுகளே சொரியும் இடைக்கிடை
அதற்கே நெஞ்சிலடித்து நெக்குருகும் உறவு.
வேலிப்பூவரசே போதுமென
பிணமெரிக்க விறகுவாங்காத காலம்.
பிரேதம் வளர்த்தும் பெருங்கட்டில்
ஊரில் ஓரிரண்டுதான் இருக்கும்.
அருந்தலாய் வருடத்துக்கொன்று
அதற்கு வாய்க்கும்.
அடிமைக்கு ஏது இறப்பு
முதுமைவரை மூச்சுவிடும்.
விடுதலைக்கானதே விதைப்பு
விலங்கறுபடும் வரை போரிடும்.
முன்னரெம் தேசம் சாவுக்காக வாழ்ந்தது
இன்றுதான் வாழ்வதற்காக சாகின்றது.
எனவேதான் சுடலைகள் துயிலுமில்லங்களாயின.
சவக்காலைகள் தவச்சாலைகளாயின.
தாயகம் வேண்டி தபசியற்றும் பிள்ளைகள்
முக்தி பெற்றதும் மாவீரர் ஆகின்றனர்.
இளவயது மரணம் கொடியதுதான்.
பூவாய் விரியாமல் புலரியில் உதிர்வது
பெரிய துன்பம்தான்.
வாழ்வின் வசந்தத்தில் சாவில் வீழ்வது
ஆழாத் துயர்தான்.
விடுதலைக்கு வேற்றுவழி உண்டெனில்
விதைப்பை நிறுத்திவிடலாம்.

விடுதலை உயிர்கொடுத்தே விளையுமெனில்
சாவுக்குச் சாவென்று நாமமில்லை
அது வாழ்வு எனப்படும்.
கார்த்திகை இருபத்தேழாம் நாளன்று
துயிலுமில்ல வாசலில் நிற்கத் துணிவுவேண்டும்.
தாங்கும் தைரியம் வேண்டும்.
ஒரு தாயின் ஒப்பாரிக்கு முன்னே,
ஒரு தந்தையின் பிலாக்கணத்துக்கு முன்னே,
உடன்பிறந்தவரின் கண்ணீர் மாலைக்கு முன்னே,
தோழரின் நெருப்பு மௌனத்தின் முன்னே,
தோழியரின் எரிமலை விகர்சிப்பின் முன்னே,
உறவுகளின் ஆயிரம் நினைவுச் சுழிகளின்
முன்னே,
அந்தப்பாடல் சுமந்துவந்து எரிக்கும் அர்த்தத்தின்
முன்னே
நிற்பதற்கு நெஞ்சுரம் வேண்டும்.
நின்று பார்த்தால் தெரியும் நெருப்பின் சூடு.
பேரமைதி பூத்திருக்கும் பொழுதில்
வந்து அள்ளித் தீசொருகி
உள்ளெரிக்கும் அந்தப் பாடலும்,
கேட்கும் மணியொலியும்,
நெய்விளக்குச் சுடரும்
கல்லறை விழுந்தரற்றும் உறவுகளும்
எத்தனை உணர்வுச் சுழிப்பினில் ஆழ்த்தும்.
இதயத்துடிப்பே நின்றுவிடும்போல
மூச்சுத்திணறும்.
இத்தனை பேரையும் இழந்துபோனோமே என
கத்தவேண்டும்போல
கல்லறையைத் தழுவவேண்டும்போல
செத்துவிட வேண்டும்போல
சித்தப்பிரமை பிடித்துச் சிரிக்கவேண்டும்போல
உள்ளுக்குள் ஏதோசெய்து உருக்கும்.
நட்ட கல்லாகி நிற்போம் நாம்.
அப்போதுதான் அந்த அசரீரி கேட்கும்.
உறவுகளே!
எமக்கானது இந்த மணியோசை அல்ல
எமக்கானது இந்த நெய்விளக்கு அல்ல
இந்தப் பாடல் அல்ல.
உங்கள் கண்ணீரும், கதறலுமல்ல
எமக்கானது விடுதலை.
எமக்கானது தாயகம்.
விட்டு விடுதலையாகிய சிறகுவிரிப்பு.
நாங்கள் நடுகல்லாகிக் கிடப்பது
தருவதை வாங்கிச் சமரசம் செய்யவல்ல.
வந்து குவியும் வல்லரசுகளுக்கு ஏவலியற்ற
அல்ல
எந்த நுகத்தடியும் பூட்டாத நிமிர்வுக்காக.
தருவீர்களா?
நெஞ்சிற் குத்தும் கேள்வியை எறிந்துவிட்டு
பதிலை எதிர்பாராமலே
குழிகள் மூடிக்கொள்ளும்.
அழுதபடி நாங்கள் வெளியே வர
வெள்ளை வாகனங்கள் சத்தமிட்டபடி
சுழலும் விளக்குகளுடன் விரையும்.
ஆற்றின் அணையுடைந்து போனால்
வெளிவெள்ளம் உள்ளே வரும்.
நாகதாளிப் பூக்கள்கூட அழகானவைதான்
யாரேனும் தலையிற் சூடுவார்களா?
ஆபத்தறியாமல் அழகுபார்க்கக்கூடாது.
வெளியே தெரியாத வேர்களாக
அதிகம் அறியப்படாத பேர்களாக
காலம் ஆகியோர் கல்லறைக்குள்ளே.
நாங்கள்?
பிள்ளைகளின் பெருந்தாகம் உணர்ந்து
நாக்குக்காகவேனும்
நீர்வார்க்க வேண்டாமா?
பயணவழியின் மீதி தொலைய
நடக்கத் தொடங்குவதே நன்று.
விடுதலைக்கானதே விதைப்பு.

—வியாசன்






# அவன் நிறையவே சாதிக்கவேண்டியவன்

யாழ்ப்பாணத்து மண்ணில் முருகைக் கற்களினுள் ஊற்றெடுப்பது தண்ணீர் மட்டுமல்ல வீரமும்தான். இல்லாதுவிடின் வந்தேறி ஆக்கிரமிக்கும் அன்னியருக்கு தண்ணீர் பாய்ச்சி குளிரவைத்து குந்தியிருக்க இடம் கொடுத்திருக்குமல்லவா? இல்லையே?

விதையை உடைத்து மண்ணைப்பிளந்து யாழ்மண்ணில் பலத்தையெல்லாம் திரட்டி காற்றைக் கிழித்து சூரியனைத் தொட்டுவிடத் துடிக்கும் பனைமரத்துடன் லெப்.கேணல் செந்தமிழ்ச்செல்வனையும் பார்க்கிறேன்.

1990 யாழ்ப்பாணம் இந்திய ஆக்கிரமிப்புப் படைகளிடமிருந்து மீண்டும் தமிழர்படையாம் புலிகளின் கட்டுப்பாட்டினுள் வந்திருந்த நேரம்.

மாவட்ட புலனாய்வுப் பொறுப்பாளருக்கு முகவர்களாக செயறபட்டாளர்களாக ஆட்கள் தேவைப்பட 'கட்டைக்' குணத்தாரை அணுகி, "குணம் அண்ணா உங்கட ஊர்ப் பக்கம் புலனாய்வு வேலைகள் செய்யக் கூடிய ஆற்றல் வாய்ந்த ஆட்கள் தேவை. இருந்தால் ஒழுங்குபடுத்தித் தாருங்கோ" என பொறுப்பாளர் கூற குணத்தாரின் மூளையில் பொறியாய்த் தட்டுப்பட்டவனே பிரபாகரன் எனும் இயற் பெயரைக் கொண்ட கரன். குணத்தின் ஈருருளி பாவரசு, வடலி, மதில் ஒழுங்கைகளினூடாக விரைந்தோடி பண்டத்தரிப்பைக்கண்டு வடலி அடைப்பை அடைய அப்பொழுதுதான் கொழும்பிலிருக்கும் தந்தையிடம் சென்று வந்த களைப்பில் அவன் நின்றான்.

"கரன், புலனாய்வு வேலைகளுக்கு ஆட்கள் தேவையாம் - பகுதி நேரமாக வேலை செய்ய உன்னால் முடியுமே?" சுற்றி வளைத்து கதைக்கத்தெரியாத குணத்தார் நேராய்க் கேட்டார். சில நிமிட அமைதியின் பின் "அண்ணை என் தம்பி எனக்கு முன் தன்னை விடுதலைப் பாதையில் இணைத்துக் கொண்டது என் மனச்சாட்சியை நித்தமும் குடையுது. பகுதி நேரமாக விடுதலைக்காக உழைப்பதில் எனக்கு உடன்பாடில்லை. முழுமையாக என்னை இணைத்துக் கொள்வதைப் பற்றியே சிந்திக்கிறேன்" அவனது சோடனையற்ற தெளிவான பதிலை குணத்தார் எதிர்பார்க்கவில்லை. மூன்று சகோதரர்களில் ஒருவன் ஏற்கனவே நீலவண்ணன் ஆக தன்னை முழுமையாக விடுதலைப்போராட்டத்தில் இணைத்துச் செயற்பட்டுக் கொண்டிருக்கையில் தாயாருக்கு ஆதரவின்றி, தமக்கைக்கு உதவியின்றி இவனை முழுநேரம் போராளியாகச் செயற்படும்படி கேட்க குணத்தாரின் கனிவு துணிவைக் கொடுக்கவில்லை.

போரின் வடுக்களை அதிகம் சமக்காத பண்டத்தரிப்பு சிற்றூரில் சிவபாக்கியநாதன் இராசமணி குடும்பமும் போரின் வடுக்களை அதிகம் சுமக்காத விடுதலைப்போருடன் அதிக ஈடுபாடு கொண்டிராத குடும்பம். இருந்தும் குணத்தார் கதைத்து சிறிது காலத்தின் பின் 13.09.1991 புலிகள் அமைப்பில் தன்னை முழுமையாக இணைத்து விடுதலைப் பாதையில் பயணிக்க முதல் அடியை எடுத்துவைத்தான் செந்தமிழ்ச் செல்வன்.


செந்தமிழ்ச்செல்வன் பெயரிலிருக்கும் அழகு, அறிவு, அமைதி, விருப்பு, ஈர்ப்பு, செழிப்பு எல்லாமே அவனிலிருந்தன.

சிங்கத்தின் தோற்றத்தைப் பார்த்தே அதன் குணத்தை அறிந்துவிடலாம். இவன் அப்படிப்பட்டவனல்ல. யானையைப்போல் அமைதி, அழகு, ஆழம், பக்குவம், வீரம் எல்லாமே. அதனால் அவனைப் புரிந்து கொள்ள அளவெடுக்க சிலருக்கு சிரமமாயிருந்தது.

டேவிட்-01 பயிற்சிமுகாம் வாழ்வே விளையும் பயிரை அடையாளப்படுத்தியது. பல்வேறு சாயல் உள்ள, உபயோகமுள்ள பல்வகைப் பொருட்களை வைத்து சில மணித்துளிகளில் மனதில் பதித்து வெள்ளைத் தாளில் எழுதுமாறு கூறி பயிற்சிப் போராளிகளின் நினைவாற்றலை பயிற்சி ஆசிரியர் அமீன் பரிசீலிப்பார். எல்லோரும் எழுதத்தொடங்க "பேனாக்களை கீழே வையுங்கோ ஓடுங்கோ" என கட்டளை பிறக்கும். பிறகென்ன எல்லோரும் ஓடத்தொடங்க மனதில் உள்ளவை அனைத்தும் மறந்துவிடும். இவன் மட்டும் ஒவ்வொரு தரம் விழுந்து எழும்பும்போதும் ஒவ்வொரு பொருளாய் உச்சரிப்பான். "வெற்றி பெற வேணும் அல்லது செய்துகாட்டவேணும்" என்ற அவனது முயற்சி அதிக புள்ளிகளை அவனுக்குப் பெற்றுக்கொடுக்கும். அப்பயிற்சி முகாமிலிருந்து சிறப்புப் பணிக்கென தேர்வுசெய்த பதினைந்து போராளிகளினுள் இவனும் ஒருவன்.

யாழ் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் உயர்தரம்வரை கற்ற அறிவும் இயல்பான புலனாய்வுச் சிந்தனையும் ஒல்லியான பனிச்சென்ற வெள்ளை உருவமும், அலட்டல் அற்ற அமைதித் தன்மையும், யாருக்குத்தான் பிடிக்காது. அவை புலனாய்வுப் பணிக்கான சாதகமான கூறுகள். ஆரம்ப புலனாய்வுப் பணிக்கான களங்களாக இவனுக்கு நல்லூர், பாசையூர், குருநகர் பிரதேசங்கள் அமைந்திருந்தன.

1994 விடுதலைப்போர் வீரியமும், வீச்சும் பெற்றிருந்த காலம். விடுதலை வீச்சை, மூச்சை, அதன் வேரையே தன் வீட்டு நலனுக்காக, எஜமானிய இருப்புக்காக அரித்துவிடத் துணிந்த அயல் "வீட்டுக் கறையான்"களின் கரங்களை முறியடிக்க, முறித்தெறிய ஒழுங்கமைக்கப்பட்ட புலனாய்வுப் பணியில் 'மனிதனுக்கு இதயம்' போன்ற அலுவலகப்பணி இவனுடையது. புலனாய்வுப் பணியில் சிறு தகவல்கூட பெரும் முடிச்சை அவிட்டுவிடும். போலித் தகவல்கள் கண்ணுக்குத் தெரியாமலேயே முடிச்சுக்களைப்போட்டு ஆபத்துக்களையும் உண்டுபண்ணிவிடும் - பாலையும் தண்ணீரையும் அன்னத்தால் வேறுபடுத்த முடியுமோ இல்லையோ புலனாய்வாளன் உண்மையையும் பொய்மையையும் வேறுபடுத்தித்தான் ஆகவேண்டும்.



மேல்நிலைப் புலனாய்வுப் பொறுப்பாளர்

**லெப்.கேணல் செந்தமிழ்ச்செல்வன்**

(சிவபாக்கியநாதன்–பிரபாகரன்)

யாழ்ப்பாணம்

புலனாய்வுப் பொறுப்பாளரின் பார்வையில், "சிறந்த புலனாய்வாளனின் வரலாறு என்பது, அவன் சேகரித்து, ஆய்ந்து எழுதிய தகவல்கள் மற்றும் ஆவணங்கள், விடுதலைப்போரின் வளர்ச்சிக்கு, தமிழீழ கட்டுமாணத்திற்கு எத்துணை துணை புரிகிறதோ, அதுவே அவனது வரலாறாகின்றது" என்ற அவரின் பார்வையில் தன் அலுவலகப் பணிகளை, தூரநோக்குடன் காலம் கடந்தும் பயன்தரக்கூடியதாய் உண்மை பொய் அறிந்து, தகவல்களை கோவையாக்கி, தன் முக்கியத்துவம் விளங்கி, தன் பணி முக்கியத்துவம் விளங்கி புலர்வே இல்லாப் பொழுதுகளில் பணியாற்றியதை இவன் பொறுப்பாளர் இன்றும் சிந்தித்து நினைவு கூருகிறார். (இரகசியம் என்பதால் விரித்துரைக்க முடியவில்லை)

நிர்வாகச் செயற்பாட்டின் பெறுபேறுகளை கோவையாக்குதல், தகவல்களைப் படிவங்களில் பூர்த்திசெய்தல், தேவையானவற்றினைப் பெறல்... என நீளும் அலுவலகப் பணிகளை, தூரநோக்குடன் காலங்கடந்தும் பயன்தரக்கூடியதாய், புதிதாய் வரும் பொறுப்பாளன், போராளி பயன்படுத்தக் கூடியதாய் உண்மை, பொய்மை அறிந்து கோவையாக்கி, தன் பணி முக்கியத்துவம் விளங்கி புலர்வே இல்லாப் பொழுதுகளில் பணியாற்றியதை இவன் பொறுப்பாளர் இன்றும் சிந்தித்து நினைவு கூறுகிறார்.

வழங்கப்பட்ட பணி முடிவடையவில்லையெனின் முகாமிலிருந்து ஐந்நூறு மீற்றர் முன்னுக்கே உந்துருளியின் இயக்கத்தை நிறுத்தி ஓசையின்றி அதனை உருட்டி முகாம்வந்து தன் பணி முடித்து மீண்டும் அதனை உருட்டி ஐந்நூறு மீற்றருக்கு அப்பால் இயக்கி தன் பணிக்காக விரையும் இவன் செயல் பொறுப்பாளருக்குக் கொடுக்கும் மதிப்புக்கப்பால், தன் பணிக்குக் கொடுக்கும் மதிப்பையே முன் நிறுத்தும்.

"தம்பிமாரே, சண்டைக்குபோக விருப்பமான ஆட்கள் கையை உயத்துங்கோ" புலனாய்வுப் பணியில் சலிப்பு வந்துவிட்டதா? என பார்ப்பதற்கான பொறுப்பாளரின் உத்தி இது. தயங்கித் தயங்கி ஆளையாள் பார்த்து கைகள் உயரும். 'ஒரு நாள்' உயர்ந்த கைகளினுள் இவனது கையும் ஒன்றாய் இருந்தது. பிறகென்ன, வழமைபோல் கடற்கரை வெட்டையில் தகதகக்கும் சுடு மணலில் உருட்டி உருட்டி சண்டைக்கான பயிற்சிகள் நடைபெறும். ஆனால் இறுதியில் சண்டைக்கான வாய்ப்பு மட்டும் கிடைக்காது போகும்.

10.03.95 மீண்டும் ஒரு தரம் யாழ்மண்ணை ஆக்கிரமிக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட சிங்களப் படை நடவடிக்கையான இடிமுழக்கம் சமரில் வீரச்சாவடைந்த போராளிகளின் வித்துடலைப் பார்ப்பதற்காக இவன் சென்றபோதுதான் தற்செயலாக தனது தம்பி லெப்.நீலவண்ணன் யாழ் மண்ணை தக்கவைக்கும் சமரில் வீரச்சாவைத் தழுவியிருந்தமையைக் கண்டான். சக போராளி என்பதற்கப்பால் இடுப்பில் சுமந்து திரிந்த கடைசித் தம்பியுமல்லவா? இறுதியில் அவனைத் தோளில் சுமந்து செல்லக் கூட அன்றைய போர்ச்சூழல் இவனுக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை.

1996,1997 புலிகளே இல்லாத யாழ்ப்பாணத்தை சிங்களத் தலைமை கனவுகண்டு ஆக்கிரமித்திருந்த காலம். ஒடுங்கிய குடாப் பரப்பைச்சூழ படைவேலி அமைத்து, சந்திக்கு இரு படைத்தளம் அமைத்து முழத்துக்கு ஒரு சிங்களப் படைவீரனை காவலுக்கு விட்டிருந்த நேரம். யாழ்மண் குடாவாக விரிந்து ஒடுங்கியமை பாதுகாப்பு ரீதியில் சிங்களப்படைக்கு அதிகம் சாதகமாயிற்று.

தலைவர் அவர்கள் குறிப்பிடுவதுபோல் எந்தப் பலத்திலும் பலவீனம் இருந்திடாமலா போய்விடும். "பலவீனம் இல்லாவிட்டாலும் பலம் உடைத்து உட்புகுவோம்" என்ற விடுதலை வீரர்களின் வீச்சை சிங்களத் தலைமையின் 'ஆக்கிரமிப்பு மனோபாவம்' உணரவிடவில்லை.

துப்பாக்கியுடன் கெரில்லா வீரனாக யாழ் மண்ணில் நடவடிக்கையில் ஈடுபடுவது அதிக ஆபத்தை உருவாக்கி இருந்த காலத்தில் மக்களுடன் மக்களாக, அவர்களின் புதல்வர்களாக, புலனாய்வாளர்களாக தேவை ஏற்படும்போது மட்டும் கைத்துப்பாக்கியுடன் தாக்குதலாளர்களாக தயார்படுத்தப்பட்ட புலனாய்வு அணியில் இவன் முதன்மையானவன். பிறந்து தவழ்ந்து வளர்ந்த மண்ணில் ஒவ்வொரு வீதிகளிலும், ஒழுங்கைகளிலும் புலனாய்வு செய்வதற்காக, ஆக்கிரமிப்பாளனின் பிடரியில் அடிப்பதற்காக புலனாய்வு, படையியற் பயிற்சிக்காக முல்லைத்தீவுக்குச் சென்றான்.


என்ன பயிற்சி? கரும்புலி வீரனுக்குரிய பயிற்சி. எதிரியை அடித்து விழுத்தி துப்பாக்கியை பறித்தெடுக்கும் பயிற்சி, உணவு உறக்கத்தை மறந்து சகிப்புடன் மறைந்திருக்கும் பயிற்சி என நீண்டுகொண்டே சென்ற பயிற்சியில் ஒருநாள் ஓய்வுப் பொழுதில்...

இவனுடன் அன்பு வாத்தி உந்துருளியில் புதுக்குடியிருப்புக்கு வந்துகொண்டிருக்க பெற்றோல் தீரும் நிலை, பல ஒழுங்கைகள் சுற்றி ஒரு வீட்டின் வாசலில் உந்துருளியை நிறுத்தியவன், "மாஸ்ரர் ஆதரவாளர் ஒருவரைச் சந்திக்கவேணும் குறை நினைக்காமல் வாசலில் நில்லுங்கோ" போனவன் விரைவாகவே திரும்பினான். "பெற்றோல் தீரப்போகுது ஒழுங்கைகள் எல்லாம் விட்டுக் கொண்டோடுகிறீர்கள்..." உந்துருளியில் பின்னால் இருந்து அன்பு வாத்தி கேட்க "பெற்றோல் அடிச்சாச்சு மாஸ்ரர், உங்களை கூட்டிப்போனால் சனம் உங்கடை முகத்தைக் காண, பிறகு என்னைச் சாட்டி நீங்கள் பெற்றோல் அடிக்க...", "வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு" அன்பு வாத்திக்கு உறைத்தது.

கூப்பிடு தூரத்திலிருந்தும் யாழ் மண்ணுக்குப் பயணிப்பதாயின் ஏதாவது ஒரு கடல் வழியையே பயன்படுத்தவேண்டும். ஆழமான கடற்பகுதி அதற்கு வாய்ப்பளிப்பதில்லை. ஆதலால் உப்பு ஏரிகளே தெரிவு செய்யப்படும். 'குல்லா' என அழைக்கப்படும் சிறு ஓடங்களின் ஆதரவுடன் தற்துணிவை துடுப்பாக்கி பயணம் தொடரும். வயிறு விழுங்கி ஆறு (நீரோட்டம்) சில வேளை வீச்சாய் ஓடும். அல்லது சாதுவாய் ஓடும். வீசும் கடுங்காற்றைக் கடந்து இருட்டைக் கிழித்து ஓடம் நகரும்.

அன்றும் அப்படியான பயணம்தான். "அண்ணை, இடுப்பளவு தண்ணீர் வந்திட்டா எங்களை இறக்கிவிடுங்கோ. நாங்கள் தரையேறும்வரை எங்களுக்காகக் காத்திருங்கோ, சிலவேளை ஆமி சுடத்தொடங்கினால் நாங்கள் எப்படியும் தப்பிவரப் பார்ப்பம். அப்படி வெடிச்சத்தம் ஏதும் கேட்காட்டால் கரையில் நிற்கிற பெடியளிட்டை நாங்கள் சுகமாய் போய்ச் சேர்ந்ததாய் சொல்லுங்கோ" பொறுப்பாய் செல்லும் இவன்தான் அப்படிக் கூறுவான். செய்திக்காக ஓட்டி காத்திருக்க அவர்களின் பயணம் தொடரும். சிங்களப் படைகளின் அதிவெளிச்ச மின்குமிழ்கள் (FOCUS LIGHT) ஏரிப்பரப்பில் ஒளியைப் பாய்ச்சும். கண்கள் மட்டுமே வெளியே தெரிய நீருக்குள் மறைந்து கொள்வார்கள். இருள்கவிய மீண்டும் பயணம் தொடரும். கரையை அண்மிக்க கூரிய கத்திபோல் நீண்டிருக்கும் 'கவாட்டி' ஊறிய பாதங்களை பதம் பார்க்க ஊறிவிறைத்து உறைந்து போன பாதங்களுக்கு வெட்டுவதும் தெரியா குத்துவதும் தெரியா, ஆனால் குருதி கொப்பளிக்கும். அமைதியாக நகர்ந்து கரையேற ஏதோ ஒரு அசுமாத்தம் படையினரை விளிப்படையவைக்க அவர்கள் துப்பாக்கிகள் சடசடக்கத் தொடங்கியது. காதை கூர்மைப் படுத்திக் காத்திருக்கும் ஓட்டிக்கு விடயம் விளங்க சத்தம் வரும் திசையை நோக்கி ஓடத்தைச் செலுத்த, போனவர்கள் மீண்டு வந்தார்கள். தொடக்கப் புள்ளிக்கு வந்துசேர, உப்பூறிய றொட்டிகள் ஒருநாளுமே சுவைத்திடாத சுவையைத்தர அதைச் சாப்பிட விடாமல் நுளம்புகள் மோசம் செய்தன. அவற்றை விரட்டுவதற்கு இருந்த ஒரே வழி அவர்களது பழைய செருப்புகள். செருப்புகள் நெருப்பில் எரியத்தொடங்க.. கடைசியாக எரிந்து கொண்டிருந்தது இவனது ஒற்றைச் செருப்பு. சூரியன் பகலைத்தர

(தொடர்ச்சி 10ம் பக்கம்)



# ஓயாது தொடரும் பணி

கைகள் தன்னிச்சையாக இயங்கிக்கொண்டிருந்தன. மண்வெட்டி சீராக உயர்ந்து பதிந்து கொத்தி மண்ணை அள்ளிப் பின்புறமாக வீசிக்கொண்டிருந்தது. உயருவதும் பதிவதும் மண்ணை வீசுவதும் ஒரு லயத்தோடு, கலை நயத்தோடு தாளக் கட்டோடு ஒரு அழகிய... அல்ல, அல்ல கம்பீரமான நடனமாக, குழு நடனமாக... எனக்கு வலமும் இடமும் முன்னும் பின்னும் நீண்ட வரிசையில் நிரை நிரையாக மண்வெட்டிகள் சீராக உயருவதும் பதிவதும் மண்ணைப் பின்புறம் வீசுவதுமாக...

குழிகள் சீராக வெட்டப்பட்டுக்கொண்டிருந்தன. உறங்கிக்கொண்டிருப்பவர்களின் வீடுகள் அவை. போரரங்குகள் அகன்று பரந்திருந்த நாட்களில் நாள்தோறும் ஒவ்வொருவராக எங்களைவிட்டுப் பிரிந்து இங்குவந்து உறங்குபவர்களிடம் நீண்ட நாட்களின்பின் வந்து நிற்கின்றோம். எங்களோடு கூடநின்று காப்பரண்களை வெட்டிக்கொண்டிருந்தபோது, கடும் வேலைசெய்த களைப்பில் ஒருபிடி உணவை வாயருகே கொண்டு போனபோது, குடிநீர் எடுப்பதற்காகத் தொலைதூரக் கிணறுகளைத் தேடிப் போனபோது, எறிகணைவீச்சில், பதுங்கிச் சூட்டில், பதுங்கித் தாக்குதலில்...

நில மீட்பு நடவடிக்கைகளில் ஒவ்வொருமுறை நாம் முன்னேறியபோதும், நிலம் விழுங்கவென முன்னகரும் இராணுவத்திடம் ஓரங்குல நிலமும் விடுபடக்கூடாதென எதிர்ச் சமராடிய நேரங்களிலும்,

"விடாதபிடி"

என்ற இறுதிக் கட்டளையை எமக்கு வழங்கிவிட்டுப் போனவர்களைச் சந்திக்க நீண்ட நாட்களின் பின்னர் வந்திருக்கிறோம். நாமாக எங்கே வந்தோம்? காலம் எம்மை அழைத்துவந்து விட்டிருக்கின்றது.

கூட நின்றவளின் வித்துடலைத் தொட்டழவும் நேரமின்றி, அதுவரை நேரமும் போரணிகளாகச் சண்டை பிடித்துக்கொண்டிருந்த நாங்களே, சண்டை முடிந்தவுடன் உதவியணிகளாக உருமாறி வித்துடல்களையும், வீழ்ந்தவர்களதும் இராணுவத்தினதும் சுடுபொறிகளையும் சுமந்து பின்னரங்குக்கு அனுப்பி, இராணுவச் சடலங்களை அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு அனுப்பிவிட்டு, இடிந்துபோய்க்கிடக்கின்ற காப்பரண்களை மீள வெட்டி, குற்றிகளால் மூடி, மண்மூடை அடுக்கி, வேலியை அடைத்து முடிப்பதற்கிடையில் இராணுவம் மறுபடி முன்னேறமுயல, அடுத்த சண்டை தொடங்கிவிடும். பிரிந்துபோனவர்களின் விதை குழிகளில் ஒருபிடி மண்போடவோ, அன்றில்லாவிட்டாலும் ஆறுதலாக ஒருநாள் போய் மலர் சொரியவோ எம்மை சிங்கள இராணுவம் ஒருபோதும் அனுமதிக்கவில்லை.

"எங்கட சனத்தைத் தங்கட வீடுகளில இருக்க விடேல்லை எண்டதையும் விட, எங்களோடை நிண்ட பிள்ளையளின்ர வீடுகளுக்குப் போய், அம்மாமாரோட ஆறுதலா ஒரு வசனம் சொல்லிவிட்டு வரக்கூட விடேல்லை எண்டதாலைதான் எனக்கு ஆமியிலை கடுங்கோபம்"

என்று சொல்லிச் சென்றவரின் வீட்டுக்குப்போய் அவர்களின் அம்மாவிடம் ஆறுதலாக ஒரு வசனம் கதைத்து வருவதற்கும் இராணுவம் எம்மை அனுமதிக்கவில்லை.

வீடுகளில் விளையாடிக்கொண்டிருந்த எங்களைப் போர்முனைக்கு இழுத்துவந்துவிட்ட அதே காலம்தான், போரரங்கிலிருந்த எங்களை இப்போது துயில் நிலத்துக்கு அழைத்து வந்திருக்கின்றது. மேஜர் பரா, மேஜர் ஹேமா, குவேனி... மண்ணால் மூடப்பட்டு பெயர்ப் பலகைகள் நாட்டப்பட்டு நிரை நிரையாக உறங்கிக்கொண்டிருப்பவர்களின் உறக்கத்தை இங்கே சில நாட்களாக ஒலித்துக்கொண்டிருக்கின்ற எங்கள் மண்வெட்டிகளின் சத்தம் குழப்பிக்கொண்டிருக்கும்.

மண்வெட்டிச் சத்தம் மட்டுமா? துயில் நிலத்தின் வழமையை மீறுகின்ற பேரொலிகளை, அடிக்கடி வந்து மண்ணை இறக்கிக்கொண்டிருக்கும் இழுபொறிகளும், ஒவ்வொருவருக்குமான துயிலும் வீடுகளைக் கட்டிக்கொண்டிருக்கும் பணியாளர்களின் சாந்தகப்பைகளும், அவர்கள் வேலை செய்வதற்கென மண்ணையும் சீமெந்தையும் குழைத்து கலவையைச் சுமந்து கொடுத்துக்கொண்டிருக்கும் எம்மவர்களும் என்று எல்லோருமே எழுப்பிக்கொண்டிருந்தோம்.

"என்ன தெரியாது எங்களுக்கு? மேசன்வேலை, தச்சுவேலை, வயறிங்வேலை எது வேண்டுமானாலும் இங்கு செய்து கொடுக்கப்படும்"

என்ற விளம்பர வசனங்களை முழங்கியவாறு மேஜர் பமிலா 1996 புத்தாண்டை வரவேற்பதற்கான கலை நிகழ்வுகளை அரங்கேற்றுவதற்குரிய மேடையை புலோப்பளையிலிருந்த எங்களின் 1.3 தளத்தில் அமைத்துக்கொண்டிருந்த காட்சி, மனதின் நினைவு அடுக்குகளிலிருந்து மெல்ல மேலெழுந்தது. பமிலாவின் தலைமையில் கனரக ஆயுதப் பயிற்சி ஆசிரியர்கள் அணி துரித கதியில் இயங்கிக்கொண்டிருந்தது. மேஜர் கண்ணகி, மேஜர் மாதுரி, மேஜர் தணிகா என்ற மலையான மலைகளெல்லாம் சேர்ந்து மரக்குற்றிகளை இறுக்கி, மண்ணடித்து, மறைப்புக் கட்டி, வண்ணவிளக்குகளைப் பூட்டி மேடையை அழகுற வடிவமைக்க அதிலேறி ஆடுபவர்கள் ஆட, பாடுபவர்கள் பாட...

எங்கே எல்லோரும்?

நீண்டு தொடர்ந்த களங்களில் எல்லோருமே உறங்கிப்போக, உறங்கிய எல்லோருக்குமான துயில் வீடுகளை அமைக்கும் பணியில், எஞ்சியிருக்கும் எல்லோரும்.

"அப்பாடா, கயல்விழியின்ரை வரிசை இண்டையோடை வெட்டி முடிஞ்சிடும். என்ன?

தலை, கை, காலெல்லாம் மண் ஒட்டியபடி வந்த ஆனந்தி கேட்டார். கயல்விழியின் வரிசை, அறிவரசியின் வரிசை என்று குறிப்பிட்டுச் சொல்லக்கூடியளவுக்கு ஒவ்வொரு நிரையிலும் எங்களோடு நின்றவர்கள் பலபேர் இருந்தார்கள். துயில் நிலத்தின் இறுதி வணக்கப்பீடத்தைச் சூழ முக்கால் வட்டவடிவில் அமைக்கப்பட்ட வெவ்வேறு நிரைகளில் எங்களின் தோழிகள் பிரிந்து பிரிந்து உறங்கிக்கொண்டிருந்தார்கள். லெப். தோகைமயில், மேஜர் மிதுலா, 2ம் லெப். அருளரசி, மேஜர் தனா, கப்டன் மேகனா...

எப்போதுமே நாங்கள் ஒன்றாக இருந்ததில்லை. எம்மைப் பிரித்து வைத்திருந்தவை போர் நடந்த நாட்களில் பரந்து விரிந்திருந்த களமுனைகள் மட்டுமல்ல. துயில் நிலங்களும்தான். அளம்பில் துயில் நிலத்தில் சிலர், முள்ளியவளையில் சிலர், விசுவமடுவில், ஆலங்குளத்தில், வன்னிவிளாங்குளத்தில், முழங்காவிலில், ஆண்டான்குளத்தில் என்று எங்கேதான் இல்லை அவர்கள்?

மனம் தன்பாட்டில் புறப்பட்டு எங்கெங்கோ அலைந்து கொண்டிருக்க, கைகள் தன்னிச்சையாக இயங்கிக்கொண்டிருந்தன. மண்வெட்டி சீராக உயர்ந்து, பதிந்து, கொத்தி மண்ணை அள்ளிப் பின்புறமாக வீசிக்கொண்டிருந்தது. இன்று நேற்றா எம் கைகள் மண்ணை வெட்டுகின்றன? எப்போது நாம் முதலில் மண்வெட்டியைத் தொட்டோம்? ம்... படைய தொடக்கப்பயிற்சியை முடித்து கல்லூரியிலிருந்து வெளியேறிய மறுநாளே நாம், களமுனை ஒன்றில் எமக்கான காப்பரணை வெட்டிக்கொண்டிருந்தோம்.



மண்வெட்டியைப் பிடித்தால் என்ன செய்யவேண்டும் என்று கைகளுக்குத் தெரியும். முழுப் புலனையும் அவ்வேலையில் செலுத்தவேண்டிய தேவை எங்களுக்கு இல்லை. போரரங்கில் பல தடவைகள் காப்பரண்களை வெட்டியவாறே கூடநின்ற புதியவர்களுக்கு தந்திரோபாய வகுப்புகளை எடுத்திருக்கின்றோம். பல விடயங்களைக் கற்பித்திருக்கின்றோம். கைகள் மண்ணை வெட்டும். கண்கள் முன்னரங்கை அவதானிக்கும். காதுகள் சருகுகள் விழுகின்ற ஒலியைக்கூட உள்வாங்கிக் கொண்டிருக்கும். வாய் வகுப்பெடுத்துக் கொண்டிருக்கும். வெட்டப்படுகின்ற காப்பரணின் ஆழம் கூடிக்கொண்டே போகும்.

இரவிலே காவற்கடமையைச் சரிபார்த்தவாறு போய்க்கொண்டிருக்கும் நேரங்களில் கூட, நடக்கும்போது சுடுபொறியைப் பற்றிப்பிடிப்பது எப்படி என்றும், இருளில் நீண்ட தூரத்தைக் கூர்ந்து அவதானிப்பதற்கேற்ப கண்களைப் பழக்கப்படுத்துவது பற்றியும், கமுக்கமான நகர்வு என்று

இன்னும் பல விடயங்களையும் தன்கூட நடந்து வருபவர் எவரோ, அவருக்குச் சொல்லிக்கொண்டே வருவது லெப்.கேணல் மைதிலியின் வழமை.

குறிபார்த்துச் சுடும்போது கையாளவேண்டிய உத்திகளை 'வெற்றிநிச்சயம்' எதிர் நடவடிக்கைக் களமுனையில் வைத்தே புதியவர்களுக்குச் சொல்லிக் கொடுத்திருந்தார் லெப்.கேணல் தாட்சாயினி.

வேலை செய்வதற்கு வேறாகவும் கற்பித்தலுக்கு வேறாகவும் நேரத்தை ஒதுக்கத்தான் எங்களுக்கு விருப்பம். ஆனால் நேரம்தான் இருக்கவில்லை. பயிற்சி ஆசிரியர்களாக இருந்த மேஜர் மிதுலா, மேஜர் பரா, லெப்.கேணல் காவியா முதலானோர் பல தடவைகள் கொம்பனிகளைப் பொறுப்பேற்று நடத்தியிருக்கின்றார்கள். கட்டளையதிகாரிகளாக இருந்தவாறே மேஜர் இளம்பிறை, மேஜர் சந்திரா என்று பலர் சமகாலத்தில் பயிற்றுனர்களாகவும் உருமாறி,

"மண்வெட்டியை இப்படிப் பிடி"

"காப்பரணை இப்படி வெட்டு"

என்றெங்களை வழிநடத்தி, ஒருவர் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பணிகளை மனித சக்திக்கும் அப்பாற்பட்டுச் சுமந்ததால்தானே ஒன்றரை வருடகால வெற்றிநிச்சயம் படைநகர்வை எங்களால் முறியடிக்க முடிந்தது. இல்லாவிட்டால் இலட்சக்கணக்கில் முன்னேறிய படையினரை மிகச்சில ஆயிரம் போராளிகளால் எப்படித் தடுத்திருக்க முடியும்? மூடப்பட்டிருந்த நெடுஞ்சாலையை எப்படித் திறந்துவிட்டிருக்க முடியும்?

கருநிறப் பாம்பாக நீண்டு கிடக்கும் யாழ்.நெடுஞ்சாலை வழியே சிறிலங்கா இராணுவத்தினன் படைய ஊர்த்திகளுக்குப் பதிலாக மக்களின் ஊர்திகள் போய்வர வழிவகுத்தவர்களில் பலர் உறங்கிக்கொண்டிருக்கின்றார்கள். எஞ்சியிருக்கும் நாங்கள் திறக்கப்பட்ட நெடுஞ்சாலையின் புது வடிவைக் காணவும் நேரமற்று...

கட்டி முடிக்கப்பட்ட கல்லறைகள் இராணுவ அணிவகுப்பில் பங்குகொள்ளும் வீரர்களைப்போலே சம அளவு இடைவெளியில் சீரான உயரத்தில் நிரை நிரையாகத் தெரிந்தன. இன்னமும் வேலை முடிக்கவேண்டிய நிரைகள் மிகச்சிலவே. எனினும் மிக வேகமாக முடித்தாகவேண்டும். நெருங்கிக்கொண்டிருப்பது மாவீரர் நாள் மட்டுமல்ல. மழைகாலமும்தான்.

போர் இடைநிறுத்தப்பட்டு இரண்டு வருடங்களாகின்றபோதும் எங்களால் ஓய்வெடுக்க முடியவில்லை என்று நாம் சொன்னால், யாருமே நம்பப்போவதில்லை. ஆனால் எப்போதோ தூக்கிய மண்வெட்டியை இதோ இன்னமும்தான் கீழே வைக்க முடியவில்லையே.

வெற்றி நிச்சயம் நடவடிக்கைப் படையினரை புளியங்குளத்துக்குமப்பால் நாம் தடுத்துவைத்திருந்த நாட்களில் ஒருநாள் மேஜர் துஷா, முன்னரங்கக் காப்பரண்களைப் பார்வையிட்டவாறே நடந்துகொண்டிருந்த எங்களின் சிறப்புத் தளபதியிடம் ஒரு வேண்டுகோளை விடுத்தார்.

"அக்கா, எனக்கு ஒருநாள் லீவு தருவீங்களா?"

"என்ன விடயம்?"

"நான் பின்னுக்கிருக்கிற மெயினுக்குப் போகப்போறன்"

சிறப்புத் தளபதிக்கு வியப்பு. முன்னரங்கிலிருந்து குறிப்பிட்ட சில நூறு மீற்றர்கள் பின்னாலிருக்கும் கட்டளைப்பீடம் ஒன்றுக்குப் போய் வருவதற்கு எதற்கு விடுமுறை? அந்த ஒருநாள் விடுமுறையில் அங்கே துஷா என்ன செய்யப்போகின்றார்?

புதிரோடு தன்னைப் பார்த்த சிறப்புத் தளபதியிடம் துஷா சொன்னார்.

"ஒழுங்கா நித்திரைகொண்டு மூன்று மாசமாச்சுது. ஒரு நாளாவது நிம்மதியா பின்னுக்கிருக்கிற மெயினில போய் நித்திரை கொள்ளப்போறன்."

மனம் வலித்தது. அது துஷாவின் வேண்டுகோள் மட்டும் அல்ல வெற்றி நிச்சயம் எதிர் நடவடிக்கைக் களமுனையில் மழையில் நனைந்து, வெயிலில் உலர்ந்து, பனியில் நடுங்கியவாறு எதிர்ச்சமர் புரிந்த ஆயிரமாயிரம் போராளிகளின் ஆன்மாக்களது வேண்டுகோள்.

ஓய்வெடுக்கச் சில நிமிடங்களைத் தானும் தராத நெருக்கடி மிகுந்த அந்தப் போர்க்களம் துஷாவின் வேண்டுகோளுக்குச் செவிசாய்க்க மறுத்தது.

இன்னமும்தான், போர் ஓய்ந்து விட்டதாக உலகம் நம்புகின்ற இன்றைய நாளில்கூட ஓய்வெடுக்க நேரமற்று...



போர் எங்கே ஓய்ந்தது? சுடுகலனும் சுடுகலனும் அமைதி பேணிக்கொண்டால், போர் ஓய்ந்துவிட்டதாகப் பொருள்படுமா?

வானம் இருளுவதுபோல் இருந்தது. நிமிர்ந்து பார்த்தேன். கருமுகில்கள் ஒன்றுகூடிக்கொண்டிருந்தன. இரவு பெரும்பாலும் மழை பெய்யக்கூடும். போர் இடைநிறுத்தக் காலத்தின்பின் இது இரண்டாவது மழைகாலம். போன மாரிக்கு நாங்கள் பளை, பூநகரி, நாகர்கோயில் முன்னரங்கப் பகுதிகளில் நின்றோம். அந்த மாரியின் முதல் நாளை மறக்கவே முடியாது.

## மலைமகள்

முதலில் வீசிய குளிர்காற்று கொட்டிலைப் பிடுங்கிக் கீழேபோட்டது. பத்து நிமிடங்களுக்குள்ளாகவே தூறத்தொடங்கிய மழை வேகமாகப் பலத்து. இரவு முழுதும் விடாமல் பெய்ததில் எல்லோருமே தொப்பலாக நனைந்து போயிருந்தோம்.

கூடாரத் துணியை, பாயை, உரப்பையை இன்னும் கையில் கிடைத்தவற்றையெல்லாம் எடுத்துப் பதுங்குகுழி வாயிலை மூட முயன்று கொண்டிருந்தோம். மண்வெட்டிகளால் மண்ணை வாரி வாரி அள்ளி வாயிற் புறத்தையும் சூட்டுத் துவாரப் பகுதிகளையும் மூட முன்னரே வெள்ளம் குபு குபுவென உள்நுழைந்தது.

பிறகென்ன? காப்பரண்களுள் வெள்ளம் புகுந்துகொள்ள, நாங்களெல்லோரும் வெளியே நிற்க வேண்டியதாகப்போயிற்று. போர் நடந்தாலென்ன, ஓய்ந்தாலென்ன, மழைகாலங்களில் நனைவதும் வெயில் காலங்களில் காய்வதும் காலம் எமக்குத் தந்த மிகப்பெரிய பரிசல்லவா?

நேற்றும் நேற்று முன்தினமும் ஒரே புழுக்கமாக இருந்தது. எங்கோ மழை பெய்திருக்கவேண்டும். சிலவேளை பளையாகவும் இருக்கக்கூடும். அங்கிருந்து இன்றிரவு ஒரு பிளாட்டூனுடன் புகழ்ச்செல்வி வருவார் எங்களை மாற்றிவிட...

மாற்றிவிட.........நினைத்தால் சிரிப்பாக இருக்கின்றது. நாலா திசையிலும் விரிந்த போரரங்குகளில் அனல் வீசிக்கொண்டிருந்த நாட்களில் மாற்றிவிட யாருமற்று நாங்களெல்லோருமே நாட்கணக்காகக் குளிக்காமல், உடைகளை மட்டுமாவது மாற்றித் தோய்க்கவும் முடியாமல், குடிநீரைக்கூட எடுத்துவர வழியற்று, காயமடைந்தும் வீரச்சாவடைந்தும் வெளியேறியவர்களின் வெற்றிடங்களை நிரப்பவும் யாருமற்று வரலாற்றுக் கடமையைத் தலைமேல் சுமந்து கண் விழித்திருந்தோம்.

இப்போது மட்டும் என்ன இடம் மாறி ஓய்வெடுக்கவா போகின்றோம்? அவர்கள் இங்கு வந்து உறங்கும் தோழர்களுக்குத் துயில் வீடுகள் கட்ட, நாங்கள் முன்னரங்கக் காவலரண்களுக்குப் போய் இவர்கள் விட்டுவந்த குறை வேலையைச் செய்ய...

"ஆ எங்கடை பஸ் வருகுது"

எங்களில் ஒருத்தி எழுப்பிய ஒலியில் கவனம் கலைந்து நிமிர்ந்தபோது; பேருந்திலிருந்து இறங்கிய புகழ்ச்செல்வி என்னைநோக்கி வந்துகொண்டிருந்தார்.

"என்ன விடுதலை, நாங்கள் வந்திருக்கவே தேவையில்லைப்போல இருக்குது. நீங்களே எல்லா வேலையையும் முடிச்சிட்டீங்கள். இன்னும் ஒரு வரிசைதான் வெட்டிறதுக்கு இருக்கு"

என்ற புகழ்ச்செல்வியைப் பார்த்துப் புன்னகைத்த நான்,

"மாவீரர் நாளுக்கிடையில நாங்கள் முழு வேலையையும் முடிக்க வேணுமெல்லோ?" என்றேன்.

என்னருகே நின்றபடியே துயில் நிலம் முழுவதையும் பார்வையால் அளந்தவர் சிறிது நேரம் ஒன்றுமே கதைக்காமல் நான் வெட்டிய குழியை ஊன்றிப் பார்த்தார்.

"எங்களோடை சேர்ந்து சண்டையில பங்கர் வெட்டின எல்லாருக்கும், நாங்கள் இப்ப பங்கர் வெட்டிறம்"

என்றார் இறுகிப்போன முகத்துடன். சட்டென நான் பேச்சைத் திசை மாற்றினேன்.


"என்ன மாதிரி? பளையில மழையோ?"

"அதையேன் கேக்கிறாய்? முந்தநாள் பகல் திடீரென்று கொஞ்சநேரம் பெய்தது. மழை பெய்தா ஆரெல்லாம் எங்களைத்தேடி வருவினம் எண்டு தெரியும்தானே. தடிகள் கம்புகளெல்லாத்தோடையும் ரெடியா இருந்தம். மழை விட்டுக் கொஞ்சத்தாலை பாம்புகள், தேளுகள் எல்லாம் வெளிக்கிட்டு வர, அடி அடியெண்டு அடிச்சுக் களைச்சுப் போனம். அப்பிடியிருந்தும் ரெண்டு பேருக்குத் தேள் கொட்டீட்டுது. நல்லவேளையா பாம்பிட்டை ஒருதரும் கடி வாங்கேல்லை. ஆனா உன்ரை பங்கருக்கை ஒரு பாம்பு போட்டுதெண்டு அருந்ததி வெளியில நிண்டுகொண்டு எல்லா ஓட்டைக்குள்ளாலையும் தடியை விட்டு ஆட்டிப் பாத்தாள். ஆள் வெளியாலை வரேல்லை. உன்னைப் பாத்துக்கொண்டு உள்ளுக்கையே இருக்கிறார். நீயே போய்க் கதைச்சுக் கொள்" என்றார் புகழ்ச்செல்வி அடக்கமாட்டாத சிரிப்புடன்.

சரியாகப் போயிற்று இன்றிரவு மழை பெய்தாலென்ன, பெய்யாவிட்டாலென்ன, நான் வெளியில்தான் படுக்கவேண்டியிருக்கும். மழையில்லாவிட்டால், நட்சத்திரங்களை எண்ணலாம். பெய்தால் மழைத்துளிகளை எண்ணலாம்.

"உன்ரை ரீமை ஒழுங்குபடுத்தி பஸ்ஸில ஏத்து. நான் கொஞ்சநேரம் வெட்டிவிட்டு வாறன்"

என்றவாறு என் கையிலிருந்த மண்வெட்டியைப் புகழ்ச்செல்வி வாங்கினார்.



(7ம் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றைச் செருப்பு மட்டுமே எஞ்சியது. இன்னொரு இரவில் இவர்கள் தங்கள் பயணத்தில் வெற்றிகண்டனர்.

லெப்.கேணல் சிவனேசனுடன் வலிகாமம் சென்றவன், தாம் இரவு தங்கவேண்டிய கோண்டாவில் ஆதரவாளரின் வீட்டினை பல மணிநேரம் தேடியும், கண்டுகொள்ள முடியவில்லை. நாய்கள் குரைக்கத் தொடங்கியிருந்தன. "இரவில் நடமாடுவது ஆபத்தானது" என உணர்ந்த இருவரும் முன்பின் அறிமுகம் இல்லாத இருவேறு வீடுகளில் கதவினைத் தட்ட, அந்த இரவில் ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில் யார்தான் கதவினைத் திறப்பர்? பிறகென்ன வாசல் படிகளில் அரைகுறை உறக்கத்தில் நம்பிக்கையுடன்.. காலையில் வீட்டாருக்கு அதிர்ச்சி, அவர்கள் தங்களை அறிமுகப்படுத்த வீட்டாரின் மனப்பீதி இன்னும் அதிகமானது. தாம் தேடிவந்த வீட்டினை விசாரிப்பது புலனாய்வுச் சிக்கல். ஒருவாறாய் கோண்டாவில் சந்தியில் 'றோசாப்பூ' என்னும் குறியீட்டுப் பெயரைக்கொண்ட ஆதரவாளனைக் கண்டபோது "கடவுளே உங்களுக்கு நல்ல காலம்தான், என்ரை வீட்டை உடைச்சு ஆமி எல்லோ இருக்கிறான்" என்ற அதிர்ச்சித் தகவலுடன் தன் தற்காலிக வீட்டுக்கு அவர்களை அழைத்துச் சென்றார்.

மறுநாள் சிவனேசனை முன் இருக்கையில் ஏற்றி ஈருருளியை சந்தியில் திருப்ப 'படையினர்!', சடுதியாக ஈருருளியை திருப்பியவன் "நாங்கள் மக்களோடு மக்களாக நின்று பணியாற்ற வந்தவர்கள். ஆமி, அடையாள அட்டையை கேட்டாலும் அதனைக் காட்டி சாதுரியமாய் தப்பி பணியாற்ற வேண்டும்" என்ற பொறி சிந்தனையில் தட்டுப்பட ஈருருளியை தேநீர்க் கடைக்கு செலுத்தினான். உண்மையில் அவர்களது அதிர்ஸ்டம், அன்று எதுவுமே நடக்கவில்லை. பின்னாளில் எல்லாமே அத்துப்படியானது. படை உளவாளிகள்கூட இவனின் நண்பர்களானார்கள்.

இவனது பணியில் தாக்குதல் நடவடிக்கை என்பது இரண்டாம் பட்சமானவை. இரகசிய செயற்பாட்டாளர்கள் தங்கி வேலைசெய்ய வீடுகள், அவர்களுடைய அம்மா, அப்பா, சகோரர்கள், அன்ரி.... என உறவுகள், படை உளவாளிகளின் கண்களினுள், அயல் வீட்டாரின் கண்களினுள் சந்தேகப் பிராணியாய் விழுந்திடாதபடி சூழலுக்கேற்ப, வயதுக்கேற்ப, தோற்றத்திற்கேற்ப மறைப்புத் தொழில்கள் என இவனது புலனாய்வுச் செயற்பாடுகள் துடிப்புடன் நீண்டதில், வலிகாமத்தில் சிவனேசன், எமர்சன், சிவம், சுந்தர் எனப் பல இரகசிய செயற்பாட்டுப் போராளிகளை நிலைப்படுத்த வழிவகுத்தன. செயற்பாடுகள் தொடர்ந்துகொண்டிருக்கையில் 'வன்னிக்கு வரவும்' கட்டளைப் பணியகத்திலிருந்து புலனாய்வுப் பொறுப்பாளரின் தகவல் அவன் கரம் சேர்ந்தது.

"வன்னிக்குப் போகுமுன் தாக்குதல் செய்யவேண்டும். விரைவாகச் செய்ய வேண்டும். நல்லதொரு இலக்காகத் தேர்வு செய்யவேண்டும்" இவனது உதடுகள் அப்படித்தான் உச்சரித்தன.

வேவு முடிந்து, தயார்ப்படுத்தல் முடிந்து தற்கொடையாளனுடன் இலக்கை அண்மிக்க சில மணித்துளிகளில் இலக்குத் தப்பிட முதல் முயற்சி வெற்றியளிக்கவில்லை.

இன்னுமொரு முயற்சி, மறைப்பொன்றைத்தேடி ஆபத்தைச் சந்தித்து மறைப்பைப் பெற்று அதற்குள் கண்ணிவெடியை (CLAYMOUR) வைத்துக் காத்திருக்க இலக்கு வரவேயில்லை.

படைப் பிரதேசத்தினுள் தாக்குதல் நேரத்து சாதுரியத்தை, துணிவைவிட தாக்குதல் முயற்சியின்போதே அதிக துணிவும், சாதுரியமும் தேவைப்படும். நிறைந்த ஆபத்தைச் சந்தித்தும் முயற்சிகள் வெற்றியளிக்காமை இவனது மனதை உடைத்தது உண்மைதான்.

வன்னிக்குச் செல்வதற்கான நாள் வந்தது. எண்ணத்தில் துடித்த முயற்சிகள் வெற்றிகொள்ளப்படாத கவலை ஆட்கொள்ள 'முயற்சிகள்தான் வெற்றிக்கான படிக்கற்கள்', என புலனாய்வுப் பொறுப்பாளர் கூறுவார். என்பதை அறியாத இவனை சிறு ஓடம் மீண்டும் வன்னிக்கரையில் சேர்ப்பித்தது. இவனது செயற்பாடுகள் பரிசீலிக்கப்பட்டன. கோவையாக்கப்பட்டன. நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டன. ஆத்மபூர்வமாக நேசிக்கப்பட்ட தலைவரை சந்தித்தான். தலைவருடன் புகைப்படமும் எடுத்துக்கொண்டான். புதிய கட்டளைகள், புதிய செயற்பாடுகளுடன் இன்னும் அதிக துணிச்சலுடன், நம்பிக்கையுடன் யாழ் உள்ளக புலனாய்வு கட்டளைப் பொறுப்பாளராக மீண்டும் யாழ்மண் இவனை வரவேற்றது.

1999 முற்பகுதி, "சிங்களப் படைப் பிரிவின் புலனாய்வாளர்களையும் துணைபோகும் கைக்கூலிகளையும் அழித்தல், அவர்களது செயற்பாடுகளை, நடமாட்டத்தை முடக்குதல் என்பன, யாழ் மண்ணில் போராளிகளின் செயற்பாட்டை இலகுபடுத்த வழிசமைக்கும்" என்ற தலைமையின் முடிவு இவனை செயலில் இறக்கியது.

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை, "இரண்டு சிங்களப்படை உளவாளிகள் யாழ்நகர் கடையொன்றில் கூடுவது வழமை" என்ற வேவுத் தகவலின் அடிப்படையில் அவர்களை அழிக்கும் நடவடிக்கையில் ஈருருளியை இவன் மிதிக்க முன்னிருக்கையில் கைத்துப்பாக்கியுடன் சகபோராளி. காலை பத்து மணிவரையில் இலக்கு கண்ணில் புலப்படவில்லை. தொடர்ந்து அவ்வீதியில் நடமாடுவதன் ஆபத்தை கருத்திற்கொண்டு தங்குமிடம் சென்று, பின் மீண்டும் மாலை நான்கு மணிக்கு நடவடிக்கை தொடர்ந்தது. இரவு ஏழு மணியாகியும் இலக்கு வரவேண்டிய இடத்துக்கு வரவில்லை, ஈருருளியை யாழ்நகர கஸ்தூரியார் வீதியால் இலக்கைத்தேடி மிதிக்கையில் சற்று முன்னால் சென்ற ஈருருளியின் முன் இருக்கையில் இருந்து பயணிப்பவன் ஆக்கிரமிப்பாளனுடன் சேர்ந்து செயற்படும் கைக்கூலிக் குழு ஒன்றின் யாழ்மாவட்டப் பொறுப்பாளன் என்பதை கடைத்தெருவில் ஒளிர்ந்த மின்குமிழின் வெளிச்சம் காட்டியது. "தேடிவந்த இலக்கைவிட தற்செயலாகக் கண்ட இலக்கு பெறுமதியானது அழிக்கப்பட வேண்டியது. சடுதியாக இவனது ஈருருளி வேகம்கொள்ள துப்பாக்கி குறியில் இலக்குத் தப்பவேயில்லை.

> **"அவன் நிறையவே சாதிக்க வேண்டியவன் வன்னிக்கு எடுத்து கதைப்பம் என்றிருக்க இப்படி நடந்து போய்ச்சு.. அவனுக்குத் தெரிந்த நிறைய சனம் வருமென்று தெரிந்தும் அதற்குள்ள போயிருக்கிறான்.."**

இன்னொருநாள், நல்லூர்ப் பிரதேசத்தில் படைப் புலனாய்வாளர்களுடன் இணைந்து போராளிகளைக் காட்டிக்கொடுப்பதிலும் படையினருடன் நெருங்கி ஒத்துழைத்து வந்ததுமான ஒரு இலக்கு. அழிக்கப்பட வேண்டிய இலக்கு வேவுத் தகவல்கள் எல்லாவற்றினையும் இவனே முடித்திருந்தான். இன்றும் முன்னிருக்கையில் சக போராளி கைத்துப்பாக்கியுடன் இருக்க ஈருருளியை இவனே இலக்கின் வாசல் வரை ஓட்டிவந்தான். இலக்கின் பெயர் கூறி இலக்கை அழைக்க, வெருட்சியுடன் "இந்தப் பெயருக்குரியவன் நானில்லை" என குற்ற உணர்வுடன் இவர்களை நோக்கி திரும்பியது இலக்கு. காட்டிக்கொடுப்புக்கு வழமைபோலவே ஒறுப்பு அளிக்கப்பட்டது.

இன்னுமொருநாள், முக்கிய இலக்கு ஒன்றை அழிப்பதற்காய் பயிற்சி முடித்திருந்த தாக்குதலாளனை வன்னியிலிருந்து உப்புநீரேரி கடந்து யாழ்மண்ணுக்கு அழைத்து வருகையில்...

06.06.1999 நீரேரி 'கவாட்டியால்' பாதங்கள் கிழிக்கப்பட்ட நிலையில் இவனும் தோழர்களும், பாசையூர் கடற்கரையிலேறி பிரசவ விடுதியை அண்மிக்க சிங்களத்தில் 'யார்?' என சிங்களச் சிப்பாய் வினாவ, துப்பாக்கிகள் சடசடக்கத் தொடங்கின. கப்டன் சித்தார்த்தன் வீரச்சாவைத் தழுவ தப்பி ஓடியவன் ஏறிய ஒழுங்கைகள், சந்திகள் எல்லாமே படையினர். பிறகென்ன உயிர் பிழைப்பதற்கான இவனது கடைசி முயற்சி வெற்றியைக் கொடுத்திருந்தது. யாருக்குமே தெரிந்திராத ஒரு மறைவிடத்தில் ஆயிரம் கைகள் உணவூட்ட காத்திருந்தும் அக்கைகளுக்குத் தெரியாமலேயே பதுங்கிக்கிடந்தான் நாளைய பாய்ச்சலுக்காய்.

மறுநாள் அவனை அரவணைத்து தன் வீட்டின் பிள்ளையாக வைத்திருந்த தேசத்தின் அன்னை கூறினார், "என்ர பிள்ளையின்ர கால்களிலெல்லாம் காயங்கள், முள்ளுக் கீறல்கள். நான்கைந்து நாட்களாக ஒரே நாரிநோவு. பிள்ளை சோர்ந்தே போனான். இரவிரவாக நானும், அப்பாவும் காலுக்கு மருந்துபோட்டு, நாரிக்கு எண்ணெய் தடவி அவனை பிள்ளை ஆக்கினம்".

"அம்மாவோடதான் அவன் நல்ல வாரப்பாடு 18.06.99 அன்று அதிகாலை எழும்பியவன் என்னிடமிருந்த பயபக்தியையும் மீறி வழக்கத்துக்கு மாறாய் ஒரு நாளும் இல்லாத செல்லம் கொஞ்சினான்.

என் கைகளைப்பிடித்து "அப்பா, இந்த ஆயிரம் ரூபாவை ஏதாவது அநாதை இல்லத்துக்குக் கொடுங்கோ. எனக்கு இன்று பிறந்தநாள்" என்றான். நான் பணத்தைக் கொடுத்து பற்றுச்சீட்டைக் கொடுக்கலாம் என்றால் "உங்களில் என்ன நம்பிக்கை இல்லை என்றா தாறியள்?" எனக் கேட்டான். கொடுக்காட்டில் எனது மனச்சாட்சிக்குப் பிழை. நான் அதைக் கொடுக்கவே இல்லை. 29 வயதில் அவனது பக்குவத்தை எண்ணி வியந்தேபோனேன்." கலங்கும் அம்மாவின் கண்களைப் பார்த்து கலங்கியபடியே இப்படித்தான் அப்பா கூறினார்.

சக நண்பனைப் பாதிவழியில் இழந்த துயர் இவன் இதயத்தை அம்பாகத் துளைத்தாலும், தன் பாதையில், இலக்கில் அம்புபோல் செயல்படலானான்.

"யாழ் கொட்டடியில் சீனிவாசன் வீதியில் இரண்டு சிங்களப்படைப் புலனாய்வாளர்கள் மாஸ்ரர் ஒருவரின் வீட்டுக்கு வந்து போகின்றனர்" பூட்டு எனப்படும் விடுதலைப் பற்றாளனின் வேவுத் தகவல் அது. ஒரு இரவுப்பொழுது மாலை ஏழு மணி, சக போராளியுடன் இலக்கைத் தேடிச்சென்றான். துப்புத் துலக்கி தேடப்படுவோர் தம்மைத் தேடிவருவதை அறியாத இலக்கு நகையாடிக்கொண்டிருந்தது. சக போராளியின் குறியில் ஒருவன் சரிய மற்றையவன் ஓட எத்தனித்தான். ஓடுபவனைக் குறிவைத்து தன்னிடம் இருந்த கைக்குண்டை எறிந்தவன், கூப்பிடு தூரத்தில் உள்ள சக படைவீரர்கள் ஓடிவரும் முன் சடுதியாய்த் தாக்குதலை முடித்துத் திரும்பினான்.

"அம்மா இன்றைக்கு உங்கட புட்டை விட்டுட்டு ஏதாவது நல்லதாய் செய்து தாங்கோ சரியா பசி எடுக்குது" புழுக்கிண்டுவதுபோல் புளுகம் கிண்ட, தாக்குதல் வெற்றியில் திளைத்தவனை அப்பாவும், அம்மாவும் புரிந்துகொண்டனர்.

"அம்மா, நான் அவசரமாக வெளியில போறன் றேடியோவில ஏதாவது தகவல் வந்தால் பதிவுசெய்து வையுங்கோ" "டேய் ஒருக்காத்தான் பழக்கித் தந்திட்டு பதிவு செய் எண்டால் முடியுமே? இன்னும் ஒருக்கால் பழக்கித் தந்திட்டுப் போடா" வாசல் வரை வந்தவனை மறித்து அம்மா கேட்க, "குறித்த நேரத்துக்கு நான் அங்க நிற்கோணும் எதற்கும் விரைவாய் வரப்பாக்கிறன்"

அவசரமாய் இவன் போய்விட இவன் திரும்பும் முன்னமே தகவல்வரும் நேரத்தை மணிக்கூடு காட்டியது. அம்மாவிடம் மேலோங்கியிருந்த அறிவுப் புலமை ஒருவாறாய் அலைவரிசையைப் பிடித்து தகவலைப் பதிவு செய்துவிட்டது.

என்ன தகவல்? "நீங்கள் செயற்பட்டுக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள்? என்ற தகவலை எங்களுக்கு அனுப்பிவைக்க, தொடர்பு முறையொன்றை நீதான் தேட வேண்டும். சீரான தொடர்புகள் இன்றி செயற்படுவதில் அர்த்தமில்லை. என்ற தொனிப்பட நல்ல ஏச்சுடன் தகவல் வந்திருந்தது. "தகவலைக் கொடுத்தால் பிள்ளை நொந்துபோவன், வெந்துபோவான்" தகவலைக் கொடுக்க அம்மாவின் தாய்மை உணர்வு தடுத்தது. இயக்கத் தகவலை, அம்மா கொடுக்காமலும் இரா. தயங்கித் தயங்கிக் கொடுத்தார். அவைபற்றி அம்மா கூறுகையில், தகவலைக் காட்டியதும் நினைத்ததுபோலவே அவன் உடைந்தே போனான். அன்றிரவு சாப்பாடும் நித்திரையும் இன்றி கட்டிலில் உருண்டு உருண்டு புரண்டான். நான்தான் அருகிலிருந்து தேற்றினேன்" பின்னொரு நாளில், "அவன் இங்கே ஒரு நிமிசம்கூட சும்மா இருக்கிறது இல்லை காலையில் எழும்பினால் இரவு வரைக்கும் நாட்டுக்காகத்தான் உழைக்கிறான். இனிமேல் பிள்ளைக்கு இப்படி ஏசித்தகவல் வரக்கூடாது" என அம்மா இவன் பொறுப்பாளருக்கு கடிதம் அனுப்பியிருந்தா.

அம்மா வீட்டுடன், தேவையற்று ஆதரவாளர்களையோ, தொடர்பாளர்களையோ, சக போராளிகளையோ தொடர்பு படுத்தாத தன்மை மற்றும் செயற்பாட்டின்போது பயன்படுத்தும் போலி ஆவணங்கள், வேறு பெயரில் பெறப்பட்ட அவனது ஈருருளி.... அம்மா புட்டவிக்கும்போது தடயங்களை நெருப்பில் போட்டு அவை எரிந்து முடியும் மட்டும் கண்வெட்டாது பார்க்கும் பொறுப் புணர்வு, எப்பொழுதுமே அவனிடமிருக்கும் சைனைற் குப்பி என இரகசியம் பேணுவதில், தான் சார்ந்தவர்களைப் பாதுகாப்பதில் இவனது அதீத பாதுகாப்பு உணர்வு அம்மாவுக்கு இவனை பிடித்துப் போனதில் வியப்பில்லைத்தான்.

04.09.1999 அம்மாவின் இடக்கை சுழுக்கெடுத்து நோவு எடுத்திருந்ததை அறிந்தவன் அதிகாலையில் எழுந்து அம்மாவுக்கு மலசல கூடத்துக்கு தண்ணீர் எடுத்துவைத்து, பாத்திரங்களில் எல்லாம் தண்ணீர் நிரப்பி, வீடு கூட்டி.. வீட்டுப் பணியெல்லாம் முடித்து தன் பணிக்காக பயணப்பட்டவன், வாசலில் நின்றுகொண்டு, "அம்மா இன்றைக்கு சில நேரம் வரமாட்டன். அன்ரி வீட்டிலை தங்கினாலும் தங்குவன்.." சொல்லித்தான் வெளிக்கிட்டான். எங்க அன்ரி வீடு இருக்குது? கண்டிப்பாக நீ வீடு வரவேணும் என அம்மா கேட்கவும் மாட்டார். கட்டளையிடவும் மாட்டார். இரகசியம் பேணுவதில் அம்மாவும் கண்டிப்பானவர், வழமை போலவே வாசலில் நின்று அம்மா வழியனுப்பிவைக்க, அம்மா புள்ளியாய்த் தெரியும் மட்டும் அவன் கையசைத்துச் சென்றான். "என் மகன் தன்னைப் போராளியாக இணைக்கும்போதும் இப்படித்தான் கையசைத்துச் சென்றவன்" அம்மாவின் இதய அறைகளில் ஒன்றுக்குள் மகனும் மற்றயதுள் இவனுமாக அம்மா கனதியானார்.

05.09.1999 நல்லூர் முருகன் கோயில் வீதி மக்கள் கூட்டம் நிரம்பியிருந்த, பகல் பதினொரு மணிப்பொழுது, காதலியை ஏற்றிய ஈருருளிகள், மனைவியை ஏற்றிய உந்துருளிகள், குடும்பத்தையே சுமக்கும் கார்கள், பட்டப்படிப்பு முடித்து வேலை வாய்ப்புக்காய் முருகனிடம் வந்த பள்ளிக்கூட நண்பர்கள்... என எல்லோரையும் கடந்து இவனது ஈருருளியும் சக போராளிகளினது ஈருருளிகளும் புலனாய்வுக் கண்களுடன் வெவ்வேறு திசைகளில் பயணித்துக்கொண்டிருந்தன.

நல்லூர் அரசடி வீதியை (பாரதி சிலையடி) இவனது சைக்கிள் கடக்க முற்பட, காவலரணுக்கு அருகில் நின்ற சிங்களப்

**— சி.மாதுளா —**

படைவீரன் வழிமறித்து இவன் கைகளைப் பிடிக்க, அவனை உதறிவிட்டுத் துப்பாக்கியைப் பறித்தெடுக்கும் நோக்குடன் காவலரணுக்குள் பாய்ந்தோட.. முடியாமல் போக, சைனைற் குப்பியை அவன் பற்கள் நன்றாக அரைக்க, அது அவன் உயிரை பிரித்துத் தான் விட்டதா?

கறுப்பு ஜீன்ஸ், சாம்பல் நிற சேட், பச்சை உள்ளாடையுடன் இளைஞனின் சடலம் செய்தித்தாளில் வந்த செய்தி அம்மாவை இடியாய் இடித்தது. உடைகள் அவனுடையதுதான். அப்பாவும் அம்மாவும் குசுகுசுத்துக் கொண்டனர். வைத்தியசாலையில் இவன் உடலைப் பார்க்க அம்மாவால் முடியவில்லை. உடலைப்பார்த்து ஓவென அழாமல் அம்மாவால் இருக்கமுடியாது. அப்படி அழுதால் சிங்களப் புலனாய்வாளர்களின் கண்களில் எத்துப்படலாம். இன்னுமொரு போராளியைத் தன் சிறகினுள் வைத்திருக்கவேண்டும் என்பதற்காக அம்மா வைத்தியசாலைக்கு செல்லவே இல்லை.

அம்மா நினைத்ததுபோலவே அவனது சைக்கிள் அடையாள அட்டைகள்.. என்பனவற்றைப் படையினர் கைப்பற்றியிருந்த போதிலும் அம்மாவின் வீட்டை இனங்காண முடியவில்லை.

"அவன் நிறையவே சாதிக்கவேண்டியவன் வன்னிக்கு எடுத்து கதைப்பம் என்றிருக்க இப்படி நடந்துபோய்ச்சு.. அவனுக்குத் தெரிந்த நிறையச் சனம் வருமென்று தெரிந்தும் அதற்குள்ள போயிருக்கிறான்.." என்ற புலனாய்வுப் பொறுப்பாளரின் பார்வையிலும்,

"விடுதலை வீரனின் சுயநலமற்ற பற்றற்ற வாழ்க்கை உன்னதமானது, அர்த்தமுடையது. விடுதலை என்ற உன்னத இலட்சியத்துக்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான்" என்ற தலைவரின் பார்வையிலும் இவனது வாழ்வு உன்னதமானது.



# புலர்கின்ற பொழுதில்...

புரட்சிமாறன்

*13.05.1997* அன்று எங்களின் ஊர்களுக்குள் ஜெயசிக்குறு என்ற பெயரில் சிங்களதேசம் எங்களுடன் மோதவந்தது. தங்கள் படைப்பலத்தின் உச்சத்தில் நின்றபடி எங்களுடன் சமர் வெடித்தது. ஆரம்பத்தில் நாங்கள் பலமாய் மோதியபோதும் கொஞ்சம் கொஞ்சமாய் அங்குலம் அங்குலமாய் எங்களது கையிற்குள்ளிருந்த நிலங்கள் எதிரியின் கைகளுக்குள் மாறிக்கொண்டிருந்தது.

ஆனாலும், பின்வாங்குவதென்பது தொடர்கதையாக மாறாமல் நிலத்தைப் பாதுகாத்தல் இல்லாதுவிடின் அங்கேயே சமரிட்டு மடிதல் என்ற உறுதியோடு புளியங்குளத்தில் எங்கள் தடுப்பரண்கள் அமைக்கப்பட்டன. கொஞ்ச நாட்களுக்கு முன் மக்களின் வாழிடமாயிருந்த அந்த ஊர் இப்போது எமது விடுதலைப் போராட்டத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சமர்க்களமாய் மாறியது. புளியங்குளத்தின் சந்தியை மையமாக வைத்து எங்களது படையணிகள் நிலையமைத்துக்கொண்டன.

ஜெயசிக்குறுவின் மூன்றாம்மாத நினைவிற்கு, புளியங்குளத்தில் கொடியேற்றப்போவதாக ரத்வத்த சூளுரைத்தார். அந்தத் திமிருடன் புளியங்குளத்தில் எங்களுடன் ஒவ்வொரு முனையிலும் மோதத் தொடங்குகிறது சிங்கள தேசத்தின் இராணுவம். இதுவரை நடந்த சண்டைகளைப்போல் அல்லாமல் மிகவும் மூர்க்கத்தனமாய் சிங்களம் எங்களுடன் மோதியது. இரவும் பகலுமாய் கண்களை விழிப்பாக்கி எதிரியையே நோக்கியபடி காவலரண்களிற்குள் காத்திருந்தார்கள் எங்கள் தோழர்கள். நான்கு அடி நீளத்தினையும் இரண்டு அடி அகலத்தினையும் கொண்ட கிடங்கிற்குள் எங்கள் வாழ்க்கையிருந்தது. இராணுவ மொழியில் சொன்னால் அது ஒரு காப்பரண்.

இராணுவத்தின் எறிகணைக் குழல்கள் ஓய்வாய் இருப்பதைவிட எங்கள் முகாமிற்குள் எறிகணைகளைத் துப்புவதிலேயே மும்முரம் காட்டின. ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சமாய் அந்த ஊரின் அடையாளங்கள் அழிந்துகொண்டிருந்தது. வெடித்துச் சிதறும் இரும்புத் துண்டங்களால் நிலம் நிறைந்துகொண்டிருந்தது.

19.08.1997இன் காலைப்பொழுது புலரும்பொழுதே புளியங்குளத்திலும் அதிர்ந்து கொண்டிருந்தது. காற்றை ஊடறுத்து மூசியபடி எறிகணைகள் வெடித்துச் சிதறின. புகைக் குண்டுகளை எதிரி அதிகமாக ஏவியதால் எதனையும் அவதானிக்க முடியவில்லை. ஆனாலும், எங்களது முகாமில் ஏதோவொரு முனையில் எதிரி மோதப்போகிறான் என்பது மட்டும் தெளிவாகப் புரிந்தது.

நேரம் காலை 7:30 - புளியங்குளத்தின் கிழக்குப் புறமாக பழையவாடிப் பகுதியிலிருந்து டாங்கிகள் மெதுமெதுவாக முன்நகர்கின்றன. இடைவிடாத வெடியதிர்வுகளின் மத்தியில் டாங்கிகளின் ஓசையை அவதானிக்க முடியவில்லை. எங்களுக்குத் தெரியாமலேயே எங்களது அரண்களை டாங்கிகள் நெருங்குகின்றன. பழையவாடி வீதியின் இருமருங்கிலும் இருந்த காவலரண்களை அந்த டாங்கிகள் குறிவைக்கின்றன. காவலரண் இரண்டிலும் துப்பாக்கிச் சத்தங்கள் ஓய்கின்றன. அந்த இடைவெளிக்குள்ளால் ஒன்றன்பின் ஒன்றாக டாங்கிகளும் துருப்புக் காவிகளும் தானியங்கித் துப்பாக்கிகளால் சுட்டபடியும் எறிகணைகளை ஏவியபடியும் எங்களது முகாமுக்குள் நுழைகின்றன.

கொஞ்ச நேரத்திற்குள் நிலைமை மாறியிருந்தது. எங்களது முகாமிற்கு உள்ளேயே எதிரியுடன் சண்டையிடவேண்டிய நிலை. டாங்கி எதிர்ப்பு ஆயுதங்களால் டாங்கிகளைத் தாக்க முடியவில்லை. ஏனென்றால் நாங்கள் எதிர்பார்த்ததையும் விட கிட்டவாக டாங்கிகள் எங்களுக்குள். அந்தக் குறுகிய தூரத்திற்குள் டாங்கிகளைத் தாக்கமுடியாது. இதனால் தங்கள் ஆயுதங்களைச் சுமந்தபடி டாங்கிகளுக்கும் தங்களுக்குமான இடைவெளியை அதிகரிப்பதற்காக பின்னோக்கி ஓடுகிறார்கள் போராளிகள்.

புளியங்குள முகாமின் உட்புறம் கனரக வாகனங்களில் எதிரியும் முகாமிற்கு வெளியில் துருப்பினருமாய் இரண்டு பக்கங்களிலும் சமரிடவேண்டிய நிலையில் எங்களது அணிகள். டாங்கிகளும் துருப்புக் காவிகளும் எங்களது முகாமிற்குள் நின்றபடி எங்களது காப்பரண்களை நேராகக் குறிபார்த்துச் சுட முனைந்தபோதும் காப்பரண்களில் நின்ற போராளிகள் அதைப் பொருட்படுத்தாமல் முன்னே நகர்ந்துகொண்டிருக்கும் எதிரியுடன் சமரிட்டனர்.

முகாமிற்குள் நுழைந்த டாங்கிகள் எங்களது இலக்குகளைத் தேடி அழிக்க முனைந்தது. அதற்குள் அந்தப் புளியங்குள முகாமை வழிநடத்திய கட்டளைத் தளபதியின் அரணையும் அந்த டாங்கிகள் குறிவைத்துத் தாக்கத் தவறவில்லை.

மணித்துளிகள் நகர்ந்துகொண்டிருந்தன. சண்டை தொடர்ந்துகொண்டிருந்தது. தங்களது துருப்பினரை எதிர்பார்த்து முகாமிற்குள் நுழைந்த டாங்கிகள் சுழன்றுகொண்டிருந்தன. ஆனால், ஒரு ராணுவச் சிப்பாயைக்கூட எங்கள் போராளிகள் உள்நுழைய விடவில்லை.

ஆரம்பத்தில் சண்டித்தனத்துடன் உள்நுழைந்த டாங்கிகளுக்கு இப்போது ஆப்பிழுத்த குரங்கின் நிலை. அவர்கள் நம்பியிருந்ததுபோல் இராணுவச் சிப்பாய்கள் துணைக்கு வரவில்லை. டாங்கிகள் தப்பியோடுவதற்கு முடிவெடுக்கின்றன. இப்போது டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் இயங்கத் தொடங்குகின்றன. ஓயாத எறிகணை வீச்சிற்குள்ளும் பதற்றமடையாமல் தங்கள் ஆயுதங்களைச் சமநிலைப்படுத்தி டாங்கிகளைக் குறிவைக்கின்றனர் . சமநேரத்தில் டாங்கிகள் எங்கள் போராளிககளைக் குறிவைக்கின்றன. மூடிய இரும்புக் கவசத்திற்குள் எதிரியும் வெட்டைவெளியில் எங்களது மண்ணே எங்களது போராளிகளுக்கு கவசமாயிருக்க, இரண்டு பகுதியிலும் வெடியதிர்வுகள் கேட்கின்றன.

எங்களது தளத்திற்குள்ளிருந்து தப்பியோட முனைந்த துருப்புக்காவிமீது பகலவன் அடுத்தடுத்து மூன்று எறிகணைகளைச் செலுத்தித் தாக்கி அழித்தான். அதற்குள் இருந்த ஆக்கிரமிப்புப் படையினரும் அதனுடன் சேர்ந்து அழிந்தனர்.

எங்களது பகுதிக்குள் உள்நுழைய முற்பட்டபோது கண்ணிவெடியில் சிக்கிய T55 ரக டாங்கியொன்று நகரமுடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தது. பின்னர், அதைக் கட்டியிழுத்து மீட்பதற்கு வந்த டாங்கிக்கு பகலவன் நான்கு எறிகணைகளைச் செலுத்தி தாக்கி அழித்தான். அழிந்துகொண்டிருந்த டாங்கிகளுக்குத் துணைபுரியவென வந்த இன்னுமொரு டாங்கியை மணிவண்ணனும் தமிழவனும் தாக்கி அழித்தார்கள்.

ஒன்றன்பின் ஒன்றாக தங்கள் கவசங்கள் அழிந்துகொண்டிருந்ததால் எஞ்சியவை கண்டிவீதி வழியே தப்பி ஓடின. தப்பி ஓடிய துருப்புக்காவி ஒன்றைத் தாக்கி செயலிழக்கச் செய்தனர் டாங்கி எதிர்ப்பாயுதத்தைத் தாங்கிய வீரர்கள். துருப்புக்காவி செயலிழந்ததும் அதற்குள் இருந்த இராணுவத்தினர் இறங்கித் தப்பியோட முனைந்தபோதும் அவர்கள் எவரும் எமது முகாமைக் கடந்து போகவில்லை. அதிகாலையிலிருந்து மாலை நான்கு மணிவரை எதிரியின் ஆட்லறிகளுக்கும் மோட்டார் எறிகணைகளுக்கும் கனரக ஆயுதங்களின் சூட்டிற்கும் விமானங்களின் இடைவிடாத தாக்குதலிற்கும் முகம்கொடுத்து, எதிரியின் கவசப்படையின் பலத்தைச் சிதைத்தனர் புலிவீரர்கள். சமரின் முடிவில் துருப்புக்காவி ஒன்று எங்கள் வசமாகியது. இரண்டு T55 ரக டாங்கிகளும் ஒரு துருப்புக்காவியும் அழிந்தன. எஞ்சியவை சேதத்துடன் தப்பியோடின. பல இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

அன்றைய நாளில் புளியங்குளத்தில் கொடியேற்றுவதற்கு ரத்வத்த தயாராகவும் இருந்திருக்கக்கூடும். ஆயினும், எப்போதும் தங்கள் ஆயுத பலத்தின் மீதே அவர்கள் நம்பிக்கை வைப்பதனால் அன்றைய நாளில் எங்களுடன் தோற்றுப்போயினர். ஆயினும் புளியங்குளத்தில் கழிந்த அண்டிய நேரங்களில், முன்னே மரங்களையும் வயல்களையும் நோக்கியபடி விழித்திருந்து காவல் புரியும் வேளைகளில், கடைசியாய் எங்களுடன் இருந்துவிட்டு அன்றைய நாளில் வித்துடலாய்ப் போனவர்களின் இறுதிக் கணங்கள் எங்களுக்குள் திரைப்படமாய் ஓடிக்கொண்டிருக்கும். அந்த நினைவுகள் மறுநாள் சமரிடுவதற்கான உறுதியை எங்களுக்குத் தந்துகொண்டிருந்தது.

26.08.2003 புளியங்குளத்தில் எங்கள் தோழர்களின் உயிர் அரண்களை அசைத்தழிக்க மீண்டுமொரு முற்றுகைச் சமர்.......

அதிகாலையிலிருந்து எங்களின் முகாமை அங்குலம் அங்குலமாக எறிகணைத் துகள்களால் நிறைத்தனர். ஒவ்வொரு ஆட்லறி எறிகணை வீச்சாளனும் தங்களிற்குத் திருப்தி வரும்வரை எங்களின் எல்லைக்குள் எறிகணைகளை ஏவிக்கொண்டிருந்தனர். பிற்பகல் 1.00 மணி - அன்றைய தாக்குதலின் உச்சநேரம். எறிகணை வீச்சின் சத்தத்தின் மறைவில் நகர்ந்த டாங்கிகள் மிகவும் நெருக்கமாக எங்களது காப்பரணிற்குமுன் எதிர்ப்படுகின்றது. அந்த டாங்கிகளுடன் துருப்பினரும் முன்நகர்ந்து எங்களது காப்பரண்களுக்கு நெருக்கமாகச் சண்டை தொடங்கியது.

காலையிலிருந்து இந்தக் கணம்வரை எறிகணைகளால் எங்கள் பகுதியில் சல்லடை போட்டவர்கள் மீது இப்போது எங்களது எறிகணைகள் பதம் பார்த்தன. காப்பரணில் இருந்த எங்களது தோழர்கள் தங்களின் நிலைகளை மாற்றி மாற்றி எதிரியுடன் மோதிக்கொண்டிருந்தனர். எங்களது நகரும் அகழிக்குள் நின்று சமரிட்ட



தோழர்கள் சிலர் குண்டேந்தி ரத்தம் சிந்தியபடி வீழ்ந்தபோதும் எங்கள் நிலைகளை விட்டு யாரும் பின் நகரவில்லை. அதேநேரம் சிங்களச் சிப்பாய்களும் அவர்களின் கவச டாங்கிகளும் எங்களின் தாக்குதலில் சிக்கிச் சிதைந்துகொண்டிருந்தன.

எங்களின் வீரர்களின் நெஞ்சுரத்தின் முன்னால் சிங்களப்படை அன்றைய தினத்திலும் பல இராணுவ வீரர்களையும் இரண்டு டாங்கிகளையும் இழந்தது.

எஞ்சிய சிங்களச் சிப்பாய்கள் காயமடைந்த சிப்பாய்களையும் சேதமடைந்த டாங்கிகளையும் இழுத்துக்கொண்டு பின்வாங்கி ஓடினர்.

இந்தத் தாக்குதலின் பின் புளியங்குளத்தில் எங்களது நிலைகளைக் கைப்பற்றும் முயற்சியைப்பற்றி சிங்களம் சிந்திக்கவேயில்லை. அந்த ஊரின் ஒவ்வொரு துண்டு நிலத்திற்காகவும் எங்கள் தோழர்களின் இரத்தமும் வியர்வையும் சிந்தப்பட்டது. வெற்றியின் மகிழ்வோடு எங்கள் தோழர்கள் எங்களை விட்டுப் பிரிந்து போனார்கள். ஆனாலும், அந்தப் பிரிவுகள் எங்கள் மண்ணைப் பிரியவிடாது. எங்களது ஊர்களை எங்களுக்கு மீட்டுத் தந்தபடியிருக்கின்றது. ●

ஒவ்வொரு நாட்களும் மறக்க முடியாதவை.

தண்ணீர் நிறைந்தபடி இருந்த பதுங்கு குழிக்குள் தங்களின் ஆயுதங்களைக் காப்பாற்றுவதற்காக உடல் முழுவதும் தண்ணீருக்குள் இருக்க, தங்கள் ஆயுதங்களைக் கையில் தூக்கிவைத்தபடி நின்று காவல்புரிந்த பெண் போராளிகளும்.........

காவலரணில் மாற்றி விடுவதற்குக்கூட போராளிகள் இல்லாமல் இரவு பகலாய் எங்கள் தோழர்கள் விழித்திருந்த நாட்களும்....... மறக்கமுடியாதவை.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முனையில் முட்டிமோதும் எதிரியுடன் அருகிலிருந்த போராளிகள் சமரிட்டு மடிந்துகொண்டிருந்தபோதும் அந்த முகாம் எங்களின் கைக்குள்ளிருந்தது.

ஆனாலும், புளியங்குளத்தை தங்கள் ஆக்கிரமிப்பிற்குள் கொண்டுவருவதற்கு ரத்வத்தவின் படைகள் தொடர்ந்தும் மோதின. சின்னச் சின்னதாய் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு முனையில் எங்களுடன் மோதலைப் புரிந்து எங்களைச் சீண்டிக்கொண்டிருந்தன சிங்களப் படைகள். எங்களின் பல தோழர்கள் நாளாந்தம் மடிந்துகொண்டிருந்தார்கள். ஆனாலும், ஒவ்வொரு சாவிலும் எஞ்சியிருந்த ஒவ்வொரு வீரனும் உறுதியெடுத்துக்கொண்டான்.

கடந்துகொண்டிருந்த ஒவ்வொரு இரவுப் பொழுதுகளிலும் காவலரணில் அருகிருக்கும் தோழன் காப்பரணுக்குள் முடங்கியபடி உறங்கிக் கிடக்க, வெடிச்சத்தமில்லாத அமைதியாய் கழியும் நடுநிசியை

குறிப்பு : ஜெயசிக்குறுச் சமரின் ஒரு கட்டத்தில் சிறிலங்கா இராணுவம் எம்முடன் நேரடியாக மோதுவதைத் தவிர்த்து அகலக்கால் பதித்த தால் புளியங்குளத்தில் இருந்து நாமாகவே பின்வாங்கினோம். பின்னர், ஓயாத அலைகள் - 03 நடவடிக்கையில் இந்த ஊர் மீட்கப்பட்டது.

# விதைநிலங்களும் நினைவு

(05ம் பக்கத் தொடர்ச்சி)

யாவின் காலனித்துவ நாடுகளிலும் அது எழுப்பப்பட்டுள்ளது. கொழும்பு அரும்பொருள் காப்பகத்திற்கு அருகாமையில் இதைக் காணலாம். இலண்டன் மாநகரின் பழம்பெரும் வெஸ்ற்மினிஸ்ரர் தேவாலயத்தில் (WES-TMINISTER ABBEY) இந்த யாரென்று அறியப்படாத பிரிட்டிஷ போர்வீரனின் கல்லறை காணப்படுகின்றது. போருடன் தொடர்புடைய தேசிய நாட்களில் இவருடைய கல்லறைக்கு விசேட ஆராதனையும் மரியாதையும் செலுத்தப்படுகின்றது. வெளிநாட்டுத் தலைவர்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு வருகைதரும்போது இந்த நினைவுச் சின்னத்திற்கு மலர்வளையம் சாத்தி மௌனாஞ்சலி செலுத்துகின்றனர். அக்கல்லறையில் கிடக்கும் வீரன் தேசிய சின்னத்தின் நிலைக்கு உயர்த்தப்படுகிறான். போரில் உயிர்நீத்த எல்லா வீரர்களுக்கும் இவர் மூலமாக மரியாதை செலுத்தப்படுகின்றது. இதுதான் ஐதீகம்.



அமெரிக்காவின் யாரென்று அறியப்படாத போர்வீரனின் கல்லறை உள்ள ஆர்லிங்ரன் தேசிய இடுநிலத்தின் முகப்புத் தோற்றம்.

அமெரிக்காவின் யாரென்று அறியப்படாத போர்வீரனின் கல்லறை ஆர்லிங்ரன் தேசிய இடுநிலத்தின் கேந்திரப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இப்போது யாரென்று அறியப்படாத மூன்று அமெரிக்கப் போர்வீரர்கள் இதில் உறங்குகிறார்கள். அவர்கள் முதலாம் உலகப்போர், இரண்டாம் உலகப்போர், கொரிய தீபகற்பப்போர் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள். முதலாம் உலகப் போருடன் தொடர்புடைய வீரன் பிரான்சின் போர்க்களத்தில் இருந்து கொண்டுவரப்பட்டவன். தலைநகர் வாஷிங்ரனுக்குக் கொண்டுவரப்பட்ட அந்த வீரனின் உடல் ஆபிரகாம் லிங்கனின் உடல் கிடத்தப்பட்ட அதே உடல் கிடத்தும் பீடத்தில் வைக்கப்பட்டது. மக்கள் மரியாதைக்காக ஒதுக்கப்பட்ட சில நாட்களின் பின் அந்த உடல் இராஜாங்க மரியாதை, இராணுவ மரியாதை என்பனவற்றுடன் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இக்கல்லறையில் பின்வரும் வாசகம் ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. "இறைவனுக்கு மாத்திரம் யாரென்று தெரிந்த ஒரு அமெரிக்கப் போர்வீரன் மதிப்பிற்குரிய மகிமையுடன் இங்கு உறங்குகிறான்" 1958ல் இரண்டாம் உலகப்போர், கொரியன் தீபகற்பப்போர் ஆகியவற்றின் யாரென்று அறியப்படாத வீரர்களின் சடலங்கள் ஏற்கனவே அங்குள்ள முதலாம் உலகப் போருக்குரியவருடன் சேர்க்கப்பட்டன. அமெரிக்க ஆயுதப் படைகளின் தரைப்படையின் வீரர்கள் இரவு பகலாக இடைவிடாது இந்த நினைவுச் சின்னத்திற்கு பாதுகாப்பு வழங்குகின்றனர்.

அமெரிக்காவின் போரில் உயிர்நீத்த வீரர்கள் நினைவாக ஒவ்வொரு வருடமும் மே மாதத்தில் தேசிய நினைவுநாள் கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. அந்தநாள் தேசிய விடுமுறை நாளாக அரசு பிரகடனம் செய்துள்ளது. 1868ல் இப்பாரம்பரியம் ஆரம்பிக்கப்பட்டது அப் போது அந்தநாள் DECO-RATION DAY என்று அழைக்கப்பட்டது. பின்பு MEMORIAL DAY என்று மாற்றப்பட்டது.

இத்தாலியின் அறியப்படாத போர்வீரனின் நினைவுக் கல்லறை ரோம்நகரில் விக்ரர் எமானுவேல் அரசரின் நினைவு மண்டபத்திற்கு எதிரிலுள்ள இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. பாரிஸ் மாநகரின் மையப் பகுதியில் நெப்போலியனின் வெற்றிகளை நினைவூட்டும் வளைவுக் கட்டிடம் (ARC DE TRIOM-PHE) 1806ல் தொடங்கப்பட்டு 1835ல் நிறைவேற்றப்பட்டது. 162அடி உயரம் 147அடி அகலம் கொண்ட இப்பிரமாண்டமான வளைவின்கீழ் பிரான்சின் யாரென்று அறியப்படாத போர்வீரனின் உடல் கிடத்தப்பட்டுள்ளது. அவர் உறங்கும் இடத்தில் என்றும் அணையாத தீபம் எரிந்து கொண்டிருக்கிறது.

பிரித்தானியாவின் முதலாம், இரண்டாம் உலகப் போர்களில் உயிர் நீத்தோர் நினைவு தினம் ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதத்தில் வரும் பதினோராம் திகதிக்குப் பின்வரும் முதலாவது ஞாயிற்றுக் கிழமையில் கொண்டாடப்படுகின்றது. இது REMEMNRA-NCE SUNDAY என்று அழைக்கப்படுகின்றது. அந்த நாளில் பகல் பதினொரு மணிக்குப் பிரித்தானியா பூராகவும் இருநிமிட அகவணக்கம் செலுத்தப்படுகின்றது. இதே நாளில் உயிருடன் இருக்கும் இளைப்பாறிய பிரிட்டிஷ போர்வீரர்களின் சமூகநலன் அபிவிருத்தித் திட்டங்களுக்காக நிதி திரட்டும் நோக்கில் குருதிநிறச் சிவப்பு பொப்பி மலர்கள் விற்பனை செய்யப்படுகின்றது. இது (POPPY DAY) பொப்பிநாள் என்று அழைக்கப்படுகின்றது. இப்போது செயற்கையாக கடதாசி போன்றவற்றில் தயாரிக்கப்பட்ட மலர் கள்தான் பெரும்பாலும் விற்பனையாகின்றன. பிரிட்டிஷ மக்கள் பொப்பி மலரை அந்த நாளில் மிகவும் பெருமையாகத் தமது மேலாடையில் அணிந்திருப்பர்.

பிரித்தானியாவின் மிகப்பெரிய கடற் தளபதி என்ற வரலாற்றுச் சிறப்பு அட்மிறல் ஹோரேசியோ நெல்சனுக்கு உண்டு. பிரித்தானியாவின் கடலாதிக்கத்தை உறுதி செய்ததோடு உலக மேலாதிக்கத்தையும் பெற்றுக்கொடுத்த திரபல்கார் (TRAFALGAR) கடற் போரை நெல்சன் வெற்றிகரமாக நடத்தினார். இக்கடற் போரில் நெப்போலியனின் பிரான்சு - ஸ்பேயின் கூட்டுக் கடற் படையை ஒக்ரோபர் 21, 1805ல் வெற்றிகொண்ட அதேபோரில் இவர் படுகாயமடைந்து உயிர் நீத்தார். இவர் நினைவாக இலண்டன் மாநகரில் திரபல்கார் சதுக்கம் (TRAFALGAR SQU-ARE) கட்டப்பட்டுள்ளது. சதுக்கத்தை அமைக்கும் பணி 1829ல் ஆரம்பிக்கப்பட்டு 1842ல் நிறைவேற்றப்பட்டது. சதுக்கத்தின் மத்தியில் ஒரு உயரமான பீடத்தில் நெல்சன் சிலை வைக்கப்பட்டுள்ளது. இலண்டன் மாநகரின் முக்கிய வரலாற்று அடையாளங்களில் ஒன்றாக இச்சதுக்கம் இடம்பெறுகின்றது.

போரில் மடிந்தோர் உடலை மண்ணில், கல்லறையில், கடலில் அடக்கம் செய்யலாம் என்பது மேற்கின் பொதுவிதி. கடலில் அடக்கம் செய்வதை BURI-AL AT SEA என்பார்கள். மேற்கின் பாரம்பரியத்தின்படி கப்பல் கடலில் மூழ்கும்போது மாலுமிகள் சிறு படகுகளில் தப்பிச் சென்றாலும் கப்டன் தரத் தலைமை அதிகாரி மூழ்கும் கப்பலில் தங்கியிருந்து மரணத்தைத் தழுவுவார். இது நெடுங்காலமாக கடைப்பிடிக்கப்பட்ட வழக்கம், இப்போது பெரும்பாலும் மறைந்துவிட்டது எனலாம். கடலோடு தொடர்புடைய படையினர் தாம் இறந்தபின் தமது உடலைக்கடலில் அடக்கம் செய்யும்படி சாதனம் எழுதுவர் அல்லது சுற்றத்தாருக்குப் பணிப்பர். இது இன்னுமோர் பாரம்பரியம்.

ஈயம் போன்ற கனமான உலோகத்தாலான பெட்டியில் உடலை இறுக்கமாக அடைத்து கப்பல்களின் மரியாதை அணிவகுப்புடன் அதை ஆழமான பகுதிகளுக்கு எடுத்துச் செல்வார்கள். கிறிஸ்தவ மதகுரு பொருத்தமான பைபிள் வாசகங்களைப் படித்தபின் கடலின் கரங்களில் உடல் ஒப்படைக்கப்படும். கப்பலில் இருந்து மலர் வளையங்களை எறிவார்கள். வாத்திய இசையும் சில பிரத்தியேகமான பாடல்களும் கப்பல்களில் நிற்போரால் இசைக்கப்படும். தூர கிழக்கு நேசநாட்டுப் படைகளின் இரண்டாம் உலகப்போர் தளபதியும், முன்னாள் பிரிட்டிஷ கடற்படை முதன்மைத் தளபதியும், இந்தியாவின் இறுதி இராசப் பிரதிநிதியுமாகிய மவுன்பாற்றன் பிரபுவின் மனைவி எட்வினா (EDWINA WIFE OF LORD MOUNT BATTEN) தனது உடல் கடலில் அடக்கம் செய்யப்படவேண்டும் என்று இறுதிக் காலத்தில் கோரினார். 1940ல் கெல்லி என்ற பிரிட்டிஷ கப்பலோடு மூழ்கிய மாலுமிகள் நினைவாக இக்கோரிக்கையை எட்வினா விடுத்தார். பெப்பிரவரி 21, 1960ல் அவர் இறந்த சில நாட்களின் பின் அவருடைய உடல் கடலில் அடக்கம் செய்யப்பட்டது.

உடலை உள்ளுக்கு வையாமல் கட்டும் செனோராப் கல்லறை பற்றியும், ஏன் அப்படி அமைக்கிறார்கள் என்பது பற்றியும் பிறிதோர் இடத்தில் பார்த்தோம். இனி இதையொத்த வேறொரு ஒழுங்கைப் பார்ப்போம். ஒரே நாட்டிற்குள் உடல் ஓரிடத்திலும் அதற்கான நினைவுச் சின்னம் இன்னுமோர் இடத்திலும் கட்டப்படுகின்றது. இதற்கு இரு உதாரணங்கள் கிடைத்துள்ளன. பிரித்தானியாமீது கடற்படையெடுப்பை நெப்போலியன் முயற்சித்தபோது அதை வெற்றிகரமாகத் தடுத்த நெல்சனின் உடல் புனித போல் சேமக்காலையில் (ST.PAULS CA-THEDRAL) நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. அவருக்கான நினைவுச் சின்னம் திரபல்கார் சதுக்கத்தில் எழுப்பப்பட்டுள்ளது.

அதேபோல் அமெரிக்கச் சுதந்திரப்போரில் புரட்சிகர இராணுவத்தின் முதன்மைக் கட்டளைத் தளபதியாகவும் (COM-MANDER IN CHIEF) அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதியாகவும் பதவி வகித்த ஜோர்ச் வாஷிங்ரனின் உடல் அவருக்குச் சொந்தமான மவுன்ற் வேர்னண் (MTVERNON) பெருந்தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. அவர் டிசெம்பர் 14, 1799ல் இறந்தார். தலைநகர் வாஷிங்ரன் அவர் பெயரால் வழங்குகிறது. தலைநகரின் மிக உயமான கட்டிடம் அவர் நினைவாகக் கட்டப்பட்ட நினைவுக் கோபுரமாகும்.

மாபிள் மற்றும் கிரனைற் கற்களால் கட்டப்பட்ட 555அடி $5\frac{1}{8}$அங்குல உயரமான நேர் கோடுகள் கொண்ட நினைவுச் சின்னம் 1848ல் ஆரம்பிக்கப்பட்டு 1888ல் பூர்த்திசெய்யப்பட்டது. உச்சிவரை ஏறிச்செல்வதற்கு அதன் உட்புறத்தில் 898படிகள் கட்டப்பட்டுள்ளன. சிறிது காலத்தின்பின் மின்தூக்கிகளும் அமைக்கப்பட்டன. கோபுரத்தின் உச்சியில் இருந்து தலைநகர் வாஷிங்ரனின் எல்லாப் பகுதிகளையும் பார்வையிடும் வசதி செய்யப்பட்டுள்ளது. உச்சிக்குச் செல்லும் வழியில் உலகநாடுகள், அமெரிக்க மாநிலங்கள், தனி மனிதர்கள் வழங்கிய 190 விதம் விதமான கற்கள் கட்டும் பணிக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

புராதன காலத்தின் ஏழு அதிசயங்களில் இரண்டு மாபெரும் கல்லறைகளாகும். ஏழு அதிசயங்களில் ஒன்று மாத்திரம் இன்றும் நிலைத்து நிற்கின்றது. கூபூ(KHUFU) என்ற எகிப்திய மன்னனின் 5000வருடம் பழமை வாய்ந்த பிரமிட் கல்லறை அதுவாகும். கலிக்கார்னேசுஸ் நாட்டின் அரசனுக்காகக் கட்டப்பட்ட பிரமாண்டமான கல்லறை மறைந்துவிட்டது. ஆனால் மொசோலியம் என்ற அந்தக் கல்லறையின் பெயர் ஆங்கில மொழியில் நிலைத்து நிற்கின்றது. பிரமாண்டமான கல்லறைகளை மொசோலியம் (MAU-SOLEUM) என்று அழைப்பது உலக வழமை. தாஜ்மகால் இந்த ரகத்தைச் சேர்ந்தது.

இறந்த போர்வீரர்கள், நாட்டுத் தலைவர்கள், பொதுமக்கள் ஆகியோரின் உடலை அடக்கம் செய்யும் பாரம்பரியத்திலிருந்து மனித நாகரிகத்தை அளவீடு செய்யமுடியுமென்ற மனிதவியலாளர்கள் கருதுகின்றனர். மனிதனிலும் பார்க்க அவனுடைய நினைவாலயங்களும் நினைவு தினங்களும் காலத்தை வென்று நிற்பதாக அவர்கள் கூறுகின்றனர். இதை உண்மையென்று ஏற்றுக்கொள்வதில் தவறில்லை.




அறியப்படாத போர் வீரனின் கல்லறையொன்றைக் கடந்துசெல்லும் ஒரு போர்வீரன்

போரில் மடிந்த தனது அணியினரின் மத்தியிலிருந்து ஒருவருடைய உடலை மாத்திரம் சொந்த நாட்டிற்குக் கொண்டுவந்து அந்த உடலுக்கு உயர் அந்தஸ்து வழங்கும் பாரம்பரியம் முதலாம் உலகப்போரின் பின் ஆரம்பமாகியது. அப்படித் தெரிவுசெய்யப்படுபவரின் ஊர், பெயர், இலக்கம் போன்ற அடையாளம் பார்க்கப்படுவதில்லை. இவர் அடையாளம் காணப்படாதவராக இறுதிவரை இருப்பார். இந்த உடலைச்சுற்றி ஒரு மிகவும் உணர்வுபூர்வமான நினைவுச் சின்னம் கட்டியெழுப்பப்படுகின்றது. இந்த நினைவுச் சின்னத்தின் பெயர் THE TOMB OF THE UNKNOWN SOLDIER அதாவது யாரென்று அறியப்படாத போர்வீரனின் கல்லறை என்பது பொருள்

# வையம் வாழும் வரையும் வாழ்வீர்



மேகம்
தெளித்த
நீரும்
வைகறை மலர்ந்த
பூவும்
நாங்கள் சொரிந்த
கண்ணீரும்
மாலையாய்த் தொடுத்த
மலரும் நாரும்
ஆசையாய் வந்து
தழுவும் காற்றும்

நீங்கள்
ஓசையின்றித் துயில்கின்ற
கல்லறையைத் தீண்டயிலே
புனிதம் பெறும்
வானம் பிளந்து
உயரும் வீரமும்
தேசம் மீது
வியக்கும் பாசமும்
ஆசை துறந்த
துறவின் நோக்கமும்
தேசபதி மேல்
கொண்ட நேசமும்
சாவை மதித்திடா
நெஞ்ச வைரமும்
பகையை மிதித்திடும்
வீர வித்தையும்
எல்லை கண்டிடா
உயர்ந்த ஈகமும்

தாங்கி நின்றிடும்
உங்கள் சரித்திரம்
உலகில் எங்குமே
இல்லை என்பதே
உண்மையாகிடும்
மணிகள் ஒலிக்கும்
ஓசையும்
மனதை உறைக்கும்
கானமும்
வதனம் காட்டும்
தீபமும்
உம்மைத் தாங்கும்
இல்லமும்
உங்களிற்கானது
புண்ணியமென்பதை
எண்ணியே
எழுச்சி பெறும்

கல்லறை தொட்டுத்
தொழுகின்ற கரங்களும்
தோளுரசி நின்றுறவும்
களம் தொடுத்த
தோள்களும்
விழிகசிய உம்முன்
விம்முகின்ற மனங்களும்

திருநாளில் வந்துமக்கு
விளக்கேற்றும் விரல்களும்
உங்களது கனவு தாங்கும்
உணர்வினோடு
உறுதிகொள்ளும்

விடுதலை நோக்கி
நடந்த கவட்டையும்
உயிரை வெறுத்து
நினைத்த கனவையும்
உறவை அறுத்து
வரித்த கொள்கையும்
தன்னுள் இருத்தி
உள்ளம் உருகித்
துடிக்கும் பொழுதில்
எதற்கும் குனியாத்
தலைவன் மனது
உமக்காய் மட்டும்
தலையைக் குனியும்

உயிர்தாங்கும் வரையுங்கள்
சினம் கண்ட பகையும்
இமையாகி நீர் காத்த
விழி தோன்றும் உறவும்
மண்ணோடு கடல்வானும்
அழியாத வரைக்கும்
எம்மோடு நீர் வாழ்வீர்
எனும் உண்மை
சொல்வோம் - நெஞ்சத்தில்
நீர் கொண்ட தாகத்தை
வெல்வோம் - உலகத்தில்
எமக்கென்றோர்
நாடொன்று செய்வோம்

செந்தோழன்

அவன் கைத்துப்பாக்கியைக் கழட்டி துப்புரவு செய்து பூட்டினான். அன்று மாவீரர் நாள். வன்னி எழுச்சிக்கோலம் பூண்டிருக்கும் என்பது அவனுக்குத் தெரியும்.

இராணுவ வலையால் பின்னப்பட்ட யாழ்ப்பாணத்தினுள் என்னதான் செய்யமுடியும். அன்றைய நாளில்தான் இராணுவத்தினரின் ரோந்துகளும் கண்காணிப்புக்களும் அதிகமாக இருக்கும்.

அவனது மனம் துயிலுமில்லம் போய் சுடரேற்ற விரும்பிய போதும் ஆபத்தை உணர்ந்து அமைதியாய் இருந்தான். கடந்த ஆண்டில் போராளிகள் சிலர் சுடரேற்ற துயிலுமில்லம் சென்று வீரச்சாவடைந்த சம்பவம் நினைவில் வந்தது.

அவன் தனது வேலைகளை முடித்துவிட்டு அந்த இடத்திற்கு வந்து சேருவான். பெரிய தோட்டவெளியின் நடுவில் ஒரு குடிசை. அந்தக் குடிசையின் தனிமை போலவே தனித்துப்போன அப்பு ஒருவர் அங்கு குடியிருந்தார்.

அப்புவை சந்தித்த நாள் அவனால் மறக்கமுடியாத நாளாக இருந்தது. அவன் வாங்கிய பத்திரிகையை சைக்கிளின் முன் கூடையில் வைத்துவிட்டு வீதிவழியே வந்துகொண்டிருந்தான். இராணுவம் திருப்பத்தில் வருவதை அப்போதுதான் கண்டான். ஒரு இராணுவத்தினன் குறித்த தூர இடைவெளியில் முன்னுக்கு வந்து கொண்டிருந்தான்.


ஒழுங்கைகளில் திரும்பித் தப்ப ஒழுங்கைகளுமில்லை. வந்தவழியே திரும்பிலும் சந்தேகத்தில் சுட்டுவிடுவானென்பது அவனுக்குத் தெரியும். முன்னெச்சரிக்கையுடன் முன்னோக்கி பெடலை மிதித்தான்.

எதிரே வந்த இராணுவத்தினன் அவனைக் கூப்பிட்டான். அவன் சைக்கிளால் இறங்கி அவனருகில் சென்றான். அவனது மனம் ஆபத்தை உணர்ந்தது. கண்ணிமைக்கும் பொழுதிற்குள் சைக்கிளை இராணுவத்தினனை நோக்கி வீசிவிட்டு பக்கத்திலிருந்த மதிலால் எம்பிக்குதித்தான். துப்பாக்கி ரவைகள் துரத்தின. பலமதில்கள் தாண்டி நீண்டதூரம் ஓடினான். தோட்டவெளிக்கு வந்துவிட்டான்.

இனி ஆபத்தில்லை என்பதை உணர்ந்தவன் தோட்ட வெளியில் தெரிந்த குடிசை நோக்கி நடந்தான். அப்போதுதான் காலைப்பார்த்தான். காலிலிருந்து குருதி வழிந்துகொண்டிருந்தது. மதிலிலிருந்த போத்திலோடு காலில் கிழித்திருந்தது.

## உறங்காத உணர்வுகள்

ஆ.ந.பொற்கோ



குடிசையில் இருந்த அப்பு அவனைக் கண்டுவிட்டார். அவனை யாரென இனங்கண்டுகொண்டார். அவனது காயத்தைக் கழுவி முருங்கையிலைச்சாறு வைத்துக் கட்டிவிட்டார். அவனை தன்னுடனேயே தங்கும்படி கேட்டுக்கொண்டார். மூன்று நாட்கள் கடந்தன. அவனுக்க அங்கு தங்குவது பொருத்தமாகப்பட்டது.

அப்புவுக்கு சுகஜீனமான நாட்களில் அவரை எல்லாவிதத்திலும் வடிவாகக் கவனிப்பான்.

அப்புவுக்கும் அவனில் அளவு கடந்த பாசம். அவன் வெளியில் போய் விட்டால் வரும் வரை எதிர்பார்த்துக் காத்திருப்பார்.

வெளியில் போயிருந்த அப்பு குடிசைக்குத் திரும்பியிருந்தார். அவரது பைக்குள் தேங்காய்நெய் போத்தலும் தென்னம்பாளை கீறல்களும் இருந்தன. வெள்ளைத் துணி எடுத்து தென்னம்பாளைக் கீறல்களில் பந்தம் சுற்றினார். அவற்றைத் தேங்காய் நெய்யில் ஊறவிட்டார்.

பொழுது சாய்ந்து அந்த நேரம் நெருங்கியது. அப்புவும் அவனும் சுடரேற்றினர். ஒளி குடிசையை நிறைத்தது.

அவனுக்கு அந்த ஒளியில் பல மாவீரர்களின் முகங்கள் தெரிந்தன. அப்புவைத் திரும்பிப் பார்த்தான். அப்புவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து மணலில் பொட்டிட்டது.

நாலாபுறமுமிருந்து மணியொலி கேட்டது. அவன் எழுந்து குடிசைக்கு வெளியே வந்தான். தூரத்தில் மின்மினிகளாய் சுடர்கள் தெரிந்தன.

பகிரப்படாத பக்கங்கள்

# சிங்கள-தமிழ் கலைவிழா

## - ஒரு பார்வை

**சு.அரசண்ணா**

"முகிழ்ந்து மலர்வோம் நம் சோதர உறவுடன்" சிங்கள - தமிழ் கலைக்கூடல், 2003ஒக்டோபர் 29,30 காலை 9.00 - இரவு 8.30 கொழும்பு புதிய நகரசபை மண்டபத்தில், 'சகோதரத்துவத்துடனான அழைப்பு' ஹிறு குழுவினர். இவ்வாறான முகப்பு வாசகங்களைக்கொண்ட அழைப்பினை விடுத்து, சிங்கள, தமிழ், முஸ்லீம் கலைஞர்கள் அறிஞர்கள் ஒன்றுகூடிய கலைவிழா ஒன்று நடந்து முடிந்துள்ளது.

நீண்ட நெடுங்காலம் இவ்வாறான ஒன்றுகூடலைச் செய்யமுடியாதிருந்த மேற்படி பகுதியினரின் அறிஞர்கள் கலைஞர்கள் என்போர் ஒன்றுகூடி இன்றைய சமாதான கால வேளையைப் பயன்படுத்தி ஹிறு குழுவினர் இவ்விழாவினை முன்னெடுத்துள்ளனர்.

அழிந்துபோன உறவுகளை மீண்டும் புதுப்பிக்கும் வகையில், மலர்ந்த மனமுகப்பாங்குடன் "சிங்கள - தமிழ் கலைவிழா" முன்னெடுக்கப் பெற்றுள்ளது.

உறவினை மேற்கொள்ளும் தொடுகைகள் பொருந்திய முன்னெடுப்புக்கள் எல்லாம் உலகில் உயர்ந்தவை என்பது மறுக்கப்படமுடியாத உண்மையாகும்.



அதற்கு ஏற்றவாறான அறிக்கைகளையும், வெளிப்படுத்தல்களையும், தவிர்க்க முடியாமல் அதிகார வர்க்கத்தாரின் வேண்டாத முன்னெடுப்புக்கள் காரணமாகப் பிரிந்து பகைமையுற்று உள்ள இருதரப்புக்குள்ளிருந்தும் முன்னெடுக்கப்படவேண்டும்.

பகைமையின் காழ்ப்புணர்ச்சி நரம்புகளை மீட்டிக்கொண்டே ஐக்கிய கீதம் எழுப்புவது என்பது வெறும் இகழ்ச்சிக்குரியதே. ஏற்பு என்பதும் மதிப்பளிப்பு என்பதும் உறவின் வேர்களின்மீது வார்க்கப்படும் நன்நீரைப் போன்றது. அந்நன்நீராகவே சிங்கள - தமிழ் கலைவிழா அமைகிறது.

எதிர்ப்பின் மத்தியில், விழாவின் நிகழ்ச்சித் தளத்திற்குள்ளேயே எதிர்க்கிளர்ச்சியாளர்கள் மூர்க்கத்தனமாகப் புகுந்து அடாவடித்தன நெருப்பை மூட்டிய போதும், அந்நெருப்பை எரித்து அகற்றி விழாவின் மேனியிலும் அதன் உள்ளகங்களிலும் எவ்வித தாக்கங்களும் ஏற்படாமற் காத்து - விழா தன்நிறைவையும் இலக்கையும் எட்டியுள்ளது.

வரலாற்றில் சிங்கள இனம் பெருமையுடன் தன் மார்பைத் தட்டிக்கொள்ளும் சிறப்பினை, இவ்விழா அவ்வினத்திற்குச் சேர்த்துள்ளது.

மென்முறையில் நிகழ்ந்தேறும் இந்த உன்னதமானவற்றுக்காகவும் இரத்தம் சிந்தவேண்டியுள்ளது" என்பது ஒரு துர்ப்பாக்கியமே. அந்தத் துர்ப்பாக்கிய நடவடிக்கையை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு இந்த விழா முன்னெடுப்பின் நேர்த்தியினை மேலும் பார்ப்பது நல்லது.

விழாவில் கலந்துகொள்ளச்சென்ற தமிழ், முஸ்லீம் கலைஞர்களையும் அறிஞர்களையும் விழா ஏற்பாட்டாளர்கள் உள்வாங்கிய நடவடிக்கைகள் உயர்வான பண்பாட்டினை உணர்த்துபவையாகும். இதனைப்பற்றி வன்னியில் இருந்து சென்ற கலைஞர் ஒருவர் பின்வருமாறு தெரிவிக்கிறார்.

இங்கிருந்து நாங்கள் வாகனங்களில் சென்றோம். யாஎலை என்னும் இடத்தில் வைத்து, எமது வாகனங்கள் சில சிங்கள இளைஞர்களால் பொறுப்பேற்கப் பெற்று அருகிலுள்ள தேவாலயம் ஒன்றிற்கு அழைத்துச் செல்லப்பெற்றோம். அங்கே, ஆண்களும் பெண்களுமாய் பத்துப் பன்னிரண்டு பேர்கள், உறவின் உணர்வுகளை உள்ளத்தின் அடித்தளத்தில இருந்து கிளரச்செய்யும், வாஞ்சைமிகு முகங்களுடனும், பொருத்தமான புன்னகை வெளிக்காட்டல்களுடனும் வரவேற்றனர்.

எது எப்படியிருக்குமோ என்ற ஐயுறவு இருட்டினை அகற்றும் வெளிச்சமாக அவர்களின் அணுகுமுறைகள் இருந்தன. எமக்கு எந்தத் தீங்கும் விளைந்துவிடக்கூடாது என்ற கரிசனை அவர்கள் ஒவ்வொருவரினதும் ஒவ்வொரு அசைவிலும் தென்பட்டது.

இராப்போசனம் முடிந்ததும், விழா அமைப்பாளர் ஒருவர் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். அவரின் உரை வெளிப்படுத்திய கருத்துகளும், அவரின் தோற்றமும் முகமுறுவலும் எம்மை, எம்மையறியாமலேயே அவருடன் இணைத்துவிட்டது. வரவேற்புப் பண்பின் சிறப்பு அதுதான் போலும்.

இவைமுடிய ஒவ்வொரு வாகனத்திலும் மூன்று மூன்று ஹிறு அமைப்பினர் பாதுகாப்பாக வர நாங்கள் இரவுத் தங்ககத்திற்கு அழைத்துச் செல்லப்பெற்றோம். அங்கேயும் ஆண்களும் பெண்களுமான ஒரு குழு எம்மை வரவேற்றது. நாம் கோராமலேயே எல்லா வசதிகளும் கூடிய படுக்கை இடங்கள் ஒதுக்கித் தந்திருந்தனர்.

அடுத்தநாள் காலை உணவை முடித்துக்கொண்டு 8.30 மணியளவில் விழா நடைபெறும் இடத்திற்கு அழைத்துச் செல்லப்பெற்றோம். அங்கே விழா முன்னெடுக்கப்பெறும் புதிய நகர மண்டபத்தை, அழகுற அமைக்கப்பெற்ற அலங்காரங்களுடன் தரிசித்தோம். அதன் முன்னால் உள்ள விகாரமாதேவி பூங்காவையும் கண்ணுற்றோம்.

இவ்வாறு அந்தக் கலைஞர் தனக்குள் உண்டான உணர்வுகளையும் தான் கண்டவற்றையும் மெய்சிலிர்த்து முன்வைக்கிறார். உண்மையில் அந்தக் கலைஞரின் மெய்சிலிர்ப்பு ஒன்றும் விநோதமானது அல்ல. சிங்கள, தமிழ் ஆகிய இவ்விரு இனங்களின் உறவுப்பாலம்தான் இருந்து கொட்டுண்டு கிடக்கிறதே. இந் நிலையில் ஹிறு அமைப்பினர் அளித்த வரவேற்பு அவருக்கு வியப்பையும் அதே நேரம் இணையும் மனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பகைமை உணர்வோடு நீண்ட காலம் வாழ்ந்துவருகிற இவ்விரு இனங்களும், ஒவ்வொரு இனத்திற்கும் எதிரான சாடல்களையும், வசைமொழிகளையும் ஓர் இனத்தை மறுஇனம் பழித்திடும் சொல் நடைகளையும் சுலோகங்களையும், கருத்துருக்களையும், துணுக்குகளையும் உருவாக்கிக் கையாண்டு வந்துள்ளன. இவை பகைமைச் சுவரைப் பலப்படுத்தும் பக்கத் தூண்களாக விளங்குகின்றன.

இவற்றை இல்லாது செய்யும் வல்லமை கொண்டவைகளாகவே சிங்கள-தமிழ் கலைவிழா போன்ற முன்னெடுப்புகள் செயல்பெறுகின்றன. வசைமொழிகளை விலக்கி இசைவு மொழிகள் பேசப்பெறல் வேண்டும்.

இந்த இசைவு மொழியினை இச்சமாதான காலத்தில் சம்பந்தம் பெற்ற இருபகுதியினரும் எழுப்ப வேண்டியது மிகவும் அவசியம்.

தமிழ்ச் சமூகம் சமாதானத்திற்காக முன்னெடுக்கும் பல்வேறு நடவடிக்கைகளுக்கு மத்தியில் இரண்டு மானுடத்தின் தமிழ்க்கூடல்களை முன்னெடுத்து தமிழ், சிங்கள, முஸ்லீம், மலையகத் தரப்பினரின் ஒன்றுகூடலுக்கும் களிப்புறு கலந்துறவாடலுக்கும் இடமளித்து ஒற்றுமை வரலாற்றிற்குச் சேவகம் செய்துள்ளது.

இதன்மூலம், இனம், மதம், மொழி, பிரதேசம், பால் என்னும் பேதங்களைக் கடந்து அனைத்துக் கலைஞர்களும் அறிஞர்களும் ஆர்வலர்களும் உரிய உரிய தலைப்புக்களில் ஒன்றுகூடினர். மானிட உயர்வின் மாண்பிற்கு உழைத்தனர்.

அம்மானுடத்தின் தமிழ்க்கூடல் முன்னெடுப்புகளுக்கு உகந்ததாகவும் தகுந்ததாகவும் எடுக்கப்பெற்ற உறவுப் பாலத்தை பலப்படுத்தும் நடவடிக்கையே இந்தச் சிங்கள - தமிழ் கலைவிழா. இவ்விழாவிலும் இனம், மதம், மொழி, பிரதேசம், பால் என்பனவற்றிற்கு அப்பாற்பெற்ற ஒன்றுசேருதல் என்பது நிறைவேறியுள்ளது.

இத்தீவில் வாழும் இனங்களுக்கிடையேயான ஒற்றுமையை விரும்புவது மனிதத்தின் நியாயம் ஆகும். மொழியால், பண்பால் மாறுபட்டு, வேறுவேறு இனத்தவர்கள் என அடையாளம் காணலாம். வெவ்வேறு நிலப்பரப்புகளையுடைய இருதேசத்தவர்கள் எனவுமாகலாம். ஆனால், இத்தீவில் வாழும் மனிதர்கள் என்னும் அடிப்படையில் ஒன்றுபெற்றுக் களிப்பது, குதூகலிப்பது, உறவுநிலை கொண்டாடுவது அவசியமற்றது என மனிதநேயச் சிந்தனையாளர்கள் எவருமே கூறமாட்டார்கள்.

ஒடுக்குமுறை கோரத்தாண்டவம் விளைத்த கொடுமையின் உருவங்களைத் தாங்கிய பின்னணிக்காண்பிய அரங்கில், ஒற்றுமை கீதம்பாடிய சிங்கள-தமிழ் கலைவிழா, முதல்நாளில் வரவேற்புரையை அடுத்து புனைகதை, இசைப்பாடல், சினிமா என்னும் தலைப்புகளில் கருத்தமர்வுகளை நிகழ்த்தியது. அத்துடன் பொதுக் கலந்துரையாடலுக்கும் இடமளித்திருந்தது.

மறுநாள் சிறப்புரையை அடுத்து, கவிதை, தொடர்பு ஊடகம், நாடகம் என்னும் தலைப்புகளிலான கருத்தமர்வுகளைக் கொண்டிருந்தது. அத்துடன் பொதுக் கலந்துரையாடல், மற்றும் அரங்க நிகழ்ச்சிகள் என்பவையும் நடைபெற்றன.

கருத்தமர்வுகள் அனைத்தும் தனித்தனியே ஏற்ற ஏற்ற தலைமை உரையாளர்களையும் பிரதான உரையாளர்களையும் கருத்துரைக் குழுவினரையும் கொண்டிருந்தன. நேரப்போதாமையும் விளைந்த இடையூறுகளும் சிலரின் உரை நீட்சிகளும், ஒவ்வொன்றினதும் முழுமையின் நிறைவுக்கு இடமளிக்காதபோதும், ஒவ்வொன்றும் அவ்வவற்றிற்கான சிறப்பான உள்ளடக்கங்களை வெளிப்படுத்திக் கொண்டன. உண்மைகளை உரைத்தன. உறவை வளர்த்தன.

அவ்விழாவினைக் காணக் கிடைத்தவர்களும், சொல்லக் கேட்டவர்களும் மனம் பூரிக்கின்றனர். சர்வதேச ரீதியாகவும் இவ்விழா பேரைப் பதித்துக்கொண்டுள்ளது. (இந்நிலையை உருவாக்கிய தரப்பினர்களுக்கு ஹிறு குழுவினர் நன்றி சொல்லத்தான் வேண்டும்)

அந்த விழாவில் கலந்து உவகை பெற்றோர்களின் சுகம் இந்தத் தீவிலுள்ள அனைவருக்குமே கிடைக்கவேண்டும்.

சந்தேகமும், வெறுப்பும், காழ்ப்புணர்ச்சியும், இனவாத மூர்க்கமும் கொண்டவர்கள் மகிழ்ந்திருந்ததாக எந்த வரலாற்றிலும் குறிப்புகள் இல்லை.

ஒவ்வொருவரையும் ஏற்றுக்கொண்டு, வேறுபாடுகளையும் தனித்துவங்களையும் மதித்துப் போற்றும் பண்பு உலகில் என்றும் உயர்வானது என்றுதான் வரலாற்றின் எல்லா அத்தியாயங்களும் முன்வைக்கின்றன.

அந்தவகையில் சிங்கள-தமிழ் கலைவிழாவினை அந்த விழாவில் ஒலித்த பின்வரும் கருத்துகளும் உயர்த்துகின்றன.

தமிழ்ச் சகோரர்களைப் பாதுகாப்போம். நீண்ட நெடுங்காலமாக வரலாற்று ரீதியாக இந்த நாட்டில் இருந்துவந்த சிங்கள, தமிழ், முஸ்லீம் நல்லுறவை மீண்டும் கட்டியெழுப்ப நாங்கள் ஒன்றுபட்டுள்ளோம். எமது பேனைகள் அதற்காக எழுதிக் கொண்டேயிருக்கவேண்டும். (பேராசிரியர் சுச்சரித்த கம்லத்)

தமிழர்களைக் காப்பதற்காக சிங்கள இளைஞர்கள் முதன் முறையாக இரத்தம் சிந்தியுள்ளனர். (ஹிறு முக்கியஸ்தர் பாசன)

தமிழ் உறவுகளைப் பாதுகாக்க நாங்கள் மனித வெடிகுண்டுகளாக மாறவும் தயாராக உள்ளோம். (தர்மசிறி பண்டார நாயக்க)

ஓர் இனத்தின்மீது வீழ்ந்த ஒடுக்குமுறை அடாவடித்தனம் காரணமாக ஏற்கனவே மனித வெடிகுண்டுகள் அதிர்ந்துள்ளன.... இப்போது ஒன்றுகூடல்களுக்குத் தடை ஏற்படுத்தும் சக்திகளுக்கு எதிரான மனித வெடிகுண்டு....

உண்மை நிலையை உணர்ந்து உரியவர்கள் பொருத்தமான முன்னெடுப்புகளை மேற்கொள்ள சிங்கள-தமிழ் கலைவிழா அழைப்பு விடுக்கிறது. வளரும் ஒற்றுமையைக் கலைக்காத குணாம்சமே இன்றைய வரலாற்றின் தேவையாகவுள்ளது.

இவ்விழாவினை முன்னெடுத்த ஹிறு அமைப்பினரும் மற்றும் ஒத்துழைப்பாளர்களும் வரலாற்றுத்தாயின் நன்றி மாலைக்கு உரியவர்கள். இவர்களின் சிறப்பும் இவர்கள் எடுத்த விழாவின் சிறப்பும் எதிர்காலத்தில் பேசப்பெறும் நிலைப்பாடுகளைக் கொண்டவைகளாக இருக்கும் என்பது உறுதியான உண்மை.

# 2003 மாவீரர் நாளன்று தமிழீழத்தேசியத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரை

(01ம் பக்கத் தொடர்ச்சி)

எமது தேசத்தின் விடுதலைக்கு நாம் கொடுத்த விலை ஒப்பற்றது. உலக விடுதலை வரலாற்றில் நிகரற்றது. இந்த அளப்பரிய ஈகத்தின் ஆன்மீக சக்தி இன்று உலகத்தின் மனச்சாட்சியை உலுப்பிவிட்டிருக்கிறது. எமது மாவீரர்களின் சுதந்திர தாகம் சாவுடன் தணிந்து போகவில்லை. அது எமது இனத்தின் வீர விடுதலைக் குரலாக உலகெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

சாதி, மதம், வர்க்கம் என்ற வேறுபாடுகளுக்கப்பால், ஒரு விடுதலை இயக்கத்தின் கீழ், ஒரு விடுதலை இலட்சியத்தின் கீழ், ஒன்றுபட்ட சமூகமாக எமது மக்கள் இன்று அணிதிரண்டு நிற்கிறார்கள். வீரம் செறிந்த எமது விடுதலைப் போராட்டமும் அந்த விடுதலைப் போராட்டத்தில் எமது போராளிகள் ஈட்டிய அபாரமான சாதனைகளும் அவர்கள் புரிந்த அற்புதமான தியாகங்களுமே எமது மக்களை எழுச்சியூட்டி, உணர்வூட்டி ஒரே அணியில், ஒரே இனமாக, ஒரே தேசமாக ஒன்றுதிரள வைத்திருக்கின்றன. எமது மாவீரர்களின் மகத்தான தியாகங்களும் அர்ப்பணிப்புகளுமே எமது தேசத்தின் ஒருமைப்பாட்டிற்கு ஆதார சக்தியாக விளங்குகின்றன.


எனது அன்பான மக்களே!

சிங்கள தேசத்தில் இன்று அரசாங்கம் என்று கருதக்கூடிய ஓர் ஒழுங்கமைவான கட்டமைப்பு இயங்கவில்லை. அரச அதிகாரமானது, இரு பெரும் சிங்களக் கட்சிகளின் தலைமைகள் மத்தியிற் பிளவுபட்டுக் கிடக்கிறது. பாராளுமன்ற ஆட்சியும் சனாதிபதி ஆட்சியும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு மோதும் நிலையில் உள்ளன. பாதுகாப்பு, உள்துறை, ஊடக அமைச்சுகளை சந்திரிகா அம்மையார் திடீரெனப் பறித்துக் கொண்டதால் ரணில் விக்கிரமசிங்காவின் ஆட்சி பீடம் அதிகார வலுவிழந்து முடங்கிக் கிடக்கிறது. இரு தலைவர்களுக்கும் மத்தியிலான இந்த அதிகார இழுபறியால் அரச கட்டுமானம் ஆட்டம் கண்டு உறுதிநிலை குலைந்துள்ளது. இந்த நெருக்கடி காரணமாகச் சமாதான முன்னெடுப்புகள் செயலிழந்து போயின. இந்தக் குழப்ப நிலையால் விரக்தியடைந்த நோர்வே அரசு தனது சமாதான முயற்சிகளை இடைநிறுத்தியுள்ளது. தென்னிலங்கையில் திடீரென உருவாகியுள்ள இத்தகைய நிலைமைகள் காரணமாக அமைதிச் சூழ்நிலைக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. சமாதான வழியிலான பேச்சுக்கும் சமரசத் தீர்வுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது. இந் நெருக்கடி நிலைமை தமிழ் பேசும் மக்களுக்கு மட்டுமன்றி சமாதானத்தை விரும்பும் சர்வதேச நாடுகளுக்கும் கவலையையும் ஏமாற்றத்தையும் கொடுத்திருக்கிறது.

கொழும்பில், திடீரென இந்த அரசியற் பூகம்பம் ஏற்பட்டதன் காரணமென்ன? ஏற்கனவே இரு துருவங்களாக முரண்பட்டிருந்த அரச அதிகார மையத்தில் திடீரென விரிசல் விழுந்ததன் காரணமென்ன? போர் ஓய்வைப் பேணி அமைதியைக் காப்பதற்கு அத்தியாவசியமான பாதுகாப்பு, உள்துறை அமைச்சுகளைச் சந்திரிகா அம்மையார் திடீரெனப் பறித்துக்கொண்ட புறநிலைக் காரணி என்ன?

தனது தலையீட்டுக்கு இரண்டு காரணங்களை முன்வைக்கிறார் சந்திரிகா. ஒன்று, விடுதலைப் புலிகள் இயக்கம் தனது இராணுவக் கட்டமைப்பைப் பலப்படுத்திப் போருக்கான ஆயத்தங்களைச் செய்து வருவதால் இலங்கையின் பாதுகாப்புக்கும் இறைமைக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்பது. அடுத்தது, ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கம் புலிகள் இயக்கத்திற்குப் பெரிய அளவிற் சலுகைகளை வழங்கி வருகிறது என்பதாகும். இந்த இரண்டு குற்றச் சாட்டுகளிலும் எவ்வித உண்மையுமில்லை என்பதை நான் இங்கு திட்டவட்டமாக எடுத்துரைக்க விரும்புகின்றேன். எமது விடுதலை இயக்கத்தைக் களங்கப்படுத்தும் குறிக்கோளுடனும் தற்போதைய சமாதானச் சூழ்நிலையைக் குழப்பிவிடும் நோக்கத்தோடும் கட்டவிழ்த்துவிடப்பட்ட புரளிகள் இவை.

எமது இயக்கமுஞ் சரி, மக்களுஞ் சரி போரை விரும்பவில்லை. வன்முறைப் பாதையை விரும்பவில்லை. நாம் சமாதானத்தையே விரும்புகின்றோம். சமாதான வழியில் எமது பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதையே விரும்புகின்றோம். சமாதான வழிமுறையில் நாம் ஆழமான நம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்டிருக்கிறோம். இதன் காரணமாகவே அமைதி நிலைக்கு எவ்வித பங்கமும் ஏற்படாத வண்ணம் போர் நிறுத்தத்தை நாம் இறுக்கமாகவும் உறுதியாகவும் பேணி வருகின்றோம். இப் போர் நிறுத்தத்தை எமது இயக்கமே முதலில் ஒருதலைப்பட்சமாக அறிவித்தது. அத்துடன் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆயுதப் படைகளின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டு நாம் அமைதி காத்து வருகின்றோம்.




நாம் பெருந்தொகையில் ஆட்சேர்ப்பு நிகழ்த்தி, ஆயுதங்களைத் தருவித்து, படையணிகளைப் பலப்படுத்தி, போருக்கான ஆயத்தங்களைச் செய்து வருகின்றோமென சந்திரிகா அம்மையார் குற்றம் சுமத்துவது அபாண்டமான பொய்யாகும். அமைதி காக்கும் பணியில் நாம் முழுமையாக ஈடுபட்டிருக்கிறோமே தவிர போருக்கான ஆயத்தங்கள் எதையும் செய்யவில்லை. எமது நிர்வாகக் கட்டமைப்புகளுக்கு ஆட்பலம் தேவை என்பதால் சிறிய அளவில் ஆட்சேர்ப்புச் செய்து வருகின்றோம் என்பது உண்மை. இதனைத் திரிவுபடுத்தி, பெரிதுபடுத்திப் போருக்கான முன்முயற்சியெனச் சிங்கள மக்களுக்குப் பூச்சாண்டி காட்டுகிறார் சந்திரிகா.

இப் போர்நிறுத்தத்தால் தமிழர் தாயகத்தில் முழுமையான அமைதி நிலை ஏற்படவில்லை. இயல்பு நிலையும் திரும்பவில்லை. அந்நிய இராணுவ ஆக்கிரமிப்புக்கு ஆளான அவல வாழ்க்கையே தொடர்கிறது. சிங்கள இராணுவம் போர் நிறுத்த விதிகளையும் கடப்பாடுகளையும் நிறைவு செய்ய மறுத்து வருகிறது. உயர் பாதுகாப்பு வலையங்கள் என்ற போர்வையிற் கணிசமான குடியிருப்பு நிலங்களில் இராணுவ ஆக்கிரமிப்புத் தொடர்வதால், இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது சொந்தக் கிராமங்களுக்கும் வாழ்விடங்களுக்கும் திரும்ப முடியாது அவலப்பட்டு வருகின்றனர். இது ஒருபுறமிருக்க, ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அடாவடித்தனங்கள் அடிக்கடி தலைதூக்கி வருகின்றன. இதனால் தமிழ்ப் பொதுமக்கள் சதா துன்பத்திற்கும் இம்சைக்கும் ஆளாகி வருகின்றனர். போருக்கு ஓய்வு ஏற்பட்ட போதும் எமது மக்களுக்கு இன்னும் ஓய்வு கிட்டவில்லை. முழுமையான அமைதியையும் இயல்பான வாழ்வையும் எமது மக்கள் இன்னும் அனுபவிக்க முடியவில்லை. அதேவேளை, போர் நிறுத்தத்தாற் சிங்கள தேசத்தில் முழுமையான அமைதியும் இயல்பு நிலையும் நிலவுகிறது. பொருளாதார வாழ்வும் மேம்பட்டு வருகிறது. போர் நிறுத்தத்தின் ஆக்கபூர்வமான பயன்களைச் சிங்கள தேசமே அனுபவித்து வருகிறது. ஆனால் தமிழர்களின் அவலநிலை தொடர்கிறது. இது தான் இன்றைய யதார்த்த மெய்நிலை.

இரண்டு ஆண்டுகளாக நீடிக்கும் போர்நிறுத்த காலத்தில், சந்திரிகா அம்மையார் குற்றம் சுமத்துவது போல, எமது இயக்கத்திற்குப் பெரும் சலுகைகள் வாரி வழங்கப்படவில்லை. மாறாக, இழப்புக்களையே நாம் சந்தித்திருக்கிறோம். போர்நிறுத்தக் காலத்தில் எமது இயக்கத்திற்குச் சொந்தமான இரு பெரும் வணிகக் கப்பல்கள் சர்வதேசக் கடற்பரப்பிற் கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்டன. எமது மீன்பிடிப் படகுகளும் நாசமாக்கப்பட்டிருக்கின்றன. இச் சம்பவங்களின் விளைவாக, மூத்த உறுப்பினர் பலர் உட்பட கடற்புலிப் போராளிகள் இருபத்தாறு பேரை நாம் இழந்தோம். பொறுமையின் எல்லைக்கு எம்மைத் தள்ளிய இந்த ஆத்திரமூட்டும் சம்பவங்களையும் சகித்துக் கொண்டு நாம் அமைதியைப் பேணி வந்தோமென்றால் அது சமாதானத்தில் எமக்குள்ள உறுதியையே எடுத்துக் காட்டுகிறது.

எமது விடுதலை இயக்கத்திற்கும் ரணில் விக்கிரமசிங்காவின் அரசுக்கும் மத்தியிற் சென்ற ஆண்டு செப்டெம்பர் மாதத்தில், தாய்லாந்தில் ஆரம்பித்த பேச்சுக்களில் உருப்படியான, ஆக்கபூர்வமான முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லை. ஆறு மாத காலத்திற்குள் நிகழ்ந்த ஆறு சுற்றுப் பேச்சுக்களின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களும் முடிவுகளும் நிறைவேற்றப்படவில்லை. போர் நெருக்கடியைத் தணித்து, இயல்பு நிலையைக் கொண்டு வருவதற்கும் இடம்பெயர்ந்த மக்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கும் நிறுவப்பட்ட உப-குழுக்கள் செயலிழந்து போயின. அரசுடன் பேசி எமது மக்கள் எதிர்கொண்டு நின்ற பூதாகரமான வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நாம் எடுத்த முயற்சிகள் பயனற்றுப் போயின. இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட தமிழர் தாயகத்தில் இயல்பு நிலையைத் தோற்றுவிப்பது, இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவது, போரால் அழிவுற்ற கட்டுமானங்களை மீளமைப்பது, அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பது போன்ற எமது மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை உதாசீனம் செய்துவிட்டு, அரச தரப்பும் அனுசரணையாளர்களும் மனித விழுமியங்கள் பற்றியும் இறுதித் தீர்வுக்கான வழிமுறைகள், வரைபடங்கள் பற்றியுமே முக்கிய கவனம் செலுத்தினர். இதனாற் பேச்சுவார்த்தை, மக்களது பிரச்சினைகளுக்கும் அபிலாசைகளுக்கும் அப்பால் வேறு திசையில் நகர்ந்தது. இது இவ்வாறிருக்க, சமாதானப் பேச்சுக்களை ஒரு கவர்ச்சிப் பொருளாகக் காட்டி, உலக நாடுகளிலிருந்து உதவியையும் கடனையும் பெற்று, போரினால் வீழ்ச்சி கண்ட பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதிலேயே ரணிலின் அரசு அதீத அக்கறை காட்டியது. அத்துடன் உலக நாடுகள் சிலவற்றின் உதவியுடன் ஒரு சர்வதேசப் பாதுகாப்பு வலையத்தை நிறுவி விடவும் அரசாங்கம் திட்டமிட்டுச் செயற்பட்டது. ரணில் அரசின் இத் தந்திரோபாயம் காரணமாகச் சமாதான முயற்சியிலும் பேச்சுக்களிலும் உலக நாடுகள் பலவற்றின் அக்கறையும் தலையீடும் அதிகரித்தன. தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு எத்தகைய வரையறைக்குள் தீர்வுகாணப்படவேண்டும் என்பதையும் சில நாடுகள் வலியுறுத்திக் கூறின. இவ்விதம் சர்வதேசத் தலையீடுகள் அதிகரித்ததன் எதிர்மறை விளைவாகச் சமாதானப் பேச்சு மேலும் சிக்கலடைந்தது. இந்தச் சூழ்நிலையிற் சென்ற ஆண்டு ஏப்ரல் மாத நடுப் பகுதியில் எமது இயக்கத்தை ஓரம் கட்டிவிட்டு, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் முக்கிய மாநாடு ஒன்று வாஷிங்டனிற் கூட்டப்பட்டது. பேச்சுவார்த்தையில் முக்கிய தரப்பாகவும் சம பங்காளி என்ற தகைமையுடனும் பங்குபற்றி வந்த எமது இயக்கம் இவ்விதம் சிறுமைப்படுத்தப்பட்டமை எமக்கு ஏமாற்றத்தையும் கவலையையும் தந்தது. இப்படியான நிலைமைகள் காரணமாகவே பேச்சுக்களைத் தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்துச் சமாதான வழிமுறையின் பல்வேறு பரிமாணங்களையும் மறுபரிசீலனை செய்ய நாம் தீர்மானித்தோம்.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண்பது என்பது உடனடியாக, குறுகிய காலத்திற் சாத்தியப்படப் போவதில்லை. அது நீண்ட காலம் பிடிக்கும். ஆனால் எமது மக்கள் எதிர்கொள்ளும் வாழ்க்கைப் பிரச்சினைகள் அவசரமானவை. நீண்ட காலத்திற்குப் பின்போட முடியாதவை. அத்தியாவசியமான மனிதாபிமானத் தேவைகள் ஒரு புறமும் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் போன்ற பிரச்சினைகள் மறுபுறமுமாக எமது மக்கள் எதிர்கொள்ளும் சிக்கலான, பாரிய இடர்களுக்கு உடனடியாகப் பரிகாரம் தேவை. இதுபற்றி ஆழமாகப் பரிசீலனை செய்து பார்த்தபொழுது தான் வடகிழக்கில் ஓர் இடைக்கால அதிகார சபை நிறுவப்படுவது அவசியமென உணர்ந்தோம். போரினாற் பேரழிவுகளுக்கு இலக்காகி, ஆயுதப் படைகளின் ஆக்கிரமிப்புக்கும் அச்சுறுத்தலுக்கும் ஆளாகி நிற்கும் தமிழர் தாயகத்தில் இயல்பு நிலையை தோற்றுவிக்கவும் இடம்பெயர்ந்தோரைக் குடியேற்றவும் புனர்நிர்மாண அபிவிருத்தி வேலைகளைச் செம்மையாகவும் துரிதமாகவும் நிறைவேற்றக் கூடிய செயற்றிறன்மிக்கதாக இந்த இடைக்கால ஆட்சியதிகார சபை அமைய வேண்டுமெனக் கருதினோம். இதன் அடிப்படையிற் கணிசமான அதிகாரங்களைக் கொண்டதான ஓர் இடைக்கால அரசியல் நிர்வாக ஆட்சியமைப்பு உருவாக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி, அதற்கான ஒரு திட்டவரைவை முன் வைக்குமாறு நாம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தோம். ஓர் உருப்படியான திட்டத்தை அரசாங்கம் முன்வைத்தால் அதனை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தைகளை மீண்டும்

(தொடர்ச்சி 16ம் பக்கம்)

# 2003 மாவீரர் நாளன்று தமிழீழத்தேசியத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரை

(15ம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்குவதற்கு நாம் தயாராக இருப்பதாகவும் அறிவித்தோம். கடந்த மே மாதம் 15ம் திகதி நோர்வே வெளிவிவகார அமைச்சர் திரு. பீட்டர்சன் அவர்களை நான் சந்தித்தபோதும் உருப்படியான அதிகாரங்களைக் கொண்ட ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தினேன். இருபது ஆண்டு காலமாக நீடித்த போரினால் அழிந்து போன எமது தேசத்தையும் எமது மக்களின் சிதைந்து போன வாழ்க்கையையும் மீளக் கட்டியமைப்பதற்கு இத்தகையதொரு ஆட்சியமைப்புத் தேவையென்பதையும் விளக்கினேன்.

எமது கோரிக்கைக்கு இணங்க, இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக, ஒன்றன் பின் ஒன்றாக, இரு திட்ட வரைவுகளை அரசாங்கம் எமக்கு அனுப்பி வைத்தது. இத் திட்ட வரைவுகளிற் குறிப்பிடப்பட்ட நிர்வாக சபை, நாம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க உருப்படியான அதிகாரங்களைக் கொண்டதாக அமையவில்லை. அத்துடன் எமது இயக்கத்தின் பங்கும் தெளிவானதாக வரையறுக்கப்படவில்லை. மிகவும் குறுகிய அதிகாரங்களுடன் அபிவிருத்தி வேலைகளை மட்டும் கையாளும் ஒரு நிர்வாக அமைப்பையே இவ் வரைவுகள் பரிந்துரைத்தன. இதனால் இத் திட்ட வரைவுகளை ஏற்க முடியாதென நாம் நிராகரித்தோம். இதனையடுத்து, இடைக்கால நிர்வாகஞ் சம்பந்தமாகப் புதிய யோசனைகள் அடங்கிய மூன்றாவது வரைவு ஒன்றை அரசாங்கம் எமது பரிசீலனைக்கு அனுப்பி வைத்தது. இத் திட்டம் எமக்குத் திருப்தி அளிக்காதபோதும் நாம் அதனை நிராகரித்துவிடவில்லை.

எமது இயக்கம் எதிர்பார்த்தது போலவும் எமது மக்களின் அபிலாசைகளை நிறைவு செய்யும் வகையிலும் ஒரு திட்டவட்டமான இடைக்கால ஆட்சியமைப்பை முன்வைக்க அரசாங்கம் தயங்குகின்றது என்பது எமக்குத் தெளிவாகியது. ஆயினும், ரணிலின் ஆட்சிபீடம் ஏதோ புதியபுதிய யோசனைகளை முன்வைக்க விடுதலைப் புலிகள் இயக்கம் அவற்றைத் தொடர்ச்சியாக நிராகரித்து வருவது போன்ற ஒரு தப்பபிப்பிராயம் எழக்கூடுமென நினைத்தோம். ஆகவேதான், அரசாங்கத்தின் இறுதி வரைவை எடுத்த எடுப்பில் நிராகரிக்காமல், அதற்கு மாற்றுத் திட்டமாக எமது யோசனைகள் அடங்கிய ஒரு திண்ணியமான, உருப்படியான இடைக்கால ஆட்சியதிகாரக் கட்டமைப்பை வரைந்து; அதனை அரசாங்கத்திடம் கையளிக்க நாம் முடிவெடுத்தோம். எமது திட்ட வரைவைத் தயாரிக்கும் விடயத்தில் நாம் அவசரப்படவில்லை. கால அவகாசம் ஏற்பட்டாலும் நாம் முதன்முதலாக எழுத்தில் வரைந்து கொடுக்கும் திட்டம், ஒரு இடைக்கால ஒழுங்காக அமைந்தபோதும் அது செம்மையானதாக, புதுமையானதாக, நடைமுறைச் சாத்தியமானதாக இருக்க வேண்டுமென விரும்பினோம். அத்தோடு, பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட எமது மக்களின் சிக்கலான வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தேடிக் கொடுக்கும் வழிமுறைகளைக் கொண்டதாகவும் அது அமைய வேண்டும் எனவும் எண்ணினோம். ஆகவேதான், எமது திட்ட வரைவைப் பரந்த அளவில், பல்வேறு மட்டங்களிற் பல்வேறு தரப்பினரதும் ஆலோசனையைப் பெற்றுத் தயாரித்தோம். பரந்துபட்ட ரீதியில் தமிழீழ மக்களையும் வெளிநாடுகளில் வதியும் எமது சட்ட, யாப்பு அறிஞர்களையும் சர்வதேச நிபுணர்களையும் கலந்தாலோசித்தே இத் திட்ட வரைவு உருவாக்கப்பட்டது.

அரசாங்கத்திடம் நாம் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டம் பற்றி நான் இங்கு விபரமாக விளக்கிக் கூறுவது அவசியமில்லை. இத் திட்ட வரைவு ஏற்கனவே ஊடகங்கள் வாயிலாக எல்லோரதும் பார்வைக்கும் ஆய்வுக்குமாக வெளியிடப்பட்டுள்ளது. எமது திட்ட யோசனைகள் பலரகமான சர்ச்சையையும் குழப்பத்தையும் கிளப்பியபோதும் சமாதானத் தீர்வை நோக்கி நாம் எடுத்த முயற்சியை உலக நாடுகள் பல வரவேற்றுள்ளன. எமது யோசனைகளை விபரமாகவும் தெளிவாகவும் முதற் தடவையாக எழுத்தில் முன்வைத்ததையும் சில வெளிநாடுகள் வரவேற்றுள்ளன. ரணிலின் அரசு எமது திட்ட வரைவை நிராகரிக்காது, அதன் அடிப்படையில் பேசுவதற்கு இணக்கம் தெரிவித்தது. அதே வேளை, எமது இடைக்கால நிர்வாக யோசனைகளுக்குச் சிங்கள இனவாத சக்திகளிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. தனித் தமிழ் அரசுக்கு அத்திவாரமாக எமது திட்டம் அமைவதாகச் சிங்கள இனவாதக் கட்சிகளும் ஊடகங்களும் கண்டனக் குரல் எழுப்பி வருகின்றன. இந்திய ஊடக உலகத்திலிருந்தும் இந்திய அரசியல் ஆய்வாளர்களிடமிருந்தும் இதேபோன்று கண்டன விமர்சனங்களும் வந்து கொண்டிருக்கின்றன. எதிர்க் கட்சிகளின் சார்பாகத் திரு. கதிர்காமர் விடுத்த நீண்ட அறிக்கையில் எமது திட்ட வரைவைப் படுமோசமாக விமர்ச்சித்து, தனியரசு உருவாக்கத்திற்கான அம்சங்கள் அதிற் பொதிந்து இருப்பதால் இலங்கையின் இறைமைக்குப் பேராபத்து ஏற்பட்டிருப்பதாக எச்சரித்தார்.



**2002 மாவீரர் நாளன்று தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்அவர்கள் மாவீரர் நினைவாகப் பொதுச்சுடரினை ஏற்றுகிறார்**

எமக்கு ஒரு புறம் ஆச்சரியத்தையும் மறுபுறம் ஏமாற்றத்தையும் கொடுத்த விடயம் என்னவென்றால் எமது இடைக்கால நிர்வாகத் திட்ட வரைவு வெளியான சில தினங்களிலேயே சந்திரிகா அம்மையார் திடீரென ரணில் விக்கிரமசிங்காவின் ஆட்சியதிகாரத்தின் கீழிருந்த மூன்று முக்கிய அமைச்சககளைப் பறித்தெடுத்தமையாகும். அவர் என்னதான் காரணங்களைக் கற்பித்தாலும் எமது திட்ட வரைவின் உடனடி எதிர்வினையாகவே இந்தப் பாரதூரமான நடவடிக்கையை எடுத்தார் என்பது இன்று உலகறிந்த உண்மையாகிவிட்டது. சந்திரிகாவின் இத் திடீர்த் தலையீட்டினால் ரணிலின் ஆட்சிபீடம் அதிகாரமிழந்து முடங்கிக் கிடப்பது மட்டுமன்றி சமாதான வழிமுறைக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

எமது இயக்கம் முன்வைத்த இடைக்கால அதிகார சபை, தமிழீழத் தனியரசை உருவாக்கும் நோக்கம் கொண்டதாகவும் தனியரசுக்கான படிக்கற்களைக் கொண்டிருப்பதாகவும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளில் எவ்வித உண்மையும் இல்லை. நாம் தெரிவித்த யோசனைகள் எமது தேசியப் பிரச்சினையின் நிரந்தரத் தீர்வுக்கான இறுதித் திட்டமன்று. எமது திட்ட வரைவு ஓர் இடைக்கால ஒழுங்கு பற்றியது. நாம் பரிந்துரைத்த நிர்வாக சபை கணிசமான தன்னாட்சி அதிகாரங்களைக் கொண்டதென்பது உண்மை. உருப்படியான நிர்வாக அதிகாரங்கள் இல்லாமற் போரினாற் பாதிக்கப்பட்ட பல லட்சம் மக்களுக்கு மறுவாழ்வளிக்கும் பாரிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதும் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதும் சாத்தியமில்லை. அத்துடன் சட்டம் - ஒழுங்கு, நீதி நிர்வாகம், நிதி ஒதுக்கீடுகள், காணிப் பகிர்வுகள் போன்ற பிராந்திய நிர்வாகத்தையும் செம்மையாகச் செயற்படுத்த முடியாது. இங்கு இன்னொரு முக்கிய விடயத்தைக் கவனத்தில் எடுத்துக் கொள்வது அவசியம். அதாவது, வடகிழக்கிலுள்ள பெரும் பகுதி ஏற்கனவே எமது ஆட்சியதிகாரத்தின் கீழ் நேர்த்தியாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றது என்ற யதார்த்த உண்மையையும் நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

வடகிழக்கில் இன்று நிலவும் கொடூரமான யதார்த்தப் புறநிலைகள், தொடரும் இராணுவ ஆக்கிரமிப்பு, ஆயுதப் படைகளின் அனர்த்தங்கள், இயல்புநிலை தோன்றாத அவல நிலை, எமது மக்கள் எதிர்கொள்ளும் அவசர மனிதாபிமானத் தேவைகள் மற்றும் பல வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கும் நீதியான, நியாயமான, உடனடியான பரிகாரம் காணும் நோக்குடனேயே ஓர் உருப்படியான திட்டமாக எமது யோசனைகளை முன் வைத்தோம். இத் திட்டத்தில் முற்போக்கான, புதுமையான, ஆக்கபூர்வமான அம்சங்கள் பலவுண்டு. வடகிழக்கிற் பெரும்பான்மையினராக வாழும் தமிழரும் மற்றும் முஸ்லிம், சிங்கள மக்களும் தமிழீழ மண்ணில் தமது அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார வாழ்வை மேம்படுத்தும் வகையில் தன்னாட்சி அதிகாரங்களைக் கொண்டதாக இத்திட்டம் அமைகிறது. இந்தச் சுயாட்சிக்கான அம்சங்களை மிகைப்படுத்தி, அவற்றைத் தனியரசுக்கான திட்டமாகத் திரிபுபடுத்தி எமது சமாதான முயற்சிக்குக் களங்கம் ஏற்படுத்தச் சில சக்திகள் முனைவது எமக்குக் கவலையைத் தருகிறது. இந்த இடைக்கால அதிகார சபைத் திட்டம் அரசாங்கத்தின் யோசனைகளுக்கு மாற்றீடாக, பேச்சுக்களுக்கு அடிப்படையாக முன்வைக்கப்பட்டதாகும். நேர்மையுடனும், சமாதான வழிமுறையில் உறுதியான பற்றுடனும் நாம் மேற்கொண்ட இம் முன்முயற்சி தென்னிலங்கையில் ஓர் அரசியற் புயலைக் கிளப்பியிருக்கிறது. சிங்கள இனவாத சக்திகள் எமக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்தியுள்ளன. சிங்கள தேசத்தின் இரு பெரும் கட்சிகளுக்கும் அதன் தலைவர்களுக்கும் மத்தியில் எழுந்த அதிகாரப் போட்டியால் அரச கட்டமைப்பே ஆட்டம் கண்டு நிற்கிறது. காலங்காலமாகத் தமிழருக்கு உரிமையை மறுத்துவரும் சிங்கள இனவாதத்தின் முகமூடி கிழிந்து விட்டதால் அதன் உண்மையான, அசிங்கமான முகத்தை உலகம் காணக்கூடியதாக இருக்கிறது.

முடிவில்லாத ஒரு துன்பியல் நாடகமாகத் தமிழரின் இனப் பிரச்சினை தொடர்கிறது. எமது பிரச்சினைக்குத் தீர்வுகாண ஆளும்கட்சி முயற்சிப்பதும் எதிர்க்கட்சி எதிர்ப்பதும் பின்பு எதிர்க்கட்சி ஆளும் கட்சியாக மாறி மீண்டும் அதே முயற்சியும் அதே எதிர்ப்புமாக இந்தச் சிங்கள அரசியல் வரலாற்று நாடகம் தொடர்ச்சியாக ஒரே பாணியிற் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக மேடையேறி வருகிறது. இலங்கையில் மாறிமாறி ஆட்சிபீடம் ஏறும் இரு பெரும் சிங்கள அரசியற் கட்சிகளுமே தமிழர்களுக்கு விரோதமான இந்த விபரீத நாடகத்தின் இயக்குனர்கள். இந்த இனவாத நாடகத்தின் கதாநாயகர்கள் காலத்திற்குக்காலம் மாறியபோதும் கதையின் கருப்பொருள் மாறவேயில்லை. தற்போது கொழும்பில் உருவாகியிருக்கும் அரசியல் நெருக்கடியும் இந்த அபத்த நாடகத்தின் அப்பட்டமான வெளிப்பாடுதான்.

தமிழர்களைப் பகடைக் காய்களாகப் பாவித்து ஆடப்படும் இந்த சதுரங்க விளையாட்டின் எதிர்விளைவாக எத்தனையோ சமரச முயற்சிகள் பாழடிக்கப்பட்டன. எத்தனையோ பேச்சுவார்த்தைகள் முறிந்து போயின. எத்தனையோ உடன்பாடுகள் கிழித்தெறியப்பட்டன. எத்தனையோ ஒப்பந்தங்கள் செயலிழந்து செத்துப் போயின. இதனால் தமிழரின் பிரச்சினை தீர்வின்றித் தொடர்கிறது. காலத்தால் மோசமாகித் தமிழரின் அவல வாழ்க்கை தொடர்கிறது.

சிங்களப் பேரினவாதத்தின் சிலந்தி வலைக்குட் சிக்கித் தமிழரின் வாழ்வும் வளமும் சிதைந்து போவதை நாம் இனியும் அனுமதிக்க முடியாது. வன்முறையைத் துறந்து, மென்முறைப் பாதையைத் தழுவி சமரசத்திற்கும் சமாதான முன்னெடுப்புகளுக்கும் எம்மால் முடிந்தளவு நாம் முயற்சித்து வருகின்றோம். இதனை உலக நாடுகளனைத்தும் நன்கறியும். ஆனால், சிங்கள இனவாத ஆளும் வர்க்கம் தொடர்ந்தும் எமது மக்களின் உரிமைகளை மறுத்து, சமரசத் தீர்வுகளை எதிர்த்து, ஒடுக்குமுறையைத் தொடருமானால் எமது மக்களுக்கு உரித்தான சுயநிர்ணய உரிமையின் கீழ் நாம் பிரிந்து சென்று தனியரசைக் கட்டி எழுப்புவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இப்படியான இறுதி மார்க்கத்திற்குத் தமிழர்களைத் தள்ளிவிடும் புறநிலையை உருவாக்கிவிடவேண்டாமென நாம் சிங்கள அரசியல் தலைமைகளுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

ஒடுக்குமுறையின் கொடுமைகளுக்கு ஆளாகி, இலட்சியத்தால் ஒன்றுபட்ட மக்களை எந்தவொரு சக்தியாலும் அசைத்துவிட முடியாது. இந்த உண்மையை இன்றைய புனித நாளில், தமிழீழத்திலும் உலகெங்கும் எமது தியாகிகளை நினைவுகூரும் இந் நன் நாளில், எமது இதயங்களிற் பதித்து, விடுதலை என்ற எமது சத்திய இலட்சியத்தில் நாம் உறுதி கொள்வோமாக.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"